

வளை ஓசை

நாதம் 3

2013

பிரதேச கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைஒளி" விருது பெறும் சான்றோர்களை வாழ்த்துவதுடன்
வளை ஓசை நூல் வெளியீடு சிறப்பாக இடம்பெற வாழ்த்தும்

Muththumari

Civil Engineering Contractors

Regd No: KN/393/23.08.2005

கட்டட ஒப்பந்தகாரரும்
கட்டடப் பொருள் விநியோகஸ்தர்களும்



தொடர்புகளுக்கு:

021 228 56 96, 077 990 36 26

கண்ணகிநகர், புன்னைநீராவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்...

தமிழ்த்தாய் வாழ்த்து IX

பிரதேச கலாசார பேரவை கீதம் X

மலர்க் குழு விபரம் XI

ஆசிச்செய்திகள்:

1. அருள்மிகு நாகதம்பிரான் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி XII

2. பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி XIII

3. ஊரெல்லாம் கூடி அழகுசேர்க்கும் கண்டாவளை கலாசார விழா XIV

வாழ்த்துச் செய்திகள்:

1. கவினுற ஓங்குக! கண்டாவளை;அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி XV

2. மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி XVI

கலைகள் ஓங்குக! கண்டாவளையில் XVII

வரலாற்று முக்கியத்துவங்களையும் பழமையின் பொக்கிஷங்களையும்
கொண்டுள்ள கண்டாவளை பிரதேசம் பற்றிய ஓர் அறிமுகம் 1-7

கலாசார விழா (வாழ்த்துப்பா) 8-9

மொழிவிருத்தியும் மொழிஆசிரியர் அணுகுமுறையும் 10-13

வளமான வாழ்வு பிறக்கட்டும்! 14

விவாகரத்து தொடர்பான சட்டவியல் நோக்கு 15-18

குடும்பம் ஒரு கோவில் 19

அதிசய மாதுளங்கனி (நாட்டுப்புற சிறுகதை) 20-22

நம் தமிழைக்காப்போம்! (கவிதை) 23

தமிழறிஞர் வரலாறு (பாடல்) 24

கனவுகளின் மீள்வருகை..... தாமரைச்செல்வி 25-29

ஒரு துண்டுக்காணி 30-34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சமூதாட்டியும் கோடரிக்கஞ்சியும் 35
அருள் மிகு பரந்தன் சித்திவிநாயகர் வரலாறு 36-37
பண்பாட்டு மொழிகள் 38
கலைவாழ வழிவகுத்த கண்டாவளை 39-41
மனமாற்றம் 42-44
சிந்தித்தால் என்ன (கவிதை) 45
வீடு (சிறுகதை) 46-49
பரந்தன் இந்துமகாவித்தியாலய வரலாறு 50-51
பெண்கள் அபிவிருத்தியில் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்களின் பங்கு 52-53
உழைப்பு..... 54
எண்ணங்கள் மேம்பட வேண்டும் 55-57
தூய பத்தாம் பத்திநாதர் தேவாலயம், கல்மடுநகர் 58
இந்த அவலங்கள் என்று தீரும் எம்மண்ணில் 59
இன்றைய மனிதனும் சமூகமும் 60-61
பாடசாலையில் சமய விழுமியங்களை வளர்த்தல் 62-64
பருவத்தே பயிர செய்! 65-66
தொலைந்த என் பிஞ்சுக் கால்தடங்கள் 67
தண்ணீரால் நனையுமா கல்லாறு 68-69
கலைஒளி விருதுபெறும் சான்றோர்கள் விபரம் 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச கலாசார பேரவைக் கீதம்

பல்லவி

வளம் கொழிக்கும் கண்டா வளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்

(வளம்)

அனுபல்லவி

உளம் களிக்கும் கூத்துக்கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்

(வளம்)

சரணாங்கள்

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்!
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்!
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்!
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்!

(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்!
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்!

(வளம்)

"சோ.ப"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்க்குழு

திரு.த.முகுந்தன்,
கலாசாரபேரவையின் தலைவரும்.
பிரதேச செயலாளரும்,
கண்டாவளை.

திரு.த.அமலதாஸ்
கலாசார பேரவையின் செயலாளரும்.
கலாசார உத்தியோகத்தரும்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

திரு.பூ.ராஜ்வினோத்,
உதவி திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

திரு.சி.குகதாசன்,
கணக்காளர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

திரு.சு.ஜெயானந்தராசா,
சமூக சேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

திரு.தி.பிரபாகரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

செல்வி.வே.சுபிதா,
கலாசார பேரவை உறுப்பினர்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளைப் பிரதேசத்தின் சிறப்பு அம்சமாக கலை, கலாசாரப், பண்பாடுகள் பிரதிபலிக்கின்றன. அவ்வாறான சிறப்பு அம்சங்களைத் தாங்கி பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையினரின் ஏற்பாட்டில் இவ் வருடம் வளை ஓசை மலர் வெளிவருகின்றது. இவ்வாறான மலருக்கு எனது ஆசியை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இம் மலரானது இவ்வருடம் தனது 3 ஆவது ஆண்டு மலராக "வளை ஓசை (நாதம் 03)" ஆக ஓங்கி ஒலிக்கின்றது. இவ்வாறான கலை கலாசார விழுமியங்களைத் தாங்கி வெளிவரும் இந்நூல்களை அனைவரும் பெற்று கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை நெறிமுறை தவறாது பின்பற்றி பயன்பெற வேண்டும்மெனக் கேட்டுக் கொண்டு, தொடர்ந்து இம் மலரை வெளியிட்டு வரும் கலாசாரப் பேரவையின் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும், இம்மலர் சிறக்க ஆக்கங்களை வழங்கிய ஒவ்வோர் பிரதேச வாழ் கலைஞர்களுக்கும், இம் மலர் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறவும் கரைச்சி புளியம்பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் திருவருள் துணை கொண்டு என்நல்லாசிகளை வழங்குகின்றேன்.

சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள்,
நாகதம்பிரான் ஆலயம்,
புளியம்பொக்கணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்கு தந்தையின் ஆசிச்செய்தி

வண்டாவளை பிரதேசத்தின் வரலாற்றுமரபுகள். வாழ்வியல். பண்பாடு போன்ற மிகவும் முக்கியமான விடயங்களை தன்னகத்தே தாங்கித் தனது மூன்றாவது பிரவசத்தை கொடுக்கும். 'வளைஓசை -நாதம் 03' என்னும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தியை பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் தனித்துவமான அடையாளங்களையும் அதன் பல்வேறுபட்ட சமூகப்பரி மாற்றங்களையும் வெளிக்கொணரும் ஆக்கங்களையும். கட்டுரைகளையும் வெளியிட்டு அப்பிரதேசத்தைப் பற்றி யாவரும் அறியத்தக்கதாக மாற்றவேண்டியது குறிப்பிட்ட சமூகத்தின் மிகப்பெரும் சமூகக் கடமையாகும்.

அசுரவேகத்தில் வளர்ந்துவரும் விஞ்ஞானத்தினாலும் தொழில்நுட்பத்தினாலும் உலகத்தை கைகளுக்குள் குறுக்கிவிட்ட இக்காலத்தில் ஆய்வுகளுக்கும். பெரும்தேடல்களுக்கும் பின்பு வெளிவரும் இச்சஞ்சிகை ஆக்கங்கள் மிகவும் பெறுமதிவாய்ந்தவையாகவும். காத்திர மா னவையாகவும் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

பலரது தொடர்ச்சியான கடின உழைப்பாலும் தியாகத்தாலும். சமூகப்பொறுப்பாலும் வெளிவருகின்ற இந்த சஞ்சிகையை வெறும் எழுத்துகளோடு மட்டும் விட்டுவிடாமல் யாவரும் இதைவாசித்து இப்பிரதேசத்தின் அரிய பெரும் பொக்கிங்களைப்பற்றி அறிய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு. இம்முயற்சியில் ஈடுபட்டு உழைத்து எமக்கு அழகானதும் பெறுமதியும் வாய்ந்த 'வளை ஓசை' என்னும் இக் குழந்தையை பிரசவித்து தந்த சமூகப் பொறுப்புள்ள அனைவருக்கும் இறை ஆசீர்களையும். வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அருட்தந்தை ஆ.அன்ரன் புனிதகுமார்,
பங்குத்தந்தை,
புனித சவேரியார் ஆலயம்,
தர்மபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊரெல்லாம் கூடி அழகு சேர்க்கும் கண்டாவளை கலாசார விழா

வரலாற்று தொன்மை மிக்க கண்டாவளைப் பிரதேசம் கலைச்சிறப்பையும் கொண்டது. இயற்கையோடு இணைந்த வாழ்க்கையும், வாழ்க்கையோடு இணைந்த கலைகளுமாக கண்டாவளை பிரதேச மக்களின் வாழ்வு அமைந்தது.

பிரதானமாக நெல் விவசாயத்தைக் கொண்ட இந்தப் பிரதேச மக்கள் இன்று பல்துறையில் முனைவோராக மாறியுள்ளனர். பூர்வீக கண்டாவளைப் பிரதேசம் விஸ்தீரணமாகி பெரும் பிரதேசமாகியுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இன்று பல்சமூக இணைவுடன் நவீன கலை வெளிப்பாடுகளும் உருவாகத் தொடங்கியுள்ளன. ஒரு பூர்வீக வாழிடத்தில் இத்தகைய பண்பு மலர்ச்சி வெளிப்பாடு கொள்வது மகிழ்ச்சியளிப்பதாகும்.

கண்டாவளைப் பிரதேசத்தின் கலைப் பாரம்பரியம் மற்றும் கலை இலக்கிய வெளிப்பாட்டு நிகழ்கை என்பன இன்று முக்கிய கவனத்திற்குரியன. ஆண்டுதோறும் பிரதேச செயலகத்தி னால் முன்னெடுக்கப்படும். கலாசார விழா இந்த பிரதேசத்தின் கலை மற்றும் இலக்கிய வெளிப்பாட்டிற்கு பெரும் பங்களிப்பை வழங்குகிறது. இந்த விழாவை முன்னெடுத்துவரும் பிரதேச செயலர் திரு.த.முகுந்தன் அவர்கள் இந்தவகையில் ஆற்றிவரும் பங்களிப்பு மிகுந்த பாராட்டிற்குரியது. கூடவே கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலைஞர்களும் இணைந்து வெளிப்படுத்தி வரும் பங்களிப்பு மகிழ்ச்சியானது.

பிரதேச கலாசார விழாவை ஊரெல்லாம் கூடி சிறப்பிக்கும் வேளை பேரழகுடையது. இந்த நிகழ்வு சிறக்க எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

நன்றி

கௌரவ முருகேசு சந்திரகுமார்,
பாராளுமன்ற உறுப்பினரும்,
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவினுற ஓங்குக!
கண்டாவளை

கலைவளம்,நீர்வளம்,நிலவளம் நிறைந்த கண்டாவளையின் பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் "வளை ஓசை", நாதம் - 03 இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசம் சிறப்பான பண்பாட்டு அடையாளத்தைக் கொண்ட ஓர் தனித்துவம்மிக்க ஆதிக்குடி மக்களையும். விவசாய நோக்குடன் குடியேற்றப்பட்ட விவசாயப் பெருமக்களையும் தன்னகத்தே கொண்டு கலைகளில் ஓங்கி விளங்கும் பூமியாகும். தமிழர்தம் வாழ்வையும் அவர்களது கலை கலாசார பண்பாட்டு அம்சங்களையும் வெளிக்கொணரும் வகையில் ஆண்டு தோறும் கண்டாவளை பிரதேச கலாசார பேரவையானது கலாசார விழாவினையும். வளை ஓசை எனும் ஆண்டிதழையும் வெளியிட்டு வருவது எனக்கு மிக்க மகிழ்ச்சியை தருகின்றது. எம் தேசம் அபிவிருத்தியை நோக்கி வேகமாக முன்னேறிவருகின்ற இவ்வேளையில், பொருளாதார அபிவிருத்தி மட்டுமல்லாது கலாசார அபிவிருத்தியையும் ஒருங்கே எய்துவதற்காக இத்தகைய சமுகப்பணிகள் முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

அந்தவகையில் கடந்த ஆண்டுகளைப்போன்று இவ்வாண்டும் கண்டாவளை பிரதேச கலாசாரப் பேரவையானது கலாசார விழாவினையும். வளை ஓசை நாதம் - 03 இனையும் வெளியிட்டு வைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. தமிழர்களின் கலையையும் மொழியையும் பண்பாட்டையும் பறைசாற்றிநிற்கும் இந்நூல் கண்டாவளையின் சிறப்பு அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் என்பது மட்டும் அல்லாமல், கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றின் ஓர் காலப்பொக்கிசமாகவும் பேணப்படும், என நான் வெகுவாக நம்புகின்றேன். கலாசார விழாவிற்கும் வளை ஓசை நாதம் - 03 இற்கும் உழைத்த அனைவருக்கும் நன்றிகள். இன்னும் பல ஆண்டுகள் வளை ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்.!

திருமதி றூபவதி கேதீஸ்வரன்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச் செய்தி

தமிழ்மணித்திருநாட்டில் வடபகுதியில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பிரதேசம் மக்களின் மரபுகள், வாழ்வியல், பண்பாடு போன்றவற்றை உள்ளடக்கிய மரபுரிமை நகரமாக விளங்குகின்றது. யுத்தத்தினால் சிதைவடைந்த கண்டாவளைப் பிரதேசத்தை மரபுரிமை பிரதேசமாக கட்டியெழுப்பவேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். அவ்வாறான பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கும் வகையிலான ஆக்கங்களை உள்ளடக்கி வளை ஓசை எனும் நூலினை கண்டாவளை கலாசார பேரவை வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கலாசார அம்சங்களை வளர்ப்பதில் கலாசார பேரவை பெரும் பங்காற்றுகின்றது. வரலாறு, மரபுகள், வாழ்வியல்,பண்பாடு என்பவற்றை உள்ளடக்கி ஆவணப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். கண்டாவளை கலாசார பேரவை இன்றைய இளம் தலைமுறையினரிடையே மறைந்து வரும் கலை, கலாசார அம்சங்களை வளர்ப்பதில் முன்னின்று செயற்படுவதுடன் ஆண்டுதோறும் கலாசார விழாவினை நடாத்தி வளை ஓசை எனும் சஞ்சிகையினை வெளியிடுவது வரவேற்கத்தக்கதாகும்.

கண்டாவளை பிரதேசத்தில் பொதிந்தும், செறிந்தும் உள்ள பண்பாட்டு விழுமியங்களை இனங்கண்டு தொகுத்து நூலாக வெளியிடுவது காத்திரமான செயற்பாடாகும். கலாசார பேரவையின் செயற்பாடுகள் மேன்மேலும் வளர்ச்சியடையவும், கலாசார விழா சிறப்புற நடைபெறவும், வளை ஓசை ஆண்டிதழ் சிறப்புற வெளிவரவும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ.ஸ்ரீநிவாஸன்,
மேலதிக அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைகள் ஓங்குக!
கண்டாவளையில்....

எமது பிரதேசத்தின் கலை வெளிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வளை ஓசை நாதம் மூன்றோடு உங்களை சந்திப்பதில் என்மனம் பூரிப்படைகிறது. கண்டாவளையின் கலைகளின் இருப்பை வெளிக்கொணரும் வகையில் வருடாந்தம் எமது கலாசாரப் பேரவை வளை ஓசையை ஒலிக்கச் செய்கிறது. அந்நாதம் தமிழர் தம் இருப்பையும் பண்பாட்டு பெறுமானத்தையும் உலகறியச் செய்யும் எனும் நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேற்பட்ட இலக்கியச் செழுமை எம்மொழிக்கு உண்டு. செம்மொழியாகிய தமிழ்மொழி இன்று உலகெலாம் புகழ்மணம் பரப்பிவருவது கண்கூடு. ஆனாலும் எம்பண்பாட்டில், கலாசார அடையாளத்தில், கலைகளை பேணும் பாங்கில் எம் இனம் காலத்துக்குக் காலம் பலமாற்றங்களையும் உள்வாங்கி நிற்கிறது. ஆயினும் எம்வாழ்வும் வளமும் மங்காப்புகழோடு இன்னும் பல நூற்றாண்டுகள் வாழ வேண்டுமாயின் அதன் தன்மை பிறழ்வு அடையாதவாறு அதனை பேணிக் காப்பது எம்கடமை. அவ்வகையில் கண்டாவளை பிரதேச கலாசார பேரவை முன்னெடுக்கும் கலாசார விழாவும் வளை ஓசையும் பண்டைத்தமிழர்களின் பாரம்பரியங்களை இந்தத் தலைமுறைக்கு ஊடுகடத்தும் பாலமாக விளங்குகின்றது. என எண்ணுகின்றேன். எம்மூரின் வாழ்நிலை, பண்பாட்டுப் பெறுமானம், பாரம்பரிய அடையாளம், கலைவெளிப்பாடு, ஆக்க இலக்கிய திறன், வரலாற்று தொன்மை எனும் பல்வகை ஆக்கக்கூறுகளை இந்நூல் தன்னகத்தே தாங்கி நிற்கின்றது. எம் இனத்தின் இருப்பின் ஊற்றுக்காலாய் உங்கள் கரங்களில் தவழ்கிறது. இந்நூலாக்கத்திற்கு உழைத்த உங்கள் அனைவருக்கும் என் நன்றிகள்.

த.முகுந்தன்,
பிரதேச செயலாளரும்,
கலாசார பேரவை தலைவரும்,
பிரதேச செயலகம், கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரலாற்று முக்கியத்துவங்களையும் பழமையின் பொக்கிஷங்களையும் கொண்டுள்ள கண்டாவளை பிரதேசம் பற்றிய ஓர் அறிமுகம்"

த.அமலதாஸ்,
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளடங்குகின்ற கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளுள் நிர்வாக அலகு ரீதியாக 16 கிராம சேவகர் பிரிவுகளையும் மக்கட் செறிவில் இரண்டாவது இடத்தையும் இலங்கைத்தீவின் பிரதான (ஏ) தர வீதிகளில் "ஏ9", ஏ35" ஆகிய இரு வீதிகள் வந்து இணையும் பிரதான "பரந்தன் சந்திக் குடியிருப்பினை" மையமாகக் கொண்டதும் கிளிநொச்சியின் வடகிழக்கு பரந்த நிலப்பரப்பில் விரிந்து கிடக்கும் பிரதேசமே கண்டாவளை பிரதேச செயலர் பிரிவாகும். இப் பிரதேசமானது பூர்வீக கிராமங்கள், பண்டைய போக்குவரத்து மார்க்கங்கள், பாலங்கள், அந்நியர் ஆட்சிக்கால சிதைவுகள், பண்டைய வாழ்வியல் முறைமைகளை வெளிப்படுத்தும் அடையாள சிதைவுகள், தொல்லியல் சார் எச்சங்கள், ஆன்மீக தொன்மங்கள், சுற்றுலாசார் முக்கியத்துவப்பிரதேசங்கள், கண்ணைக்கவரும் கணக்கற்ற இயற்கை அம்சங்கள் என பல்வேறு அம்சங்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றமையை காணமுடிகின்றது.

இக்கட்டுரையானது மேற்போர்ந்த விடயங்களை பிரதேச வாசிகள், வெளியூர் வாசிகள் இனங்கண்டு கொள்ளவும் தமது பழமைகளையும், தாம் வாழ்பிரதேச வரலாற்று முக்கியத்துவங்களையும் அறியமுற்படுவோருக்கு சுவார்சிய மானதும், அவைபற்றி மேலதிக தேடலுக்கு உந்துதல் தரும் வகையிலும், அழிவுற்றும் மறைந்து போகும் நிலையிலுள்ள அம்சங்கள் சிலவற்றையாவது ஆவணப்படுத்தும் நோக்குடனும் வரையப்படுகிறது.

1. பூர்வீக கிராமங்கள்

1.1. தட்டுவன் கொட்டி:

கிளிநொச்சி மாவட்டத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய பூர்வீகக் கிராமங்களில் ஒன்றே இதுவாகும். இக் கிராமம் யாழ் குடாவினை ஆனையிறவு கடநீரேரியின் தெற்குபப்பக்கமாக ஆனையிறவுக்கு அடுத்து உள்ளது. இங்கு வாழ் மக்களின் பிரதான தொழில் மீன்பிடி, மற்றும் விவசாயமாகும். பருவகால "இறால் பிடிப்பு" ஊடாக அதிகளவு வருமானத்தை இப்பிரதேச வாசிகள் பெற்றுக்கொள்கின்றனர். இயற்கையான தாழ்நிலப்பிரதேசமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவகால இயற்கை காட்சிகளின் பொக்கிசமாகவும் எதிர்காலத்தில் சுற்றுலாத்துறைசார் அபிவிருத்திகளை முன்னெடுக்கக்கூடிய சாத்தியப்பாடுகளை கொண்ட இடமாகவும். சிறப்புப்பெறுகிறது.

1.2.கண்டாவளை, புளியம்பொக்கணைக் கிராமங்கள்:

வன்னிநிலப்பரப்பில் அந்நியர் ஆட்சிக்காலம் தொட்டேசனச்செறிவுமிகுந்திருந்த பழையகிராமங்களில் இவையும் அடையாளப்படுத்தப்பட்டு முக்கியம் பெறுகின்றன. கண்டாவளைக் கிராமத்தில் 60 மேற்பட்ட சிறிய, பெரும் இந்துவணக்கஸ்தலங்கள் காணப்படுகின்றன. பழமையான விவசாயபாரம்பரியம், பனைசார் உற்பத்தி முற்சிகளுக்கும் பெயர்பெற்று விளங்கியிருந்தமை சிறப்பு. கரவெட்டி, வரணி, மீசாலை, கொடிகாமம், ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களாக இப்பிரதேச வாசிகளின் மூதாதையர்கள் விளங்கியது குறிப்பிடத்தக்கது. விவசாய நோக்குடன் குடியேறி நிலைபெற்ற பழமையான கிராமங்களாக இவை விளங்குகின்றன.

பண்டைய வாழ்வியல், போக்குவரத்து முறைகளை பிரதிபலித்து நிற்கின்ற வகையினதாக இக்கிராமத்தில் (கண்டாவளை) பழமையான சுமைதாங்கி, ஆவுரோஞ்சுகல், குடிநீர்த்தொட்டியுடன் கூடிய துலாக்கிணறு, ஆலயமடம் என்பன ஒருங்கிணைந்த அம்சங்கள் இன்றளவும் எஞ்சிநின்று பழமையான வாழ்வியல் முறைமைகளை எமக்கு பறைசாற்றி நிற்கின்றது.

2. போக்குவரத்து மார்க்கங்கள்

2.1. பழைய கண்டிவீதி:

கண்டாவளைப்பிரதேசத்தவர்களின் மத்தியில் முன்பு பிரபல்யம் பெற்றிருந்த வீதியே இதுவாகும். இது யாழ்ப்பாணத்திலிருந்து பழைய கண்டி அரசதானிக்கு செல்ல இருந்த பாழைய போக்குவரத்து மார்க்கமாகும். இவ் வீதி ஆனையிறவு, தட்டுவன் கொட்டி, ஊரியான், முரசுமோட்டை, வட்டக்கச்சி, வழியாக அந்நியர் ஆட்சிக்காலத்திலிருந்து பிரபல்யம் பெற்று இருக்கின்றது. இவ்வீதியில் உள்ள முரசுமோட்டை எனும் ஊர் காரணப் பெயர் கொண்டே அமைந்திருந்தது. பிரதேச வாசிகளுக்கு கண்டி, யாழ்ப்பாணம், வன்னி இராசதானிகளின் ராஜாக்கள் இக்கிராமத்து சந்தியில் "முரசறைந்து" செய்தி பகிர்ந்த காரணத்தாலே மேற்போந்த காரண இடுகுறி பெயர் நிலைபெற்றதென்பர். தற்காலத்தில் "ஏ9" வீதி பெறும் முக்கியத்துத்துக்கு நிகரான தேவைகளை இவ்வீதி நிறைவு செய்தமை பற்றி தற்கால பிரதேச முதியவர்கள் எடுத்துரைப்பதிலிருந்து கடந்த தலைமுறையினரிடையே இப்பாதை பெற்றிருந்த முக்கியத்துவத்தை அறியலாம்.

2.2. புளுதி (துவரை) ஆற்றுப்பாலம்/ குதிரைப்பாலம்:

கண்டாவளை, புளியம்பொக்கணை கிராமங்களிற்கிடையிலான பிரதான பழைய பாதையிடையே புளுதியாற்றுநீர் ஆனையிறவு கடல்நீரேரியை சென்றடைவதற்கு ஏதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கற்கள், மரங்கள், இரும்புகள் கொண்டு பிரமாண்டமான வேலைப்பாடுகளுடன் கட்டிய இப்பாலத்தின் சிதைவுகள் சில இன்று காணப்படுகின்றன. இது 1939 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேய அதிகாரிகளினால் கட்டப்பட்டதாகவும் இவ்வாறான பாலங்கள் கல்லாம்பிட்டி, வட்டக்கச்சி போன்ற இடங்களிலும் அமைந்திருந்ததாகவும் கண்டாவளை வரலாறு எனும் கண்டாவளை "மகாவித்தியாலய 100வது ஆண்டு சிறப்பு மலரில்" குறிப்பிடப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. இவ்வீதியானது மீசாலையிலிருந்து கண்டாவளையூடாக புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திற்கு பண்டம் எடுத்துவரும் பிரதான வண்டிற்பாதையாக உள்ளமையிலிருந்து பண்டையகாலத்தில் இப்பாதை இரு கிராமங்களுக்கிடையிலான பிரதான போக்குவரத்து மார்க்கமாகவும், இப்பாலம் மாரிகாலத்தில் பிரதான போக்குவரத்துக்கு உதவியாகவும் விளங்கியிருந்தமை கண் கூடு.

3. தேசிய மரபுரிமை சொத்துக்கள்:

எமது பிரதேசத்தில் தேசிய மரபுரிமைச் சொத்துக்களாக தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டவை தொடர்பில் எவையும் இனங்காண முடியவில்லை. எனினும் பின்வரும் ஓட்டுத்தொழிற்சாலை அத்தகைய முக்கியத்துவம் பெறும் ஒன்றாக அமைந்துள்ளது எனலாம்.

3.1. ஓட்டுத் தொழிற்சாலையின் புகைபோக்கி கோபுரம்:

எமது கண்டாவளைபிரதேச செயலர் பிரிவின் பெரியகுளம் கிராமசேவகர் பிரிவில் வெளிக்கண்டல் சந்தியின் தெற்குப்புறத்தே ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட "JANA BRICK" எனும் பெயர் பொறிக்கப்பட்டு இயங்கிவந்த ஓட்டுத்தொழிற்சாலையின் புகைபோக்கிக் கோபுரம் மிகவும் நூதனமானதும் அரும்பொருட்களில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்படக்கூடியதாகவும் எதிர்கால சந்ததி அறியும் பொருட்டு பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

4. ஆன்மீக தொன்மங்கள் (வரலாற்று ஆலயங்கள்)

4.1. புளியம்பொக்கணை அருள்மிகு நாகதம்பிரான் ஆலயம்:

கிளிநொச்சி மாவட்டம் மட்டுமன்றி தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கும் போற்றி பேசப்படும் புதுமை மிகு ஆலயமே இதுவாகும். கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் புளியம்பொக்கணை கிராமசேவகர் பிரிவில் "ஏ 35 வீதியின்" (முல்லை - பரந்தன்) புளியம்பொக்கணை சந்தியில் இருந்து வடக்கே 5கீலோ மீற்றர் தூரத்திலமைந்த இவ்வாலயம் சுமார் 400 வருட பழமைமிக்கதும் மனித பெண்ணின் வயிற்றில் குழந்தையாக பிறந்த நாகபாம்பு ஒன்றினை தம்பிரான் (கடவுளாக) ஆக வழிபட்டுவரும் சந்ததியினரால் போற்றி பராமரிக்கபட்டுவருகிறது. இங்கு நிகழும் உற்சவங்களில் பங்குனி உத்தர விடே பெரும் பொங்கல் நிகழ்வுகள் பிரதேசத்திற்கே உரித்தான தனித்துவம் மிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு முறையாகும். இவை பற்றிய தனி ஆய்வுகள் மேலும் விரிவுபடுத்தும் போது ஆச்சரியப்படத்தக்கதான அதிசய உண்மை கள் இக்கிராமம் தழுவியதாக வெளிப்படலாம். என நம்பலாம்.

4.2. கண்ணகி அம்மன் ஆலயங்கள்:

வன்னியெங்கும் சிறப்புப்பெற்ற சிலப்பதி காரம் போற்றும் கண்ணகிவழிபாடு கண்டாவளைப்பிரதேசத்திலும் காலம் காலமாக சிறப்பு பெற்று வருகின்றமை தட்டுவன் கொட்டி கண்ணகையம்மன். கொம்படி கண்ணகியம்மன், மல்லிகைத்தீவு கண்ணகியம்மன் கலவெட்டித்திடல் ஆதி கண்ணகியம்மன். கலவெட்டித்திடல் புதிய கண்ணகியம்மன். கண்ணகிநகர் கண்ணகியம்மன் ஆகிய ஆலயங்கள் அமைந்து சிறப்புப்பெற்றமையை அறியலாம். இவற்றின் வழிவந்த "வழந்துகட்டல்", மடைபரவல், பலியிடல் (ஆதிகண்ணகியம்மன்) நாயக பானை பொங்கலிடல் போன்ற நிகழ்வுகள் அதிகம் வைகாசி மாதத்தில் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. இங்குள்ள தட்டுவன்கொட்டி கண்ணகியம்மன் ஆலயம், மற்றும் கலவெட்டித்திடல் ஆதிகண்ணகியம்மன் ஆலயம் என்பன ஊரவரிடையே புதுமை மிக்க தெய்வங்களாக பழைமையான காலம் முதற் போற்றப்பட்டுவருவதுடன் இவை கிராமத்தில் ஒருவித தாக்கத்தை ஏற்படுத்தும் எனும் நம்பிக்கையையும் பெற்று இருப்பதை உணரமுடிகின்றது. இத்தகு ஆன்மீகத் தொன்மங் கள் கிராமங்களில் கட்டிறுக்கம்மிக்க சமய ஒழுக்கங்களின் வழி ஆன்மீக வாழ்வியலை செம்மைப்படுத்துவதை இன்றைய காலத்திலும் அவதானிக்கலாம்.

5. சரணாலயங்கள்:

5.1. சுண்டிக்குளம் பறவைகள் பாதுகாப்புஸ்தானம்

இச்சரணாலய பகுதியானது யாழ் மாவட் டத்தின் மருதங்கேணி மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக எல்லைகுள் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதி யாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தினை நாடி வரும் வெளிநாட்டு பறவைகளுக்கும் சுதேச பறவையினங்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் ஆங்கிலேய அதிகாரிகளினால் அக்காலத்தில் இனங்காணப்பட்டு பாதுகாப்புஸ்தான மாக பிரகடனப்படுத்தப்பட்டதாகும். "இங்கே சுடப்படாது" எனும் மும்மொழி அறிவுறுத்தல் களும் சீமேந்து கற்பலகைகளில் பொறிக்கப்பட்டு இப்பிரதேச எல்லைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளமை சிறப்பு" தற்காலத்தில் இங்கு பருவகாலங்களில் வெளிநாட்டுப்பறவைகளான சைப்பிரஸ் கொக்குகளின் வருகை கண்களுக்கு விருந்தளிப்பனவாக உள்ளன.

5.2. இரசாயன குளப்பிரதேசம்:

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் "ஏ9" வீதியின் அருகே ஆனையிறவுக்கு தெற்கே அமைந்துள்ள உமையாள்புரம் கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட இச்சிறு பரந்த குளபிரதேசத்துள் நீரேந்து காலத்தில் (மாரி) உள்ளமரங்கள் யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவகால சுதேசபறவையினங்களின் புகலிடமாக திகழ்வது சிறப்பாகும். பரந்தன் இரசாயன தொழிற்சாலையின் எதிர்புறமாக (கிழக்கே) அமைந்த காரணம் தழுவி இக்குளம் இரசாயனக்குளம் எனும் பெயருடன் நிலைபெற்றுவிட்டது. இதுவும் பிரதேசத்திற்கு உரியசரணாலயம் எனும் அந்தஸ்தை எதிர்காலத்தில் பெறும் வாய்ப்பை கொண்டுள்ளதாகும்.

6. சுற்றுலா மையங்கள்

6.1. ஆனையிறவு

யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சியை புவியியல் ரீதியாக பிரிக்கும் பிரதான நீரேரி, சுற்றுலாத்துறையினரினால் பிரகடனப்படுத்தப்பட்டவாடி வீடு, உப்பு உற்பத்தி தொழிற்சாலை, இயற்கை காட்சிகள் நிறைபிரதேசம் என பல்வேறு முக்கியத்துவங்களை பெறும் இவ்விடம் சுற்றுலாப் பயனிகளைக் கவரும் சிறந்த இடமா கவும் திகழ்கின்றது. பண்டைய காலத்தில் வன்னிமைகளிலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்திற்கு யானைகளை அழைத்துச் சென்று அவைகடக்கும் எல்லைகளாக இப்பகுதி விளங்கியமையால் ஆனையிறவு ஆனை+கடவு (Elephant Pass) எனும் காரண இடுகுறிப்பெயர் பெற்று இன்று நிலை பெற்றுள்ளது.

6.2. சுண்டிக்குளம் கடற்கரை & பேய்ப்பாறைப்பிட்டி பிரதேசம்:

கண்டாவளை பிரதேச செயலகபிரிவின் இயற்கை கடற்கரைகளாக கல்லாற்றுப் பிரதேசத்திற்கு அடுத்துள்ள சுண்டிக்குள கடற்கரை, மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுடன் இணைந்ததான "பேய்ப்பாறைப்பிட்டி" ஆகிய கடற்கரை பிரதேசங்களை குறிப்பிட முடிகின்றது. சிறந்த மீன்பிடி துறையாகவும் மணல் பரந்த கடற்கரைகளாகவும் சூரிய குளியல்களுக்கு ஏற்ற இடங்களாகவும் தென்னந் தோப்புக்கள் நிறைந்தும் இவை விளங்குவதால் துறைசார் அபிவிருத்திகள் மேலும் கிடைக்கின்ற போது பிரதேசத்திற்கு பொருளாதார அபிவிருத்தியும் இடம் குறித்தான பிரபல்யமும் ஏற்பட வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

6.3. பிரதேசத்தின்நீர்பாசன குளங்கள்:

இப்பிரதேசத்தின் நிர்வாக எல்லைக்குள் கல்மடுக்குளம், பிரமந்தனாறு குளம் ஆகிய இரண்டு நீர்பாசனகுளங்கள் அமைந்துள்ளன. இவை உள்ளூர் , வெளியூர் வாசிகளின் பார்வைக்கும், அவதானிப்புக்கும், பொழுது போக்குக்கும் உரிய இடங்களாக திகழ்கின்றன. முக்கியமாக பிரதேசத்தின் பிரதான விவசாய செய்கைக்குத் தேவையான மூலதாரமான நீரியினை இவ்விரு குளங்களும் வழங்கி வருகின்றன. எனினும் கிளிநொச்சியின் கரைச்சி பிரதேசத்துள் விளங்கும் இரணைமடுக்குளமும் இப்பிரதேசத்தின் நெற்செய்கைக்கு கனதி யான பங்களிப்பை வழங்கி வருகிறது. 2009 ஆண்டின் நடுப்பகுதியில் உள்ளூர் யுத்த அனர்த்தத்தில் கல்மடுக்குளத்தின் அணைகள் சிதைந்து குளம் உடைந்த போதும் யுத்த முடிவின்பின் 2012 ஆண்டில் முற்றுமுழுதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டு மீண்டும் பயிற்செய்கைக்கான நீர்வளத்தை வளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

7. அகழ்வாய்வுப் பிரதேசங்கள்

7.1. குடாப்பொக்கணை குளச்சூழல்:

இப்பிரதேசம் புளியம்பொக்கணை கிராமசேவகர் பிரிவிலுள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் தெற்கே அமைந்துள்ள சிறு குளப்பகுதியாகும். இதனை அண்மித்த இடங்களில் குள அகலிப்பு வேலைகள், 1989, 1990 காலத்தில் இடம்பெற்றபோது சிறு சிறு பொன்னாலான நாணய மாதிரி வடிவங்களும், சிறு ஆமை உருக்களும் கிடைக்கப்பெற்றன என உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர். இவ்விடத்தையண்டிய பகுதிகளிலேயே பழமையான சிவ,நாகவழிபாடு தற்காலம்வரை நிலைபெற்றுவருவதாலும் செங்கல், சிவத்தகழிகள் செய்ததற்கான சிதைவுகள் ஆங்காங்கே காணப்படுவதாலும், இங்கே சிவத்தகழிகள் செய்யும் வர்க்கத்தினர் (வனைஞர்) முன்னர் வாழ்ந்து இருக்கலாம் எனவும் ஊகங்கள் நிலவுதால் வரலாற்று ஆய்வுகள் இங்கு மேற்கொள்ளப்படுமிடத்து பிரதேசம்சார் தொல்லியல் உண்மைகள் வெளிப்பட வாய்ப்புக்கள் உண்டு.

இதே போன்றே பிரமந்தனாறுக்குளம் மற்றும் அதனுடன் இணைந்த விநாயகர் ஆலயத்தின் தெற்கு பகுதியிலுள்ள நிலப்பரப்பானது பரந்த செங்கற்படுக்கைகள் பரவிக்காணப்படுகின்றமையும் தொல்லியல் சார் சிதைவுகளாக இருக்கலாமோ என நோக்கத் தோன்றுகின்றது.

8. வரலாற்று தொழிற்சாலைகள்:

கண்டாவளை பிரதேசத்தில் வெளிக்கண்டல் ஓட்டுத்தொழிற்சாலை (தனியார்) மற்றும் பரந்தன் இரசாயன தொழிற்சாலை (அரசு) ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலை (அரசு) ஆகிய மூன்றும் புகழ் பூத்த தொழிற்சாலைகளாக விளங்கியிருந்தமை சிறப்பாகும். ஓட்டுத்தொழிற்சாலை பின்னர் கைவிடப்பட்டும், பரந்தன் இரசாயன தொழிற்சாலை யுத்த காலத்துடன் 1990களின் பின்னர் செயலிழந்தும் ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலை தற்போது புனரமைப்பு பணிகள் தொடங்கியும் உள்ளன. ஆயினும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் தனி அடையாள சின்னமாக சுமார் 100 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் பரந்தன் இரசாயன தொழிற்சாலை அமைந்து விளங்கி பல்லாயிரக்கணக்கானவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்கியது.

இது தற்போது சில இடிபாடுகளுடன் எஞ்சி வரலாறு கூறும் தொழிற்சாலையாக மாறியுள்ளமை விடே கவனத்திற்குரியதாகவே காணப்படுகின்றது.

முடிவாக கண்டாவளை பிரதேசமானது பல்வேறு வரலாற்று, தொல்லியல், ஆன்மீக தொன்மங்கள், சுற்றுலா அம்சங்கள், இயற்கை வனப்புக்கள் என்பவற்றை கொண்டு விளங்கி வடமாகாணத்தின் தனித்துவம் மிக்க பிரதேசங்களில் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை அடையாளப்படுத்தி நிற்பதையே மேற்போந்த விடயங்களை ஆராய்கிற போது உணர்ந்துகொள்ள முடிகிறது. ஆகவே இவற்றிற்கான துறைசார் அபிவிருத்திக்கான சாதகநிலைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகிறபோது அவை பாதுகாக்கப்பட்டு,

பேண்தகு நிலையில் சந்ததிக் கையளிப்புக்கும் பிரதேச துறைசார் வளர்ச்சிகளுக்கும் துணையாக அமையும் என்பது மறுப்பதற்கில்லை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார விழா

பசுந்தரையான்,
பெரியகுளம்.

தீரு உறையும் பெரியகுள நகரில் மல்கும்
சிறந்த கண்டாவளை பிரதேச செயலக
மருவு கலாசார வருட விழா மலர் வாழ்த்த
மாமுக ஐங்கரன் காப்பு!

அலைகடல் சூழ் இலங்கை மாநகரம் தன்னில்
அனைத்தும் எழில் வள நலன்கள் சிறந்து மேவும்
தலை சிறந்த மாவட்டம் கிளிநொச்சி தன்னில்
தராதரமாம் புராதன நல்வளங்கள் மேவும்
கலை சிறந்த கண்டாவளை பிரதேசகலாசார பெண்ணே!
காசினியில் உனையறியார் யாருமுண்டோ - பல
கலை கற்று நீ பல்கலைக்கழகம் சென்று
பாரினிலே கலாசார விழாக் கொண்டாடி மகிழ்வாய்.

கற்றவளே! கண்டாவளை பிரதேச கலாசார பெண்ணே!
கனவான் 'கிளிநொச்சி' கணவர் சேர்ந்து,
உற்றவராய் உன் மக்கள் பதினாறு பெற்றாய்.
ஊரெல்லாம் மதிக்கும் புராதன சாசனம் கொண்டாய்!
நற்றவராய் கல்வி சமூக அபிவிருத்தி அவர்கு நல்கி,
நாடறிய ஆனந்தமாய் அவர்கள் வாழ
அற்புதமாய் அறிவூட்டி அழகு நல்கி,
ஆனந்தமாய் கலாசார விழா கொண்டாடி மகிழ்வாய்!

நற்பதியாம் புளியம்பொக்கணை தம்பிரானின்
நாடறியும் நல்லருளை உனதாக் கொண்டாய்!
முற்பதியாம் பொறிக்கடவை அம்மனருள் பெற்றாய்.
மூதறிஞர் சன்னியா வைரவர் பழைய அம்மன் அருள் கொண்டாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலக உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள்: திருமதி.மு.நிசாந்தினி. (F.A) திரு.க.சண்முகவிங்கம்.(M.A). திரு.ஆ. ஆனந்தரூபன் (A.O). திரு.பூ.ராஜ்விநோத் (A.D.P). திரு.த.முகுந்தன் (D.S).
(இடம் இருந்து வலம்) திரு.சி. குகதாசன் (Accountant). திருமதி.சி.சிவஜோதி (Chief M.A) . திருமதி ஜெ.சாரதகலா (M.A). திருமதி.ச.உஷா (D.O).
நிற்பவர்கள்: : திரு.மா.ஜெயராஜ் (O.E.S). செல்வி F.A ஜூட்ஸ் சஜித்தா (D.O). திருமதி.சு.நிர்மலா (M.A). செல்வி க.செகுசுடர் (M.A). திருமதி சு.நிதர்சினி (M.A). திருமதி மு.கவிதா (Volunteer). திருமதி.ஜெ.டிலானி (M.A).
(முதல் வரிசை) திருமதி.பி.நிசாந்திகிருஸ்ணா (M.A). செல்வி.இ.தாரணி (D.O) . செல்வி.வி.தேனினி (D.O) திரு. இ. ஸ்ரா. அன்சிலின் பெலின் (D.O) திரு.ஆ.பாலச்சந்திரன் (O.E.S).
நிற்பவர்கள்: திரு.க.இராசகுமார் (D.O). திரு.வே.தங்கநாதன் (O.E.S). திரு.கு.சிறீக்குமார் (O.E.S) . திரு. இ.மதன்குமார் (D.O). திரு.சி.சிவச்செல்வன் (D.O). திரு.மு.விஜயராசா (O.E.S).
(இரண்டாம் வரிசை) திரு.சி.நிலமேகர் (O.E.S). திரு.பொ.சுலக்சனன் (D.O)
சமூகமளிக்காதவர்கள் : திரு.ஞ.குமாரசூரியர் (Driver). செல்வி.ப.விஜயசாந்தி (Volunteer). திரு.த.நிதிசுரன் (Driver). செல்வி.ச.ஜெனித்தா (M.A). திருமதி.த.கலையரசி (M.A) . திரு.இ.யசோதரன் (D.O). திருமதி.பி.விஜயராணி (M.A). திருமதி ச. சிந்துஜா (A.D.R. - Act.)

வெளிக்கள உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள் : திரு.வே.சிவநேசன் (S.O). திரு.ஆ.ஆனந்தரூபன் (A.O). திரு.சு.ஜெயானந்தராசா (S.S.O). திரு.பூ.ராஜ்விநோத் (A.D.P). திரு.த.முகுந்தன் (D.S). திரு.சி.குகதாசன் (Accountant).
(இடம் இருந்து வலம்) திரு.சி.பத்மசிறி (R.D.O). திரு.தி.பிரபாகரன் (D.O). திரு.தே.ஸ்ரீபன்ரஞ்சித் (D.O).
நிற்பவர்கள்: செல்வி.ஞா.வதனரூபி (E.R.P.A) செல்வி.த.பிறின்சிகா. (D.O). செல்வி.ந.கவிதா (W.D.O). திருமதி.ஆ.விஜோஸ்வரி (C.R.P.A). செல்வி.ந.கிருஸ்ணகுமாரி (H.D.O). வி.சுதர்சினி (D.O).
(முதலாம் வரிசை) திருமதி.ராயுட் ஜெயசீலி (D.O). செல்வி ம.றொசாயினி (D.O). திருமதி.சோ.சுகந்தனி (D.O). செல்வி.அனுராதா (Councellor) திருமதி.வி.புஸ்பரதி (Councellor). செல்வி.சி.நிலாஜினி. (D.O) செல்வி ம.பவித்திரா (D.O). திருமதி ச.தவச்செல்வி (Councellor)
2 ஆம் வரிசை: திரு.செ.வீமலகாந்தன் (C.O) திரு.ரா.சிவப்பிரியன் (Volunteer) திரு.க.இலங்கேஸ்வரன் (E.O) . திரு தீ. M. N. அஸ்லம்சஜா (Y.S.O). திரு.சி.சுதர்சன் (D.O) திரு.சி.சிவராஜ் (D.O) திரு.ப.சுரேந்திரன் (D.O) திரு.பொ.சந்திரநாதன் (H.O). திரு.வை.மாதவன் (S.O) , திரு.த.மனோசாந்தன் (T.O), திரு.சி.பிரபாகரன் (S.D.O) திரு.த.அமலதாஸ் (C.O) .
சமூகமளிக்காதவர்கள்: திருமதி.அ.பவதாரணி (C.O) . செல்வி.ஜ.கஜந்தி (F.I). திருமதி.வி. சுரேஸ் (P.O). திருமதி செ.சிந்துஜா (D.O)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பதியாம் தட்டுவன் கொட்டி உமையாள்புர அம்மன்
நாடறியும் முரசுமோட்டை முருகன் அம்மன் அருள் பெற்றாய்!
அற்புத நல் கோணங்குள பெரியகுள ஐங்கரன் அம்மன் அருளினோடு
ஆனந்தமாய் கலாசார விழா கொண்டாடி மகிழ்வாய்.

வளர்ந்துவரு முருகானந்தாக்கல்லூரி அறிவு பெறு
மாபெரிய தர்மபுரம்.குமரபுரம். கண்டாவளை. பிரமந்தனாறு
அளவரிய கலையறிவு பெறு வித்தியாலயங்கள்
அங்கங்கு பதினாறு பிள்ளைகளின் பாடசாலை
தளர்வரிய கலைவளர்த்து அறிவிலோங்கி,
தரணியில் கலையோங்கு பிள்ளைகளாய்,
அளவரிய பெருமை பெற்று அறிவிலோங்கி
ஆனந்தமாய் கலாசார விழா கொண்டாடி மகிழ்வாய்.



புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி விருத்தியும், மொழிஆசிரியர் அணுகுமுறையும்

சி.இளந்திரையன் (ஆசிரியர்),
இல:80, குமரபுரம், பரந்தன்.

மொழி என்பது 'மொழிதல்' என்ற கருத்தில் கொள்ளப்படுகின்றது. மொழி என்பதை ஆங்கில மொழியியலாளர் 'கென்றி சுவீட்' பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்துகின்றார். ''மொழி'' என்பது எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு பேச்சு ஒலிகளைச்சொற்கள் மூலம் ஒன்றிணைத்து செயற்படுத்துவதாகும்''. எண்ணங்களை வெளிப்படுத்த, சொற்கள் மூலம் உருவாக்கப்பட்ட வாக்கியங்கள் துணைபுரிகின்றன''. இவர் கருத்துப்படி, ஒருவர் தமது மனதில் உதிப்பவற்றை மற் றவருக்கு வாய்மொழி மூலமாகவோ, எழுத்துமூலமாகவோ, சைகைமூலமாகவோ வெளிப்படுத்துவதை மொழி எனக்கூறலாம். ஒரு மனிதனின் , சூழல், முதிர்ச்சி, கற்றல் முதலிய காரணிகள் மூலம் மொழி விருத்தி அடைகிறது. இதனால் மொழி ஆசிரியர் ஒருவர் பிள்ளையின் மொழி விருத்திப்பருவங்களை அறிந்து, கற்பித்தல் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுதல் பயனுள்ள அனுபவமாக அமையும்.

ஒவ்வொரு குழந்தையிலும் ஏற்படுகின்ற உடல்வளர்ச்சி, மனவெழுச்சி, உடலியக்கத்தி றன், சமூகத்திறன் விருத்தி முதலியன அக்குழந்தையின் மொழி விருத்தியில் தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக பேச்சுடன் தொடர்பான அவயங்கள் தேவையான முதிர்ச்சியடைந்தவுடன் பிள்ளை பேச ஆரம்பிக்கின்றது. அப்பிள்ளையுடன் வளர்ந்தவர் இடைவினை கொள்வதனால் பிள்ளையின் பேச்சுத்திறன் விருத்தியடைகிறது. எனவே பிள்ளை மைய அணுகுமுறையில் வெற்றியடைவதற்கு மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு, மொழி விருத்தி உளவியலாளர் கூறும் பிள்ளை விருத்திப்பருவங்கள் ஊடாக அணுகுவது மொழிகற்றல் மொழிக் கற்றல் - கற்பித்தலுக்கு துணைபுரியும். அவ்விருத்திப்பருவங்களை தனித்தனியே நோக்குவோம்.

1.சிசுப்பருவ (பிறப்பு முதல் 2 வயது வரை) மொழிவிருத்தியும் அணுகுமுறையும்

குழந்தை பிறக்கும் போதே மொழிக்கு அடிப்படையான ஒலிகளைப் பிறப்பிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கின்றது. "ஒவ்வொரு சிசுவும் ஆரம்பத்திலிருந்தே உணருகின்ற, கற்றுக்கொள்கின்ற, தகவலை ஒழுங்குபடுத்துகின்ற ஓர் உயிராகும்" அந்த வகையில் சிசுப்பருவ மொழிவிருத்தி அழுகையுடன் ஆரம்பிக்கின்றது. பத்து மாதங்களின் பின் ஏனையோரின் பேச்சை பாவனை செய்ய முயலுவர். இந்நிலையில் குழந்தை சொற்களைச் சரியாக உச்சரிக்காது மழலை மொழிபேசும். இது மொழிக்கு முன்னைய விருத்தி நிலையாகும் .இந்நிலை எதிர்கால மொழிவிருத்திக்கு அடிப்படையாக அமையும். எனினும், முதல் வயதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யும் குழந்தை தனிச் சொற்களை முழுமையாக உச்சரிக்கும். இரண்டு வயது நிறைவடையும் போது அதிகமான சொற்களை பேசக் கற்றுக் கொள்ளும். இது முதலாவது மொழிக்கட்டமாகும்.

சிசுப்பருவ மொழிவிருத்தியில் பெற்றோரே ஆசிரியராகச் செயற்பட வேண்டியுள்ளது. பெற்றோர்(குடும்பம்) குழந்தை புரியும்படி தாய்மொழியில் இலகுவான சொற்களை பயன்படுத்தல்.குழந்தை அருகில் அதிக நேரத்தைச் செலவிடுதல். குழந்தைகளின் குறியீடுகளுக்கு மீள வலியுறுத்தல் வழங்குதல் என்பன அவசியமாகும். இப்பருவத்தை "பியாஜே" "புலனியக்கப் பருவம்" என்று குறிப்பிடுவார்.

ஆதலினால் குழந்தையின் செயற்பாடுகளிற்கு தூண்டலை வழங்கும் பொருட்களுடன் இடைவினை கொள்வதற்குப் போதிய சந்தர்ப்பங்களை (முதல்நிலை அனுபவங்களை) வழங்குதல் பெற்றோர், ஆசிரியர், வளர்ந்தோரின் கடமையாகும்.

2.ஆரம்பப் பிள்ளைப்பருவ (2-5/6 வயது) மொழிவிருத்தியும் அணுகுமுறையும்

ஆரம்பப்பிள்ளைப்பருவத்தில் முன்பள்ளியில் நுழையும் இவர்கள் முழு வசனமாக பேசும்திறனை பெற்றுக்கொள்வர். ஐந்து வயது முடியும் போது இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட சொற்களைப் பிள்ளை அறிந்திருக்க முடியும். இப்பருவ பிள்ளைகளிடத்தே உளச்சார்பும்,நுண்மதியும் மொழிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துவது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். கதை கூறும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் காணப்படுவார்கள். தூலசிந்தனைக்கு முற்பட்ட பருவமாதலால் (பியாஜே) முன் எண்ணக்கரு உருவாக்கம் ஆரம்பமாகும். குறிப்பாகக் குறியீடுகளைப் பயன்படுத்தி சிந்தனைகளைச் செயல்களுடன் தொடர்புபடுத்திக் கொள்வார். உதாரணமாக குழந்தை ஒன்றிற்குப்பதிலாகப் பொம்மை ஒன்றினைத் தாலாட்டுதல். இச் செய்கை பின்னர் சைகைகள், குறியீடுகள், சொற்கள் வரை குறியீட்டுப்பாவனை விருத்தி அடைய ஏதுவாகும். இப்பருவத்தில் கற்பனை, ஆராய்வுக்கம், ஆக்கத்திறன் என்பன ஆரம்பிப்பதனைக் காண முடியும்.

ஆரம்ப பிள்ளைப்பருவத்தினரின் மொழி விருத்தியில் முன்பள்ளி ஆசிரியர், பெற்றோர், சகபாடிகள், சகோதர சகோதரிகள் செல்வாக்குச் செலுத்துகின்றனர் .இப்பருவத்தினரின் மொழி விருத்திக்கு மொழி ஆசிரியர் பின்வரும் செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தலாம்.

- காட்சிப் பொருட்களைப் பயன்படுத்தல்
- கவிதையின் ஆரம்பத்தைக்கூறி அதனை முடிக்கும்படி பயிற்சி வழங்குதல்
- விழுமியங்களையும் மனச்சாட்சியையும் விருத்தி செய்யக்கூடிய கதைகளைப் புகட்டுதல்
- நடிப்பு, போலச் செய்தல், முதலியவற்றில் ஈடுபடுத்துதல்
- எண்ணக்கருக்களைப் பெரும்பாலும் பிள்ளையின் அனுபவங்களுடாகத் தொடர்புபடுத்தல்
- பிள்ளைகள் கேட்டல், பார்த்தல், செய்தல் முதலியவற்றை விளக்குவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் பயன்படுத்தும் சொற்களையே பயன்படுத்தல்.

- அன்னைதெரேசா, விவேகானந்தர் போன்ற பெரியார்களது செயற்பாங்குகளைக் கூறுவதனூடாக நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்ற வழிவகுத்தல்.
- விளையாட்டு, ஆடல், பாடல், அபிநயங்கள் ஊடாகக் கற்பித்தல்

3.பிள்ளைப்பருவ (5-12 வயது) மொழி விருத்தியும் அணுகுமுறையும்

பிள்ளைப்பருவத்தினரில் 6-9 வயதிற் கிடையிலான பருவத்தினர் ஆரம்பக்கல்விப் பருவம் என்றும் 9-12 வயதிற் கிடைப்பட்டவர்களை பிள்ளைப்பருவம் அல்லது முன் கட்டிளமைப்பருவம் என்றும் அழைக்கப்படுவர். ஆரம்ப பிள்ளைப்பருவத்தில் நுண்ணறிவு வளர்ச்சி ஏற்படுவதுடன் கற்பனை, தர்க்கரீதியான சிந்தனை, பிரச்சனை தீர்த்தல் முதலியன உளவிருத்தி, மொழி விருத்தி அடிப்படையாக அமைகின்றது. 9-12 வயதாகும் போது பலவற்றையும் அறியும் ஆவல் ஏற்படுவதனால் தகவல் திரட்டுதல், கலைக்களஞ்சியத்தில் தகவலைக் தேடிக்கண்டுபிடித்தல், விஞ்ஞானக் கதைகள் வாசித்தல், முதலியவற்றால் மொழிவிருத்தி வேகமடைகிறது. சிக்கலான இலக்கண விதிகளை விளங்கிக்கொள்ளல், சொற்களை வரையறுக்கவும், கலாசார ரீதியில் மொழியை உபயோகிக்கவும் முயல்வார். பிற மொழிகள் குறித்தும் கவனம் செலுத்துவர். இரண்டாம் மொழி ஒன்றைக்கற்பதில் ஆர்வம் காட்டுவர். இப்பருவத்தை பியாஜே, "தூலசிந்தனைப் பருவம்" என்று குறிப்பிடுவார். அதாவது புலக்காட்சிக்குரிய ஆரம்ப அனுபவங்கள் தூல அனுபவங்களாகும். இப்பருவ மொழிவிருத்திக்கு ஆசிரியர் பின்வரும் செயற்பாடுகளில் கவனம் செலுத்துதல் அவசியம்.

- காட்சிப்பொருட்களின் துணையுடன் விடயங்களை விளக்குதல்.
- கற்பித்தல் சாதனங்களைப் பிள்ளைகள் தொட்டுப் பார்க்க, இயக்கச் சந்தர்ப்பம் அளித்தல்
- நடிபங்குகள், குழுநாடகங்கள் மூலம் விசேட தேவையுள்ள பிள்ளைகளையும் ஏற்றுக் கொள்ளுதல்.
- வானொலி கேட்க, பத்திரிகை வாசிக்க, வழிப்படுத்தல்.
- நீண்ட வசனங்களைப் பேச, எழுத வாய்ப்பளித்தல்.
- எண்ணக்கரு உருவாக்கத்திற்கு சிறுகதை, கவிதை, நாடகம் எழுத வாய்ப்பளித்தல்.
- ஆராயும் ஊக்கத்தையும் வாசிக்கும் பழக்கத்தையும் தூண்டிவிடுதல்.

4.கட்டிளமைப்பருவ (12-20 வயது) மொழி விருத்தியும் அணுகுமுறையும்

பிள்ளைப்பருவத்திலிருந்து முதிர்வுப் பருவத்திற்கு மாறும் பருவம் கட்டிளமைப்பருவமாகும். இப்பருவத்தினர் சிந்திப்பதற்குப் புதியதும் வலிமையானதுமான முறைகளைப் பின்பற்றுவர். இச்சிந்தனைவிருத்தி மொழிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இப்பருவத்தை பியாஜே, "நியமசிந்தனைப்பருவம்" என அழைப்பார். அதாவது தூலசிந்தனையில் இருந்து விடுபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழக்கூடியவற்றை கருத்து நிலையில் சிந்திப்பதை குறிப்பிடுகின்றார். இதனை விஞ்ஞானரீதியான சிந்தனை எனவும் அழைப்பார். இப்பருவத்தில் பிள்ளைகள் சமூகவாழ்க்கையிலும் கருத்துப்பரிமாற்றத்திலும் ஈடுபடுவார். ஆகவே, கருதுகோள்களை அமைத்து சிந்திக்கும் திறன் பெறுகின்றனர். கொள்கைகளை உருவாக்குகின்றனர். கற்பனை அமைப்புக்களை கண்டுபிடித்தல் தமது தீர்ப்புக்களுக்கு தர்க்க ரீதியான நியாயங்களை வெளிப்படுத்தல் போன்ற மொழித்திறன்கள் இப்பருவத்தில் விருத்தியடைகின்றன.

ஆசிரியர் இப்பருவ மாணவர்களின் மொழி விருத்திக்கு பின்வரும் அணுகு முறைகளை மேற்கொள்ளலாம்.

- தர்க்க ரீதியான விஞ்ஞான முறைகளை பயன்படுத்தி பிரச்சினைகளை தீர்க்கச் சந்தர்ப்பம் அளித்தல்.
- கற்பனை ரீதியான முறைகளை பயன்படுத்தி பிரச்சனைகளை தீர்க்கச் சந்தர்ப்பம் அளித்தல்.
- கற்பனை ரீதியான ஆய்விற்கு வாய்ப்பளித்தல், கட்டுரை வரைதல்,
  உதாரணம்: "விலங்குகளும் மனிதனைப் போல் பேசுமானால்"
- தர்க்கம், விவாதம், கலந்துரையாடல், வழக்காடுமன்றம் முதலியவற்றை செயற்படுத்துவதனூடாக கருத்துக்களை பரிமாற்றிக்கொள்வதற்கும் சிந்தனை விரிவுகளுக்கும் உதவுதல்
- கண்டறிமுறை, குழுமுறை, கலந்துரையாடல் செயற்றிட்டம், புலனாய்வு முதலிய கற்பித்தல் முறைகளையும் நுட்பமுறைகளையும் கையாளுதல்.
- மன்றச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல். தலைமை தாங்க வாய்ப்பளித்தல்
- கலைகளில் ஈடுபடவைத்தல் - (நாடகம், உரையாடல், உரைச்சித்திரம்)
- கவிதை, கட்டுரை,குறுநாடகம், சிறுகதை, விமர்சனம் முதலிய ஆக்கமுயற்சிகளில் ஈடுபடுத்தல்.
- சஞ்சிகை,நூலாக்க முயற்சிக்கு உதவுதல்

எனவே, மொழி விருத்தி குழந்தையின் அழுகையில் தொடங்கி வயது முதிர்ச்சிக்கேற்ப விரிவடைந்து செல்கிறது. என்பதனை பிள்ளை விருத்தி உளவியலாளர்கள் கூறும் விருத்தி பருவங்களூடாக அறிந்துகொள்ளலாம். பிள்ளைகளின் மொழிகற்குமாற்றல் பிள்ளைக்குப் பிள்ளை வேறுபட்டிருப்பதுடன் அவற்றின் விருத்தியில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துவதனையும் உணரலாம். இவற்றை புரிந்துகொள்வதன் மூலம் மொழி கற்பிக்கும் ஆசிரியர் தனது மாணவர்களின் வளர்ச்சிக்கட்டம்,வகுப்புமட்டம் என்பவற்றை உணர்ந்து பொருத்தமான அணுகுமுறைகள் மூலம் சூழலை ஒழுங்கமைத்து பயனுள்ள கற்றல் அனுபவங்களை வழங்கி மொழி விருத்திக்கு உதவ முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளமான வாழ்வு பிறக்கட்டும்!"

திருமதி தி.சிவகுமார் (ஆசிரியர்),
2ம் கட்டை, கோரக்கன்கட்டு.

வளமான வாழ்வுடன் வாஞ்சையுடன் வாழ எனது எதிர்காலம்
ஏற்றம் பெறவேண்டும் ஏணியாக உயர வேண்டும்.
சமரசத்துடன் சண்டை சச்சரவின்றி சஞ்சலமின்றி
சந்தோஷத்துடன் திகழவே திசையெங்கும் தித்திடவேண்டும்.

வீரதீர சாதனைகள் படைத்திடவும் விடிவெள்ளியாக விளங்கிடவும்
ஒளிமயமாக ஓங்கிடவும் எதிர்காலம் பிறக்கட்டும்.
துன்பங்கள் அகன்ற இங்கிதமான வாழ்க்கையுடன்
இகபரம் தன்னில் சுகபரத்துடன் சுபீட்சமும் பெற்றிடவேண்டும்.

மனிதம் என்ற மாண்புடன் மாணிக்கமாய்
மங்கல கரத்துடன் மண்ணிலே மகிழ்ச்சியுடன்
பூத்துக்குலுங்கிடும் புதுமலர்களாய் புத்தொளிவீசிடவே!
பூலோகம் தன்னில் புளகாங்கிதமாய் என்வருங்காலம் அமையட்டும்.

எண்ணங்கள் நல்லதாய் எழுந்திடவேண்டும்.
சொற்கள் சொல்லோவியமாக பதிந்திடட்டும்.
செயல்களை செப்பனிட்டு காட்டிடவும்.
வருங்காலம் வண்ணமாய் மிளிரவேண்டும்.

பாரினிலே பஞ்சம், பிணி அகன்றிடவேண்டும்.
பரிவுடன் யாவரும் ஒரு குலம் என வாழவேண்டும்.
கல்வி என்னும் கலங்கரை விளக்கதனை
கனிவுடன் கற்றுக்கசடற என் வாழ்வில் திகழவேண்டும்.

அகிலந்தன்னில் அடிமை வாழ்வு அகன்றிட வேண்டும்.
ஏன் பிறந்தோம் இப்புவியில் எனும் நிலை மாறிட வேண்டும்
இலக்கியமும் இன்தமிழும் விளங்கிடல் வேண்டும்.
இலட்சியப் பெருவாழ்வே மலர்ந்திடல் வேண்டும் இப் புவியில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம அலுவலர்கள்



இருப்பவர்கள்: திரு.ச.சந்திரன், திரு.க.நாகேந்திரம், திரு.பூ.ராஜ்வினோத் (A.D.P), திரு.த.முகுந்தன் (D.S), திரு.சி.குகதாசன் (Accountant),
(இடமிருந்து வலம்) திரு.ம.இராசரத்தினம், திரு.கோ.சேகர்.
நிற்பவர்கள்: திரு.நா.அம்பிகைபாகன், திருமதி ஆ.சாந்திரூஸ்ஷ்ணா, திரு.த.நந்தகுமார்

பிரதேச கலாசார பேரவை உறுப்பினர்கள்



இருப்பவர்கள்: செல்வி.மு.நடனவதி (உப செயலாளர்), திரு.சி.கனகராசா, திரு.த.அமலதாஸ் (செயலாளர்),
(இடமிருந்து வலம்) திரு.த.முகுந்தன் (தலைவர்), திரு.பூ.ராஜ்வினோத், திரு.வே.சிவனேசன், திருமதி செ.இராஜரட்ணம்.
நிற்பவர்கள்: திரு.ந.றொபட்நிக்சன், திரு.யோ.தர்சன், திரு.சி.சிவராஜ், திரு.பெ.புண்ணியராஜ், திரு.ஆ.பாலசுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்து தொடர்பான சட்டவியல் நோக்கு

செல்வி ந.கவிதா,
பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

சட்டம் என்பது எந்நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்புடைய ஒன்றாகும். இந்த வகையில் குறித்த நாட்டு மக்களின் நியமங்கள், விழுமியங்கள், பண்பாடுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே குறித்தநாட்டிற்கான சட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இதனைவிட பல்லின நாட்டில் பல்லின மக்கள் காணப்படுவதுடன் சில விசேட சட்டங்களும் காணப்படுவது இயல்பு. இவை வதிவிடத்தையோ, குறித்த இனத்தையோ கொண்டு வரையறுக்கப்படலாம். அந்தவகையில் விவாகரத்து தொடர்பாக பல்வேறு சட்டங்கள் உள்ளபோதிலும் அது எல்லோருக்கும் தெரிந்திருப்பதில்லை.

இந்தவகையில் விவாகரத்து தொடர்பான சர்வதேச சட்டங்களை நோக்கின் அங்கே நேரடியாக இப்பதம் பிரியோகிக்கப்படாத போதும் சில உறுப்புரைகள் விவாகரத்து கோருவதற்கான அனுமதியை அளிக்கின்றன. முதலில் அனைத்துலக மனித உரிமைகள் (U.D.H.R) பிரகடனத்தை எடுத்தால்,

உறுப்புரை 1

"மனிதப்பிறவியினர் சகலரும் மதிப்பிலும், உரிமைகளிலும் சமனானவர்கள்."

உறுப்புரை 4

''எவரும் அடிமையாக வைத்திருக்கபடலாகாது."

உறுப்புரை 5

"எவரும் சித்திரவதை அல்லது கொடுமையான மனிதத் தன்மையற்ற அல்லது இழிவான நடைமுறைக்கோ தண்டனைக்கோ உட்படுத்தப்படலாகாது."

உறுப்புரை 7

"சட்டத்தில் யாவரும் சமன்."

உறுப்புரை 16

"எவ் இனத்தவரையாகினும் திருமணம் செய்ய எல்லோருக்கும் உரிமை உண்டு. என்பதுடன் திருமணம் செய்யும் பொழுதும் திருமணமாகி வாழும்போதும் திருமணம் குலைக்கப்படும் பொழுதும் ஒவ்வொருவருக்கும் சம உரிமை உண்டு. தம்பதியர்களாக வாழ இருப்போரது சுயாதீனமான முழுமையான சம்மதத்துடன் மட்டுமே திருமணம் நிறைவேற்றப்படலாம். சமுதாயத்தின் அடிப்படையானஅலகான குடும்பமானது சமுதாயத்தினாலும் அரசினாலும் பாதுகாக்கப்படுவதற்கு உரித்துடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற உறுப்புரைகள் விவாகரத்து பெறுவதற்கான உரிமைகளை வழங்கின்றன. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை (U.D.H.R) தொடர்ந்து.

- அரசியல் குடியியல் உரிமைகள் தொடர்பான சமவாயம் (ICCPR)
- பொருளாதார சமுக கலாசார உரிமைகள் தொடர்பான சமவாயம் (ICESCR)
- பெண்களுக்கு எதிரான புறந்தள்ளல். பாரபட்சம் தொடர்பான சமவாயம் (CE DAW)
- திருமணமான பெண்களின் தேசியத்துவம் தொடர்பான சமவாயம் (Convention on the Nationality of Married women)
- CEDAW ல் இருந்து பெறப்பட்ட அறிக்கை (Optional protocol - CEDAW)
- பெண்களுக்கெதிரான புறம்தள்ளல். பாரபட்சம் காட்டல் தொடர்பான பிரகடனம்
- (Declaration on the Elimination of Voilance Againest women)
- பாதுகாப்புச்சபை தீர்மானம் (Security Council Resolution)
- பொதுத்தீர்மானம் (General Recomadation)

என்பன விவாகரத்து பெறும் உரிமை அதிலும் பெண்கள் விவாகரத்து பெறும் உரிமையை வழங்குகின்றன. இவற்றில் CEDAW பெண்கள் உரிமைக்கான விசேட சமயவாயமாக இருப்பதுடன் இலங்கை அரசாங்கமும் இதனை ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து இலங்கையின் அரசியல் யாப்பை எடுத்துக்கொண்டால்,

உறுப்புரை 10

''சிந்தனை செய்யும் சுதந்திரம் மனச் சாட்சியை பின்பற்றும் சுதந்திரம் மதச்சுதந்திரம் என்பவற்றுக்கு எல்லோரும் உரித்துடையவர்கள்"

உறுப்புரை 11

"ஆளொருவர் சித்திரவதை அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலாகாது."

உறுப்புரை 12

இவ்வுறுப்புரையிலுள்ள எதுவும் பெண்களின். பிள்ளைகளின் அல்லது இயலாமையுள்ள ஆட்களின் முன்னேற்றத்திற்காக சட்டத்தின் மூலம். துணைநிலைச் சட்டவாக்கத் தின் மூலம். அல்லது ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் சிறப்பேற்பாடு செய்யப்படுவதைத் தடுக்க இயலாது."

உறுப்புரை 12 -1

"சட்டத்தின் முன் யாவரும் சமன்"

இத்தகைய உறுப்புரைகள் விவாகரத்து கோரும் உரிமையை வழங்குகின்றன

இதனைவிட இலங்கை அரசு ஆனது CEDAW சமவாயத்தை ஏற்றுக்கொண்ட தன் பேரில் அதன் உறுப்புரை 15

"பெண் ஆண் சரிசமமாக நடாத்தப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதுடன் குடியியல், சட்ட ஆதிக்கம் தொடர்பான ஒப்பந்தங்களில் சமத் துவம் பேணப்படல் வேண்டும்."

உறுப்புரை 16

"அரசு பெண்களுக்கெதிரான ஓரங்கட்டலை எதிர்த்து பால் சமத்துவத்தை வழங்க வேண்டும்."

1.திருமணவிடயத்தில் சமத்துவம்

2.திருமணத்தின் போதும், திருமணம் உருக்குலைந்த நிலையிலும் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

3. விரும்பிய துணையை தேடிக்கொள்ளும் உரிமை.

4. பிள்ளைகளை வளர்த்தல், பாதுகாத்தல், பெயரிடல் என்பவற்றிற்கான உரிமை

என்பவற்றிற்கிணங்க விவாகரத்து கோரும் உரிமையை வழங்கியுள்ளது. இலங்கையில் குடும்பச் சட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று வகைச்சட்டங்களாக பொதுசட்டம், விசேட சட்டத்தின் கீழான கண்டியச்சட்டம், விசேட சட்டத்தின் கீழான முஸ்லீம் சட்டம் என்பன உள்ளன.

1.பொதுச்சட்டம்:-

இதன் பிரகாரம் மூன்று நிலைகளினடிப் படையில் விவாகரத்து கோரலாம். இதன் படி தவறு நடந்தால் மட்டுமே விவாகரத்து கோரலாம். சம்மதத்தின் பேரிலான விவாகரத்து இதில் ஏற்புடையதல்ல. இச்சட்டமானது இலங்கையில் வாழும் கண்டிய சிங்களவர்களையும், முஸ்லீம்களையும் தவிர்ந்தவர்களின் திருமணம், விவாகரத்து என் பவற்றையே பிணிக்கும் தன்மை கொண்டது. இச்சட்டத்தின்படி விவாகரத்து கோரும் மூன்று நிலமைகளை நோக்கின்,

1.1. வன்ம உறவறுப்பு

1.1.1. சாதாரண எளிய வன்ம உறவறுப்பு:

வாழமுடியாது எனக்கூறி வீட்டைவிட்டு கணவனோ மனைவியோ வெளியேறல்

தூண்டலின் பேரிலான வன்ம உறவறுப்பு:

குடும்பத்தின் தொந்தரவு மூலம் Innosent party ஐ வீட்டைவிட்டு வெளியேற வைத்தல். இங்கு, கணவனுக்கோ, மனைவிக்கோ எதிர் பாலாரின் குடும்பத் தொந்தரவே அவர்களின் பிரிவுக்கு காரணம்.

1.2. திருமணத்தின் போதான மலட்டுத் தன்மை

இங்கு திருமணத்தின் பின்னர் மட்டுத் தன்மை ஏற்படின் விவாகரத்து கோர முடியாது. மாறாக, திருமணத்தின் முன் மலட்டுத் தன்மை இருந்து அது திருமணத்தில் மறைக் கப்பட்டிருப்பின் விவாகரத்து கோரமுடியும். இங்கு மருத்துவ சான்று கோரப்படும்.

1.3. சோரம் போதல்

கணவனோ மனைவியோ வேறொரு பெண்ணுடனோ ஆணுடனோ தொடர்பு என நிரூபிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.கண்டியச்சட்டம்:-

கண்டிய பிரதேசத்திற்குள் வாழும் சிங்களவர்களை இச்சட்டம் பிணிக்கும். இச்சட்டத்தின் கீழும் வன்ம உறவறுப்பு, திருமணத்தின் போதான மலட்டுததன்மை, சோரம் போதல் என்ற மூன்று நிலைகளிலும் விவாகரத்து கோரலாம். ஆனால் சோரம் போதல் தொடர்பாக பெண் முறையிடும் பட்சத்தில் நிரூபிக்க வேண்டும். என்பதுடன் தான் கொடூரமாக கணவனால் நடாத்தப்பட்டேன் எனவும் நிரூபிக்க வேண்டும். ஆனால் ஆண் நிரூபிக்கும் பட்சத்தில் இவ்வாறான நிரூபணம் தேவை இல்லை. சம்மதத்தின் பேரிலான விவாகரத்து இச்சட்டத்தில் உண்டு.

3.முஸ்லிம் சட்டம்

இச்சட்டமானது இலங்கை வாழ் முஸ்லிம்களை பிணிக்கும். இதன் கீழ் விவாகரத்து கோரும் ஆண், பெண்ணை நோக்கி சிறிதளவான இடைவெளிவிட்டு மூன்று முறை "தவாக்" எனக் கூறினால் விவாகரத்து பெறலாம்.

பெண் ஆணை விவாகரத்து செய்வது மிகக் கடினம். அதாவது தன்மேல் கணவன் கொடூரமான செயல்கள் செய்தார்: என சரியான முறையில் நிரூபிக்க வேண்டும்.

விவாகரத்து பெற்ற கணவன் மனைவிக்கு பிள்ளைகள் இருப்பின் பொதுச்சட்டத்தின்படி ஆரம்பகாலத்தில் குழந்தையின் இயற்கையான பாதுகாவலன் தந்தை. எனக் கருதப்பட்டது. ஆனால் தற்போது பிள்ளையின் நலனைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகின்றது.

முஸ்லீம் சட்டத்தின் படி பிள்ளையின் பாதுகாவலன் தந்தை ஆவார். பெண் பிள்ளையாயின் பராயமடையும் வரை தந்தையே பாதுகாவலன்.. இவையே விவாகரத்துதொடர்பான சட்டவியல் நோக்காக உள்ளன.

எமது சமூகத்தில் இறுக்கமான குடும்பபாரம் பரியங்கள் பேணப்படுவதால் சட்ட ஏற்பாடுகளின் படி விவாகரத்து கோருவரின் வீதம் மிகவும் குறைவு ஆகவுள்ளது. எனினும், எதையும் சகித்துக் கொண்டு குடும்பத்தை குலையவிடாது காத்தல் என்னும் எம் பண்பாட்டு பெறுமானமே சட்டத்திற்கு மேலாக எம் சமூகத்தில் மேலோங்கி உள்ளதனை அவதானிக்கலாம். குடும்பம் என்பது மனிதனின் அடிப்படையான ஓர் இறுக்கமான கட்டமைப்பு என்பதால் அதனை இறுதிவரை பாதுகாப்பதே சாலச்சிறந்தது. என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

"ஆரோக்கியமான குடும்பம் அழகிய சமூகம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் ஒரு கோவில்

காலை விடியும் கண்விழிக்கும்
கனவுகள் மனதோடு எழும். மானுடம்
காலைப் பொழுதில் உயிர்க்கும்
மாலைப் பொழுதில் மரிக்கும்

வாழும் வயதில் வாழ்வை தொலைத்து
வாழ்க்கைப்படுவதாய் கழுத்தை நீட்டி
அவலப்பட்டு கண்ணீர் சிந்தும்
சோகம் அந்தோ பரிதாபம் எம் தேசம்.

மாலைபடும் நேரம் போதையில்
தள்ளாடும் ஆண்கள் மனம்
சட்டிபானைகள் உடையும்
வட்டிக்கு வந்த முதல் கரையும் - அந்தோ
பசியில் வாடும் மனைவி பிள்ளை போதை
மடியில் வாழ்வே தள்ளாடும்.
கசிப்பு உற்பத்தி ஒரு புறம்
கள்ள சாராய விற்பனை அமோகம்
எதுவும் செய்யலாம் இன்று என
எழுந்து ஆடுது முதலாளி வர்க்கம்.

ஏழ்மை நிலை மனிதரை வாட்டும்.
வதைக்கும் மானத்தை விக்காது
மயிர் நிர்ப்பின் உயிர் வாழாக்
கவரி மான்களும் மண்ணில்
வாழ்வது புனிதமாகும்

கண்ணீர் மாறாத சோகமும்
கவலை மாறிடாத வாழ்வும்
சொந்தம் இழந்த உறவும் தலையை சுற்றும்
ஏமாற்று மனிதரும் ஊனம்
சுமக்கும் புனிதரும் வாழ்வது இம்
மண்ணில் இன்று நிஜமாகும்.

எவ்வவலம் வந்தாலும் எம் வாழ்வில்
குடும்பமே ஒரு கோயிலாகும்
அதைகுலைத்திடல் மகா பாவமாகும்
குழந்தையும் மனைவியும் குலவி வாழும் எம்
குடும்பமே இன்ப கோயிலாகும்

சுபம்

- திரு. ஆ.செல்வராஜ்

கிளி மாவட்டத்தில் இயங்கிவருகின்ற கலைமன்றங்கள் மற்றும் அரச அலுவலகங்களிற்கு இடையிலாக ஆக்கத்திறன் மற்றும் கலைத்திறன் வெளிப்பாட்டு பிரதேசமட்ட போட்டியில் வெற்றி பெற்ற கவிதை ஆக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிசய மாதுளங்கனி

ஒரு தேசத்து இராசாவுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவள் அழகில், குணத்தில் மிகவும் சிறந்தவள். அவளைப் பெற்றோர் மிகவும் செல்லமாக வளர்த்து வந்தனர். அந்த இராசகுமாரிக்கு பதினாறுவயது வந்தபோது அவளின் தாயார் ஒருநாள் திடிரென நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள். இராசாவுக்கும், இராசகுமாரிக்கும் தாங்கமுடியாத துன்பமாக இருந்தது. இராசா அக்கவலையால் தனது அரச கருமாங்கள் எதிலும் அக்கறை காட்டாமல் எந்த நேரமும் கவலையில் மூழ்கி இருந்தார். மகளின் பாசம் ஒன்றே அவரை உயிருடன் வாழ வைத்தது.

அந்த இராசாவின் மந்திரி சிறந்த நற்குணமும், இராசவிசுவாசமும் உடையவர். அவரே இராச விவகாரங்கள் எல்லாவற்றையும் கவனித்து வந்தார். அந்த நாட்டுக்கு அண்மையில் உள்ள நாட்டு அரசன் இப்படி இந்த இராசா எந்த வியத்திலும் கவனமில்லாமல் கவலையில் மூழ்கிப்போய் இருந்ததைக் கேள்விப்பட்டார். இந்த நாட்டைப்பிடிப்பதற்கு இதுதான் தக்கசமயம் என எண்ணி இரகசியமாக எல்லா ஆயத்தங்களையும் செய்து போருக்குக் கிளம்பினார். பக்கத்து நாட்டு இராசாவின் பெரும்படையொன்று அவரின் மகனின் தலைமையில் அந்நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தது. இம் முற்றுகையை எதிர் பாராத இராசாவுக்கும் மந்திரிக்கும் என்ன செய்வதென்று தெரியவில்லை. படையெடுத்து வந்த இராசகுமாரனோ தனது தகப்பனின் சொற்படி ஒன்றில்போர் அல்லது தங்களுக்கு கப்பம் செலுத்துவதற்கு உடன்பட வேண்டுமெனச் சொல்லி அனுப்பினான் பெரும்படையுடன் போருக்கு வந்துவிட்டமையால், தாங்கள் எதுவும் செய்யமுடியாது என்பதை அறிந்த அரசனும், மந்திரியும் தங்கள் போர்வீரர்களை அநியாயமாகக் கொல்லவிரும்பவில்லை. எனவே தாங்கள் கப்பம் செலுத்துவதற்கு சம்மதம் எனத் தெரிவித்தார்கள்.

கோட்டை வாசலில் வந்த எதிர் நாட்டு அரச குமாரனை அந்த அரசகுமாரி கண்டாள். அரசகுமாரனின் அழகும், கம்பீரத்தோற்றமும் மனதில் பதிந்ததேயன்றி, தங்கள் நாட்டை பிடிக்க வந்தவன் என அவளால் எண்ண முடியவில்லை. இராசகுமாரனும் ஒரு நிமிடம் அரசகுமாரியின் தோற்றத்தைக் கண்டு மயங்கினாலும், அவன் தன் கருமமே கண்ணாக இருந்தான். ஒப்பந்தம் எல்லாம் முடிந்த பின் இரு பகுதிகளுக்கும் இடையில் எவ்வித சண்டைகளுமின்றி இராசகுமாரன் தன் படைகளுடன் தன் ஊருக்குத் திரும்பிவிட்டான். அன்று தொடக்கம் இராசகுமாரியின் கனவிலும் நனவிலும் இராசகுமாரனின் தோற்றமே தோன்றி சஞ்சலத்தை ஏற்படுத்திய வண்ணம் இருந்தது. ஆனால் தாய் இல்லாத ராசகுமாரி இதனை யாரிடம் சொல்லுவாள்? சில காலத்தின் பின் இவளின் தந்தை இவளுக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்.

தனது எண்ணத்தை அவளின் தோழி மூலம் இவளுக்கு கூறி அனுப்பினார். அவளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இப்போ திருமணம் செய்யவில்லை என ஒரேயடியாக மறுத்துவிட்டாள். எனினும் தந்தை தனக்குப் பலவீனம் கூடி வருவதால் திருமணஞ் செய்து இராசவிவகாரங்களுக்கு தன் மகளே பொறுப்பாக இருக்க வேண்டு மென்றும் கூறினார்.

பன்னிரண்டு வருத்திற்கு ஒரு முறை காய்த்துப் பழுக்கும் மாதுளங்கனி ஒன்று இருப்பதும், அதை வைத்திருப்பவர்களுக்கு யாவும் நிறைவேறும் என்றும் அரசன் அறிந்தி ருந்தான். எனவே இம்மாதுளங் கனியைத் தனக்குக் கொண்டு வந்து தருபவனுக்கே தன் மகளை மணஞ் செய்து கொடுப்பதாகக் கூறினான். இந்த அதிசய மாதுளங்கனி கிடைத்தால் எவரும் தாங்கள் வைத்துக் கொள்ள விரும்புவார்களே யொழிய. எதற்காகவும் மற்றவர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள். ஏனெனில் இம் மாதுளங்கனியில் இருக்கும் ஒவ்வொரு முத்தும் ஒன்று ஒன்றாகவே அழுகிப்போகும். எனவே கடைசி முத்து இருக்கும் வரைக்கும் அதன் சக்தி அப்பழத்துக்கு இருக்கும். இதை இராசா, மகளுக்கு தெளிவுபடக்கூறினார். இருந்தும் அவளின் பிடிவாதத்தால் தனது மகளின் எண்ணத்தை யாவருக்கும் பகிரங்கப்படுத்தம்படி தனது மந்தி ரிக்கு தெரிவித்தார். எவரும் மாதுளங்கனியை எடுத்துவரப்போவதுமில்லை. தனது மகளிற்கு கல்யாணம் நடக்கப் போவதுமில்லையென இராசா கவலையுடன் இருந்தார். ஆனால் இவர்களின் தேசத்தை கைப்பற்றுவதற்காக முன்பு வந்த இராசகுமாரன் இதைக் கேள்விப்பட்டான். தான் எப்படியாவது இந்தக்கனியைத் தேடிப்பிடிக்க வேண்டும் என்று எண்ணியவாறு ஓர் போர்வீரனின் உதவியுடன் புறப்பட்டான்.

பல நாட்களாக பல இடமும் தேடியலைந்து கடைசியில் தூரத்தில் உள்ள காடொன்றிற்குள் ஒரு துறவி இருப்பதாகவும் அவரின் தோட்டத்தில் இம் மாதுளை நிற்பதாகவும் அறிந்தான். எனவே இருவருமாக அங்கு போய்ச் சேர்ந்தார்கள். அங்கே அந்த துறவி பல சீடப் பிள்ளைகட்கு ஞானோபதேசம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவரிடம் போய் அவரை வணங்கி ஒரு மூலையில் இருந்தார்கள்.

உபதேசம் முடிந்த பின் சீடர்கள் யாவரும் தத்தம் வேலைக்கு போனபின் துறவி இவர்கள் வந்த காரணத்தை வினாவினார். இராசகுமாரன் அந்த மாதுளங்கனியைப் பெற வந்ததாகக் கூறினான். அதற்கு அவர் மாதுளங்கனியை யாருக்காக எதற்ககாகப் பெற வந்தாய் என உண்மையைக் கூறவேண்டும். அல்லாவிட்டால் பழத்தின் சக்தி சிறிதும் இருக்காது என்று கூறினார். இராசகுமாரன் உண்மையைக் கூறவும் இன்னொருவருக்காக நீ கனிக்கு வந்தது மெச்சத்தக்கதே. இன்னும் மூன்று மாதத்தின் பின்னர் இக்கனி பருவமாகப்பழுக்கும். இம் மூன்று மாதமும் இங்குள்ள தவவாழ்க்கை வாழவேண்டும். சீடர்களுடன் பணிவிடைகள் செய்தல் வேண்டுமெனக் கூறினார். இராசகு மாரனும் சம்மதித்து அம்மூன்று மாதமும் திரிகரண சுத்தியுடன் அத்தவவாழ்க்கையில் ஈடுபட்டு, துறவிக்கு இவனில் நம்பிக்கையும், அன்பும் வரச்செய்தான். அம்மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தின் பின்னர் இக்கனியைக் கொடுக்கத்தகுதி உள்ளவன் இவன் என்பதை அறிந்த அந்தத்துறவி,அவனுக்கு அக்கனியைக் கொடுத்து நல்லாசிகள் வழங்கி அனுப்பி வைத்தார். இராசகுமாரன் அக்கனியுடன் இராசகுமாரியின் தந்தையிடம் சென்று, அம் மாதுளங்கனியை அந்த இராசா முன் வைத்து வணங்கி நின்றான். அரசனும், அவனுடன் கூட இருந்த மந்திரியும் இவனின் கெட்டித்தனத்தை மட்டுமன்றி இவனின் பணிவையும், மற்றும் அரசகுமாரிக்காக அம் மாதுளங் கனியை தான் வைத்திராமல் தன் நாட்டு நன்மைக் காக வைத்திராமல் , அந்நிய நாட்டு அரசனின் மக்களுக்கு ஒப்படைக்க எண்ணிய அன்புள்ளத்தை எண்ணி பாராட்டினார்கள்.

இரு தேசத்து இராசாமார்களும் ஒரு நல்ல நாள் பார்த்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். விவாகம் விமரிசையாகவும், சந்தோமாகவும் இனிதே நடந்தேறியது.

கதை கூறியவர் :
திரு.வீரா.கோசையடி, வெளிக்கண்டல்
நன்றி: "நாட்டுப்புற சிறுகதைகள்",
பேராசிரியர் சி. விசாகறூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள்: திரு.த.பார்த்தீபன், திரு.மு.அருள்செல்வநாயகம், திரு.ஆ.ஆனந்தரூபன் (A.O), திரு.பூ.ராஜ்விநோத் (A.D.P),
(இடமிருந்து வலம்) திரு.த.முகுந்தன் (D.S), திரு.சி.குகதாசன் (AccountanT), திரு.த. துஸ்யந்தன், திரு.சி.பிரதீபன், திரு.க.சிவகரன்
நிற்பவர்கள்: செல்வி கி.லட்சுமி குமாரி, திருமதி பி.சுரேந்தினி, திருமதி இ.யசிகலா, திருமதி லோ.நாகநந்தினி, செல்வி சி.புஸ்பவதனா, திருமதி பா.குமுதினி,
(1ம் வரிசை) செல்வி ச.தேனுகா, செல்வி இ. கலைமதி, திருமதி கோ. சுமதி, செல்வி க.சுரேகா, திருமதி ச.மோகப்பிரியா, செல்வி வி.சுரேதினி, திருமதி அ.லிசோதா,
(2ம் வரிசை) திரு.ந.சிவகுமார், திரு.இ. தர்மேந்திரா, திரு.கா.சுதாகரன், திரு வீ.பிரதீபன், திரு.அ.பிரபாகரன், திரு.வி.ஜூலியஸ், திரு.இ.கௌதமன்,
சமூகமளிக்காதவர்கள்: திருமதி சு.அருள்பாலினி, திருமதி பு.லதா.

சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்



இருப்பவர்கள்: திரு.பொ.மணிமாறன், திரு.இ.அபராஜீதன் (B.M), திருமதி கு.மதிவதனி(H.Q), திரு. பூ.ராஜ்விநோத் (A.D.P), திரு.த.முகுந்தன் (D.S), திரு.சி.குகதாசன் (Accountant),
(இடமிருந்து வலம்) திரு.யோ.உதயணன் (P.M), திரு.கு.அருமைராசா, திரு.பா.சசிகரன்,
நிற்பவர்கள்: திருமதி கு. துஸ்யந்தி, செல்வி சு.பிரதீபா, திருமதி ஜெ.கமலினி, செல்வி தி.சிந்துஜா, திருமதி க.ஜெனிகா, செல்வி அ.மோனிஅனிற்றா,
(1ம் வரிசை) திருமதி சு.மாதிவி, திருமதி ய.விஜோபா, செல்வி கா.நிதர்சனா, திருமதி ர.செல்வமதி, திருமதி வா.சபிதா, செல்வி சி.கல்துாரி, திருமதி ச.சுகிதா, திருமதி பு.றஜனி,
நிற்பவர்கள்: திரு. ஸ்ரீ ரூபாகரன், திரு யோ.சிவகுமார், திரு.ஜூ பிறைசல், திரு.யோ.கோபிநாத், திரு.சி.சதேந்திரன், திரு.சி.யாதவன்,
(2ம் வரிசை) திரு.க.ஸ்ரீதரன், திரு.தி.பிரதீபன், திரு.ச.சத்தியசீலன்.
சமூகமளிக்காதோர்: திரு.க.பார்த்தீபன், செல்வி செ.தாரணி, செல்வி த.புனிதவதி, செல்வி சி.குமுதினி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தமிழைக் காப்போம்

செல்வி தி.பாவரசி
கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

தீக்கெட்டும் பரந்த
தமிழை எம்
கைக்கெட்டும் பேறு.....
பெற்றவர்கள்
நாமதனால்
எக்கேடு கெட்டும்
போகட்டும் என்றிராமல்
சிக் கெடுத்து மீண்டும்
சீராக்கம் செய்வோம் நாம்!

சீரழிந்து எங்கள் தமிழ்
சிதைவடைந்து போகாமல்
சீழ் பிடித்து இன்னும்
நொந்தழிந்து போகாமல்
தாய் மொழியை இன்னும்
தரமுயர்த்த வேண்டும் நாம்.

வால்பிடித்து வேறு.....
மொழிகளுக்கு நாம்.....
கால்பிடித்து விட்டதனால்
தூய தமிழ் இப்போ
நோய் பிடித்த மொழியாக
நோக்காடு பட்டதனால்
பாய் விரித்து தமிழிற்கு
'பரிகாரம்' செய்யவேண்டும்.

எம் தமிழைக் காப்பதற்கு
நாம்மெல்லாம் அணிதிரண்டு
எம் மொழியின் சிறப்பை
இருப்பதிலும் உயரவைக்க
சம்மதங்கள் நாம் கொடுப்போம்!
எம்மோடு இவ்வுணர்வு
எப்போதும் இருக்கட்டும்!
எப்போதும் இருக்கட்டும்!

(2013 ஆண்டின் பிரதேசமட்டத்தில் நடத்தப்பெற்ற தேசிய கலை இலக்கிய போட்டியில் கனிஸ்ரபிரிவில் 01 ஆம் இடம் கவிதை ஆக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழறிஞர் வரலாறு

சரணம்

தமிழறிஞர் வரலாறு புதையுண்டு போகாது!
விழிமூடி விதைக்கப்படும் அவர் வாழ்வும் அழியாது!

பல்லவி

காலம் கவிஞனையே படைக்கிறதை காண்கின்றோம்.
கவிஞன் காலத்தையே படைக்கின்றான் வியக்கின்றோம்.
ஞாலம் அவர் தந்த தமிழறிவை தேடுதே.
வாழ வழி தந்த அவர்வாழ்வை நோக்குதே!

(தமிழறிஞர்.....)

கம்பன் கவி போல் அழியாத காவியங்கள்
கவிநுற படைத்தாரே நிலையான பொருள்விளங்க
திருக்குறளினை மொழிந்தாரே விழியான எம்மொழியில்
திருமுறைகள் படைத்தளித்து காத்தாரே
நிறைவாக தமிழுக்கு அவர் மூச்சுதந்தாரே
தமிழ் வாழ வழி தந்த அவர் புகழும் வீழாது!
தமிழ் இங்கு இல்லையெனில் எவர் புகழும் வாழாது!
அமிழ்தென்று பருகியவர் அறிவு சோராது.
தமிழறிஞர் புகழ்தனை மறந்தவர்கள் வாழ்வு மலராது!

(தமிழறிஞர்.....)

பெ.புண்ணியராஜ்,
கூகைமாவடி,
கண்டாவளை.

(இவ் ஆக்கம் 2013 ஆண்டின் தேசிய கலை இலக்கிய பிரதேசமட்ட திறந்த பிரிவுக்கான பாடலாக்க போட்டியில் முதலிடம் பெற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளை ஓசை இதழுக்கான வாழ்த்துக்கள்










தலமைக் காரியாயல கட்டட திறப்புவிழா




எமது சங்கத்தால் நடாத்தப்பட்ட கைத்தொழில்பயிற்சியும் சேவைநலன் பாராட்டு விழாவும்

கண்டாவளை பிரதேச செயலகமும் கண்டாவளை பிரதேச
கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்தும்
கலாசாரவிழாவும் வளைஓசை இதழ் வெளியீடும்
சிறப்புற அமைய எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

விளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
ஏ9 வீதி, கரடிப்போக்கு, விளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கனவுகளின் மீள்வருகை"

தாமரைச்செல்வி,
குமரபுரம்,
பரந்தன்.

இப்போதெல்லாம் படுத்தால் உறக்கமே வருவதில்லை, உறக்கம் இல்லாததனால் கனவுகளும் வருவதில்லை, கனவுகாணும் சுகம் கூட கைவிட்டுப் போனதில் அவனுக்கு மிகுந்த வருத்தம் தான். மனதில் அமைதியும் நிம்மதியும் தொலைந்து பல வருடங்களாகிவிட்டது. கனவுகள்வராமல் போனதற்கு அதுவும் ஒரு காரணமாயிற்று.

வாழ்க்கை முழுவதும் துன்பப்பட என்று தலையில் எழுதிவைத்திருக்கின்றது. இரண்டு கைகளையும் ஒரு காலையும் இழந்து முடமாகிப் போன நிலைமையோடு வாழ்வது என்பது எத்தனை கொடுமையான அனுபவம். ஆனால் வாழ்ந்தாக வேண்டுமே....

கனவுகளே வரண்டு போன வாழ்க்கை

படாத துன்பம் எல்லாம் பட்டு மீள்குடியேற்றம் என்று மறுபடி தங்கள் இடத்திற்கு வந்தாகிவிட்டது. ஆனால் எதிர்காலம் பற்றி எத்தனை பயம் எத்தனை ஏக்கம்... என்ன செய்வது என்று தெரியாத திகைப்பு... இந்த கையறு நிலையில் கனவுகள் எங்கேயிருந்து வரும்.....

ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு சமாதான காலங்களில் அவனுக்கு எத்தனை அருமையான கனவுகள் வந்திருக்கின்றன. விதம் விதமான வீடுகள் பற்றிய கனவுகள்... ஒவ்வொரு வீடும் ஒவ்வொருவிதம் சிலசமயம் பச்சை வண்ணத்துடனும் சில சமயம் இளமஞ்சள் நிறத்துடனும் பளிச்சென்று கனவில்தோன்றும்.

முன்புறம் சதுர அறை அதன் இருபுறமும் அறைகள். உட்புறம் நீளமண்டபம் அதிலும் அறைகள். குசினி , குளியலறை , கழிவறை என்று வசதியாய் கட்டப்பட்ட வீடு. நிலத்திற்கு சில சமயம் மாபிள்கல் பதித்ததாயும் சில சமயம் ரெறசோ போடப்பட்டதாயும் மாறி மாறி கனவில் தெரியும். வீட்டின் முன்புறம் மா, பலா, தென்னை என்று நிழல் பரப்பி நிற்கும் முற்றம் எதிரே தெரு கடந்து தண்ணீர் புரண்டோடும் வாய்க்கால்.. அதைத்தாண்டி பச்சைப்பசேலென்று விரிந்து கிடக்கும் வயற்பரப்பு...

இத்தகைய சூழல் மனதை நிரப்பிக் கொண்டிருக்கையிலேயே விழிப்பு வந்து விடும். புரண்டு புரண்டு படுக்கையில் சாணகத்தில் மெழுகப்பட்ட தரையின் வாசனை மூக்கை நெருடும். தனக்குள் சிரித்துக் கொள்வான்.

கனவுகள் என்னமோ சுகமானவைதான். எத்தனை கவலைகளையும் மறக்க வைத்து விடுகின்ற சில நிமிட சந்தோங்கள். குழைக்கப்பட்ட சீமெந்து கவலையை அடித்து அடித்து சுவரில் பூசும்போதெல்லாம் கனவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வீடும் அதன் அமைப்பும் கண்ணில் வந்து நிழலாடும். வயிற்றில் இருந்து திமிறிக் கொண்டு எழும் பெருமூச்சு பெரும் விசிறலாய் நெஞ்சை அடைத்து அடங்கிப் போகும்.

எத்தனையோ பிரச்சனைகள் இடப் பெயர்வுகளைக் கடந்து இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டில் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியிருந்த காலங்கள் அவை. அப்போதெல்லாம் அவனுக்கு வேலைவாய்ப்பு ஓரளவு கிடைத்துக்கொண்டிருந்தது. இடிபாடுகளும், கற்குவியல்களும், எரிந்து கரிபடிந்து போன சுவர்களுமாய் இருந்த கிளிநொச்சி நகரம் மீண்டும் உயிர்பெற்றுக்கொண்ட நேரம். வீடுகள், அலுவலகங்கள், கடைகள் என்று கட்டடங்கள் எழும்பிக்கொண்டிருந்தன. சாலையின் இருபக்கங்களிலும் புதிய பொலிவுடனும் வண்ணப்பூச்சுக்களுடனும் முகப்பு எழுத்துக்களுடனும் வியாபார நிலையங்கள் தோற்றம் பெற்றன. கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலின் மணி ஓசை கேட்கும் தூரத்தில் ஒரு மாடிக்கட்டட வேலையில்தான் அவன் அப்போது ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அவனுடன் சேர்ந்து பதினைந்து பேர் பெரிய கடைக்கட்டடம் இருபத்தைந்து அடி உயரத்தில் சுவர்பூச்சு வேலை நடந்து கொண்டிருந்தது.

மரத்தடிகளினால் அடுக்கடுக்காய் சாரம் கட்டி அதன் மேல் ஏறிநின்று மிகுந்த கவனத்துடன் வேலைசெய்ய வேண்டும். சாந்தகப்பை அவன் கையில் லாவகமாய் படிந்து வந்தது. அழுத்தி இழுத்தால் கண்ணாடிபோல் சுவர் பளபளக்கும். எத்தனை வருட அனுபவம்....

பதின்னான்கு வயதில் சாந்தகப்பை பிடித்த கை இது முப்பதுவருடங்களுக்கு மேலாகிறது. எத்தனை வீடுகள்... எத்தனை கட்டடங்கள்.... பதினான்கு வயதில் தந்தையுடன் சேர்ந்து வேலைக்குப்போக ஆரம்பித்த நாளிலிருந்தே தொழில் கையில் கொஞ்சம் கொஞ்சமாக படிய ஆரம்பித்து விட்டது.

அப்போதிருந்தே கனவுகளும் வரத்தொடங்கிவிட்டது. அப்போதெல்லாம் அந்த வயதில் ஒரு நீள விறாந்தை இரண்டு அறை குசினி இவ்வளவும் உள்ள ஒரு சின்னவீடுதான் கனவில் அடிக்கடி வரும். உழைத்து காசு சேர்த்து அப்படி ஒரு வீடு கட்டி குடியிருக்க வேண்டும் என்ற ஆசையும் விருப்பமும் அப்போதே அரும்பிவிட்டது. உழைப்பது வாய்க்கும் வயிற்றுக்குமே எண்பத்திமூன்றில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு அப்பா பலியாகிப்போக வீட்டின் முழுப்பொறுப்பும் அவன் தலையில் விழுந்தது வீட்டின் தேவைகளுக்கு உழைத்ததுடன் தங்கைகளின் கல்யாணம் தம்பிகளின் படிப்பு என்ற தேவைகள் விரியத் தொடங்க வாழ்வின் சுமைகள் கழுத்தை நெரித்தன. கனவில் வருகின்ற வீடு மாதிரி ஒரு வீடு கட்டுவது சாத்தியப்படாமலே போயிற்று.

ஆனாலும் வீடு பற்றிய கனவுகள் மட்டும் தொடர்ந்து வந்துகொண்டேதான் இருந்தது. மழையின் ஈரமும் வெய்யிலின் உக்கிரமும் சீமெந்து வெக்கையுமே வாழ்க்கை என்றாகிவிட்டது. எனினும் தன் தொழிலை அவன் மிகவும் நேசித்தான். ஒவ்வொரு வீட்டையும் கட்டும்போது தனக்குரிய ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை கட்டுவது போன்ற விருப்பத்தோடும் கவனத்தோடுமே அவன் செயற்படுவான். வீட்டுச் சொந்தக்காரர்களின் முகங்களில் தென்படும் பெருமிதத்தையும் ஆவலையும் பார்க்கும் போது அவனுக்கும் சந்தோமாகவே இருக்கும். கடைசிப் பூச்சு வேலையும் முடிந்து வீட்டை உரியவர்களிடம் ஒப்படைக்கும் போது அவர்களின் மகிழ்ச்சி அவனையும் தொற்றிக்கொள்ளும். இந்த வீட்டில் இவர்கள் சந்தோமாய் வளமாய் நிறைவோடு வாழவேண்டும் என்று மனசு பிரார்த்திக்கும்.

மறுநாள் இன்னொரு வீட்டுக்கு அத்திவாரம் போடும் போது அந்த புதுவீட்டுக்கான பொறுப்பு அவனிடம் வந்து சேரும். எத்தனையோ இடப்பெயர்வுகள் பிரச்சனைகள் வந்தபோதும் தன் தொழிலை தொடர்ந்து செய்து கொண்டுதான் இருந்தான்.

ஆனால் இப்போது.....

சமாதான காலத்தில் அவனுக்கு மாறி மாறி வீடு கட்டும் வேலைகள் வந்து கொண்டிருந்தது. தொடர்ந்து வேலை இருந்ததால் நாலு காசு மிச்சம் பிடிக்க முடிந்தது. கொஞ்சம் கொஞ்சமாய் காசு சேர்த்து இரண்டு அறை ஒரு விறாந்தை என்று சிறிதாய் ஒரு கல்வீடு கட்டிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

அந்த நம்பிக்கை ஒருநாள் தகர்ந்து போனது. இருபத்தைந்து அடி உயர தூரத்தில் நின்று ஒரு மாடி வீட்டு வேலை செய்து கொணடிருந்த மதியப் பொழுதில் கை பிடிமானம் தவறிவிட நிலத்தில் விழுந்ததில் ஒரு காலை முழங்காலுடனும் இரண்டு கைகளை முழங்கையுடனும் இழக்கவேண்டியதாயிற்று. எப்பேர்ப்பட்ட இழப்பு....

யாழ். வைத்தியசாலையில் மாதக் கணக்கில் கிடந்ததில் சேர்த்து வைத்திருந்த காசெல்லாம் கரைந்து போக மனசெல்லாம் நொறுங்கிப்போன நிலையில் ஊன்று கோலுடன் வீட்டுக்குத்திரும்பினான். மனைவி பிள்ளைகளுக்கு பராமாகிப் போனோமே என்று மனசு ஆறமாட்டாமல் தவித்தது.

அந்த நேரம் மறுபடியும் பிரச்சனை தொடங்கிவிட ஒவ்வொரு இடமாக அலைந்து முள்ளிவாய்க்கால் வரை ஓடிய அவலம் இதுவரை பட்ட துன்பம் எல்லாம் ஒன்றுமே இல்லை என்று சொல்லும் அளவிற்கு ஏற்பட்ட மாபெரும் அவலம். பரந்தனிலிருந்து விசுவமடு பிறகு சுதந்திரபுரம் அதற்கப்பால் புதுக்குடியிருப்பு அதற்கு அப்பால் மாத்தளன் கடைசியாக முள்ளிவாய்க்கால்.... எத்தனை இடங்கள் எத்தனை அலைச்சல்..

தறப்பாள் போர்த்திய கொட்டிலுக்குள் பசி பட்டினியோடும் உயிர்ப்பயத்தோடும் வாழ்ந்த காலங்கள். காலையில் பல் துலக்கி முகம் கழுவ வைப்பதிலிருந்து கிடைக்கும் கொஞ்சத்தண்ணீரில் உடம்பு கழுவி விடுவதி லிருந்து அத்தனை வேலைகளையும் பார்த்து பார்த்து ம்னைவியும் பிள்ளைகளும் செய்யும் போது மனம் தவிக்கும். அதுவும் இயற்கைக் கடன் செய்யும் போது ஏற்படும் துயரம் வார்த்தைகளில் வர்ணிக்கமுடியாதது.

தினமும் மனைவி ஒரு குழந்தையைக் கவனிப்பதுபோல கவனிக்கும் போது இவளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமையாகிப் போனேனே என்று மனது வலிக்கும். மனைவியை வேதனையோடு பார்ப்பான்.

அலுப்பு சலிப்பு இல்லை ஒரு முகச்சுழிப்பு இல்லை ...அந்த ஆதரவு.... கனிவு.... கண்களை கலங்க வைக்கும். இப்படி இவர்களுக்கெல்லாம் கஷ்டம் கொடுத்து உயிர் வாழ வேண்டுமா? என்று மனம் விரக்தியில் துடிக்கும் கண்ணுக்கு முன்னால் கொத்துக் கொத்தாய் சனம் சிதறி விழும்போது அவர்களுக்குள் ஒருவனாய் தானும் செத்துப் போயிருந்தால் நன்றாய் இருக்கும். என்று நினைக்கத்தோன்றும். ஒரு நேரச்சாப்பாட்டுக்கு படுகின்ற அவலத்தை விட ஒரு நேரம் இயற்கைகடன் கழிக்க படும் அவலம் மிகக் கொடுமையாக இருந்தது.

முள்ளிவாய்க்காலிருந்து அலைந்து வந்து வவுனியா செட்டிக்குளம் முகாமுக்குள் இருந்த போதும் இதே அவலம்தான். ஒரு வருத்துக்கு மேலாய் அங்கே இருந்து பட்ட துன்பம்...

ஒரு தொழில் செய்யமுடியாது கையில் காசு இன்றி நிவாரணமாய் தரும் அரிசி பருப்புத்தவிர வேறு எதையும் கண்டதில்லை. பிச்சைக்காரர் போல கையேந்தி நின்று அரைவயிறு நிரப்பிய காலங்கள்... ...

எல்லாவற்றையும் தாங்கி மீள் குடியேற்றம் என்று மீண்டும் தங்கள் காணிக்குள் கொட்டில் போட்டு இருக்க வந்த பிறகு கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது.

இடம்பெயர்ந்து போயிருந்த காலங்களில் வீடு பற்றிய கனவுகளோ அல்லது வேறு ஏதும் கனவுகளோ அவனுக்கு வந்ததில்லை. அப்படி எப்போதாவது கனவு வந்தாலும் புழுதி பறக்கும் தெருக்களும் அதில் தலைச்சுமையுடன் ஓடிக்கொண்டிருக்கும் மனிதர்களும் மரநிழலின் கீழே அடுப்பு மூட்டி சமைக்கும் காட்சிகளுமே மாறிமாறிக் கனவில்வரும்.

அமைதியான உறக்கம் என்பதுதான் கனவாய்ப் போய்விட்டது. உறக்கம் இல்லாததனால் கனவுகளும் வருவதில்லை. கனவு காணும் சுகம் கூட கைவிட்டுப் போனதில் அவனுக்கு மிகுந்த மனவருத்தம்தான்.

இப்போதெல்லாம் வாழ்வே பெரும் சுமையாகத் தெரிந்தது. விடிய எழுந்திருக்கும் போதே இன்றைக்கு சாப்பாட்டிற்கு என்ன வழி? என்ற கேள்விதான் முந்திக்கொண்டு நின்றது. பதினான்கு வயதிலிருந்து ஓடி ஓடி உழைக்க ஆரம்பித்தது இன்றைக்கு ஓரிடத்தில் அமர்ந்திருப்பது பெரும் நகரவேதனையாய் இருந்தது.

இப்போது மறுபடி நகரம் கடை, கட்டடங்கள், வீடுகள் என்று புதிதாய் தோற்றம் பெற்றுக்கொண்டிருக்கிறது. அவன் இயங்க முடியாத நிலையில் கையாலாகாதவனாய் வெறுமே பார்த்துக் கொண்டு அமர்ந்திருக்கின்றான்.

அவனது பதினான்கு வயசுப்பிள்ளை படிப்பை நிறுத்திவிட்டு மேசன் சின்னையாவுக்கு உதவியாளாய் கூலிவேலைக்கு போகத் தொடங்கியிருக்கிறான். அவன் கொண்டு வரும் காசில்தான் இப்போது சீவியம் நடக்கிறது. சீமெந்து வாசத்துடன் திரியும் பிள்ளையைப் பார்க்கும் போது மனது கனத்துப் போகிறது.

சமீப நாட்களாக அந்த குழந்தை முகத்தில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கம் இருப்பதை கவனிக்க முடிகிறது. இரவு கை விளக்கின் வெளிச்சம் முகத்தில் பளிச்சிட அவன் தாயிடம் கூறுவது அவன் காதுகளிலும் தெளிவாகக் கேட்கும். "அம்மா! நாங்களும் ஒரு நாளைக்கு வீடு கட்டுவம். இரண்டு அறை ஒரு ஹோல், குசினியோடை கட்டுவம்" அப்படிச் சொல்லும் போது அந்த குழந்தை முகத்தில் ஒரு மலர்ச்சி இருக்கும். வீடு பற்றிய கனவுகள் இவனுக்கும் வரத்தொடங்கிவிட்டது. பதினான்கு வயதில் கனவு காண ஆரம்பிக்கும் மகனைப் பார்க்கையில் தன் இளம் வயசுக் காலங்கள் அவன் நினைவுக்கு வந்தது. தன்னைப் போல் அல்லாமல் பிள்ளையின் கனவுகள் ஒரு நாளைக்கு சாத்தியப்பட வேண்டும். என்று மனதார நினைத்துக் கொண்டான். பிள்ளை மீதும் அவன் உழைப்பின் மீதும் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. நிச்சயம் ஒரு நாள் சாதிப்பான். ஆழமாய் ஒரு பெருமூச்சு எழுந்து அடங்கியது.

வீடு பற்றிய கனவுகள் இனிமேல் அவனுக்கு வராமலே போகலாம். ஆனாலும் அவனுக்கு அதுபற்றிய கவலையும் வரப்போவதில்லை.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு துண்டுக்காணி"

க.வைரமுத்து, புளியம்பொக்கணை.
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
(கல்வி முகாமைத்துவம்),
முன்னாள் வட பிரதேச அனர்த்த முகாமைத்துவ,
இணைப்பாளர்,

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளின் நடுப்பகுதியில் கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் கீழ் இயங்கிய காலப்பகுதி அப்போது கண்டாவளைப்பிரதேசம் கரைச்சி காரிய அதிகாரியின் "டி.ஆர்.ஓ" நிர்வாகத்தில் இணைந்திருந்தது.

அமரர் மதிப்பிற்குரிய "இ.யோகநாதன் சி.ஏ.எஸ்". அவர்கள் காரிய அதிகாரியாக இருந்தார். பின் நாளில் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றார். அக்காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்தவர், அனைவரது மதிப்பிற்கும் உரிய உயர் திரு."வேணன் அபய சேகரா" அவர்கள். கூடிய அதிகாரங்கள் உடையவராக விளங்கினார்.

தற்போது கிளிநொச்சி கச்சேரி இயங்குமிடத்தில் ஒரே ஒரு கட்டிடம்தான் இருந்தது. அது தற்போது உலக உணவுத் திட்ட அலுவலகமாக இயங்குகின்றது. இதில் அப்போது கிளிநெர்ச்சி மாவட்டக் காணி அலுவலகம் இயங்கியது. உருத்திரபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை, தருமபுரம், விசுவமடு ஆகிய குடியேற்றத்திட்டங்கள் மத்தியவகுப்பு, கீழ்தர மத்திய வகுப்பு நான்கு ஏக்கர் திட்டம், கிராம விஸ்தரிப்பு திட்டம், படித்த வாலிபர்திட்டம் ஆகியன செயல்படுத்திய காலம் ஆகையால் காணி சம்மந்தமான பிரச்சனைகளுக்கு மக்கள் இங்கேயே வந்து தீர்வு கண்டனர்.

அப்போது பெருமதிப்பிற்குரிய "என். ஜெகநாதன்" அவர்கள் சிரேஸ்ட மாவட்ட காணி உத்தியோகத்தராகவும் வட்டக்கச்சி குடியேற்ற உத்தியோகஸ்தராக இருந்த திரு.எஸ் துரைராச சிங்கம் உதவி மாவட்ட காணி உத்தியோகஸ்தராகவும் பணிபுரிந்தனர். பின்னர் உயர் திரு .என். ஜெகநாதன் அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது அரசாங்க அதிபராக விளங்கியவர்.

மத்திய வகுப்புத்திட்டம் வருமான வரி கட்டுபவர்கள் அல்லது நான்காம் இலக்கத்தில் (1000/-) ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளத்தை எடுப்பவர்களுக்கே வழங்கப்பெற்றது. இக்காணிகள் அடர்ந்த காடாகவும் 10 ஏக்கர்களாகவும் இருந்தது. இத்திட்டங்களில் காணி வழங்கப்பட்டவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பெற்றிருந்தது.

அனேகமான தமிழ் உயர் அதிகாரிகள் வருமான வரி கட்டுபவர்கள் அக்காணிகளை பெற்றிருந்தனர். அவர்களினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காணிகளின் காட்டையழித்து துப்பரவு செய்து சிலவருடங்கள் விவசாயம் செய்து வந்தனரேயோழிய தொடர்ந்தும் அவர்களினால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை. குறிப்பாக மலேரியா நோய்தாக்கம், போக்குவரத்து வசதியின்மை.

காட்டுமிருகங்கள் விசஜந்துக்களின் தொல்லை, பயிரழிவு போதிய வருமான மின்மை போன்றவையே இதற்கு முக்கிய காரணிகளாகும்.

இதனால் பலர் இம்மத்திய வகுப்புத்திட்ட காணிகளை பணத்தை வாங்கிக்கொண்டு இங்குள்ளவர்களுக்கு வழங்க முன்வந்தனர். இக்காணிகளை வாங்குபவர் தனது பெயருக்கு போமிற்றை மாற்றுவதனால் வாங்குபவர், கொடுப்பவர் பல நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியவர்களாக இருந்தனர். காணிவாங்குபவர் ஒரு வகையான படிவமும் கொடுப்பவர் ஒரு வகையான படிவமும் நிரப்பிக்கொடுத்த பின் காணி வாங்குபவருக்கு சம்மந்தமான சகல விபரங்களுக்கும் குறிப்பாக வருமான வரி கட்டுதல் கட்டத்தகமை உடையவர் அல்லது ரூபா 1000/- மேற்பட்ட சம்பளம் பெறுபவர் போன்ற விபரங்களை வாங்குபவர் வதியும் கிராம அதிகாரி, அப்பகுதி காரிய அதிகாரி டி.ஆர்.ஓ ஆகியோரால் உறுதிப்படுத்தி மாவட்ட காணி அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும். காணி கொடுப்பவரது விபரங்களும் உறுதிப்படுத்தி காணி அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். அனைத்தும் நிறைவு காணப்பட்டால் மாத்திரமே அரசாங்க அதிபரின் ஒப்பத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அரசாங்க அதிபர் மாதம் ஒரு தடவை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி காணி அலுவலகத்திற்கு வந்து ஒப்பமிடுவார்.

நான் பாடசாலையை விட்டு விலகிய பின் தொழில் வாய்ப்பு ஏதும் கிட்டாத நிலையில் கமச் செய்கையை மேற்கொள்ள வேண்டிய நிலையிலிருந்தேன். நான் விவாகமாகி இருந்தமையால் வருமான மீட்ட வேண்டிய அவசிய தேவையிருந்தது. எமது தாயாரினால் 2 ஏக்கர் காணி, உழவு மாடு, கலப்பை என தனிக்குடித்தனம் நடத்துவதற்கு வேண்டிய அனைத்தும் வழங்கியிருந்தார். இக்காணி போதாமையினால் எனக்கு தெரிந்த ஒருவரிடமிருந்து ரூபா ஐயாயிரம் கொடுத்து புளியம்பொக்கணை மத்திய வகுப்புத்திட்டத்தில் பத்தேக்கர் காணி வாங்கியிருந்தேன். இதற்கு முன் கூறியவாறு உரிய படிவங்களை நிரப்பி அனுமதிக்கும் விண்ணப்பித்திருந்தேன். உத்தியோகம் இல்லாமையால் வருமான வரி கட்டும் தகுதி இல்லா இருந்தமையினால் இக்காணி மாற்றம் செய்ய முடியாது; என ஒருமாதத்தில் பதில் கிடைத்தது. அன்றைய நாளில் ஓர் கடிதம் 5 சத முத்திரையிடப்பட்ட "போஸ்காட்" ஆகவிருந்தாலும் நாலாம் நாள் அல்லது ஐந்தாம் நாள் நம்பியிருக்கலாம் பதில்கிடைக்குமென.

இதன் பிரதி காணிக்காரனுக்கும் அனுப்பியிருந்தமையால் அவர் இக்காணியை விட்டு விலகுமாறு பெற்றபணத்தை காலக்கிரமத்தில் தருவதாகவும் கூறி என்னுடன் முரன்படத்தொடங்கிவிட்டார். ஒரு வழியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. அக்காலத்தில் பாடசாலை அதி பரே அனைத்தும் தெரிந்தவராக மக்களால் கருதப்பட்டமையால் அவருடன் அணுகியும் பலன் கிட்டவில்லை.

நாமே "டி.எல். ஓ"வுடன் நேரடியாக சந்தித்து தீர்வு காண்பது என முடிவுக்கு வந்தேன். புளியம்பொக்கணைச்சந்தி யிலிருந்து கிளிநொச்சிக்கு வானுக்கு 50 சதம். தருமபுரக்குடியேற்றத்தின் பின், இரண்டு தட்டிவான்களே கிளிநொச்சிக்கான சேவையிலிருந்தது. வெளிக்கண்டல் சந்தி க்கு அப்பால் "சி.ரி.பி பஸ்" ஓடுவதில்லை. கிளிநொச்சி போக வர ஒரு ரூபா. மதிய சாப்பாடு 50 சதம். மொத்தமாக ரூபா 1.50 சதம் செலவாகும். இதனை விட வீட்டிலிருந்து புளியம்பொக்கணை சந்தி நான்கு மையில் நடந்தே செல்ல வேண்டும். இவ்வாறு பல நாட்கள் கவலையுடன் இக்காணிகந்தோருக்கு அலைந்தேன். இக்கட்டிடத்திற்கு வெளியே வாங்கு போடப்பட்டிருந்தது. அதில் காலையிலே வந்து அமர்ந்து விடுவேன்.

இக்காணி மாற்றங்களுக்கு பொறுப்பாக இருந்தவர் திரு.எஸ்.துரைராசசிங்கம் அவர்களாவார். ஓர் முற்கோபி அவர் அங்குள்ள பணியாளர்களிடம் சத்தம் போட்டு கோபித்து நடந்து கொள்வது என்னை மிகவும் பயமுறுத்தி யது. அவரை சந்திப்பதற்கு வெளிவாசல்வரை செல்வேன். இச்சத்தங்களைக் கேட்டதும் பயத்தி னால் இவரை சந்திக்காது மாலையிலே வீடு திரும்பிவிடுவேன். இவ்வாறு பல நாட்கள் இக்கந்தோருக்கு அலைக்களிந்தேன்.

இவர் காலையில் "யாழ்தேவியில்" வந்து பிற்பகல் 4.00 மணிக்கு ""17 up Train" ல் செல்பவர் என இவ் அலைகளிந்த காலத்தில் கண்டு கொண்டேன். ஒரு வெள்ளிக்கிழமை இவரை சந்திக்க முயன்றும் பலனின்மை யால் கவலையோடு கச்சேரிக்கு முன்பிருந்த பஸ்தரிப்பு நிலையத்தில் சாவகச்சேரி வீட்டிற்கு செல்லும் நோக்குடன் நின்றேன். டி.எல்.ஓ துரைராசசிங்கம் அவர்கள் அன்றைய 17 up Train னை தவறவிட்டமையால் பஸ் தரிப்பு நிலையத்திற்கு வருகை தந்து கொண்டிருந்தார்.

இது ஓர் தக்க தருணம் என கருதி, அக்காலத்தில் நீதவானாக இருந்தாலென்ன உயர் அதிகாரிகளாக இருந்தால் என்ன நாதன் அண்ணை (கச்சேரி விமலநாதன் தந்தை)யின் காரையே மிக நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்பதனால், அவர்களினால் வாடகைக்கு பிடிப்பதனால், இக்காரிலேயே இவர் வருவார் என நம்பி, உடனடியாக கார் நிற்கும் இடத்தி ற்குச் சென்று, யாழ்ப்பாணம் செல்ல Hire செய்து யாழ்ப்பாணம் போவது போல் பஸ்ராண்டில் மறித்து, "Sir யாழ்ப்பாணம் செல்கின்றேன், விரும்பினால் வரலாம்" எனக்கூறினேன்.

""Train" ஐ விட்ட கவலையில் நின்றவர் உடனே சம்மதித்து வந்தார். நான் முன் சீற் கதவை திறந்து அவரை முன்சீற்றில் இருக்கவிட்டு பின் சீற்றில் ஏறிக்கொண்டேன். "கார்" ஆனையிறவைக்கடந்து செல்கின்றது. Sir என்னுடன் கதைப்பார் என எதிர்பார்த்தேன். அவர் கதைக்காமல் நான் கதைக்க பேசிவிடுவாரோ என்ற பயம். எழுதுமட்டுவாழ் கழிந்து ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் (மிருசுவில் படித்த பெண்கள் திட்டத்திற்கு திரும்பும் சந்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் போது "தம்பி நீ எங்கே போகிறாய்" எனக் கேட்டார்.

அப்போது என் கஸ்ர நிலையைக் கூறி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவரிடம் கமம் செய்ய காணியில்லாமையால் பத்தேக்கர் காணி ரூபா ஐயாயிரம் கொடுத்து வாங்கியதை தற்போது அக்காணி எனது பெயருக்கு மாற்றம் செய்ய முடியாது என "டி.எல்.லோ." அறிவித்தமையால் அவரிடம் அப்பணத்தை கேட்டு பல தடவைகள் சென்றுவிட்டேன். இன்று இறுதித்தவணை சொல்லியுள்ளார். இக்காசினால் எனது குடும்பத்திற்குள்ளும் பிரச்சனை. சீதனக்காசில்தான் இதனை வாங்கியது. போன்ற பல விடயங்களை மனமிளகக் கூடியதாக கூறினேன். "இன்று அவர் காசு தராவிட்டால் ஒரு முடிவுடன் தான் வருவது என செல்கின்றேன்". ஒரு சண்டித்தனம் போன்ற கதையையும் கூறினேன்.

அவர் எதுவும் கூறாமல் முன்னுக்கு திரும்பிவிட்டார். கார் சாவகச்சேரியிலுள்ள எனது வீடும் கழிந்து செல்கின்றது. அவர் ஒரு பதிலும் சொல்லவில்லை என்ற கவலை. அரியாலை மாம்பழம் சந்திக்கு சற்று முன் அவர் திரும்பி தம்பி, "நீ அவனுடன் சண்டை போடாதே. காசு தரவிட்டால் "உனக்கு கிடைத்த காணி மாற்ற முடியாது" என்ற கடிதத்துடன் திங்கட்கிழமை கந்தோருக்கு வா". என்னை இந்தச்சந்தியில் இறக்கிவிடுமாறு கேட்டார். இல்லை! இல்லை! நான் உங்களை வீட்டில் விடவே விரும்புகின்றேன், என்றேன். அவரும் ஒருவாறு சம்மதித்து சந்தியால் திரும்பி கொழும்புத்துறை நோக்கி கார் செல்கிறது. யோகர் சுவாமியின் இடத்தில் நிறுத்தச் சொல்லி அவரை வணங்கச் சென்றார். நானும் அவருடன் கூடச்சென்று வணங்கினேன்.

யோகர் சுவாமி உடனே அவரைப்பார்த்து "எடே துரை இவன்ரை விடயத்தை அலைக்களிக்காமல் முடித்துக் கொடு" என இறை வாக்குப்போல கூறினார். யோகர் சுவாமியைப் பற்றி கேள்விப்பட்டு இருக்கிறேனே ஒழிய நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் அன்றுதான் கிடைத்தது நான் அதிர்ந்து விட்டேன். இவர் எதுவும் கூறாமல் சிரித்துக்கொண்டு காரில் வந்தமர்ந்து கொண்டார். கார் அவர் வீடு நோக்கி செல்கிறது வீட்டு வாசலில் அவரது மனைவி குங்கும பொட்டுடன் கணவனது வரவை எதிர்பார்த்துக்கொண்டு நின்றார். அவர் காரினால் இறங்கி, என்னை தான் ரெயினை தவறவிட்டமையையும் கூட்டிவந்த கதையினையும் கூறினார். அப்போது அந்த பெண்மணி என்னையும் "ரீ" குடித்துச் செல்லுமாறு கூறினார். ரீயை தந்துவிட்டு தன் கணவரிடம் என்னை ஏன் யாழ்ப்பாணம் வந்தது?. என வினாவினார். நான் கூறிய அனைத்தையும் தன் மனைவிக்கு கூறவே, அவர் தம்பியின் அலுவலை செய்து கொடுங்கோவன் எனக்கூறிய போது யோகர் சுவாமியும் அவ்வாறே கூறியுள்ளார். எனக்கூறி, எனக்கு போய்வர விடையளித்தார்.

நான் காரில் சாவகச்சேரி வீட்டிற்கு வந்து 100/-யை நாதன் அண்ணையிடம் கொடுத்த போது 10/- தந்தார். அடுத்த திங்கட்கிழமை காலை கிளிநொச்சி காணி அலுவலகத்திற்கு வந்த போது அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிபடத்தைக்கும்பிட்டுக்கொண்டு இருந்தார்.

வழமைபோல வெளிவாங்கில் இருந்தேன். சிறிது நேரத்தின் பின் அவரிடம் சென்ற போது முன் கதிரையில் அமரச்செய்து லிகிதரை அழைத்து 164ஆம் இலக்க கோவையை கொண்டுவருமாறு பணித்தார். இந்த இடைவெளியில் காணிக்காரருடன் நடந்த விடயங்களை கேட்டு அறிந்து கொண்டார்.

கோவை வந்ததும் மாற்ற முடியாதென வந்த கடிதத்தையும் கிழித்து "டஸ்பின்னில்" போட்டார் என்னிடம் இருந்த போமிற்றிலும் உரிமை யாளர் பெயரை சிவப்பு மையினால் வெட்டி தனது கையொப்பத்தை இட்டு ஒரு பிரதியை என்னிடம் தந்து," இவை யாவும் யோகரின் கட்டளை". உனது இறைபக்தி. எனக்கூறி நீ அடிக்கடி எனது வீட்டுக்கு வரவேண்டும். எனவும் கேட்டுக்கொண்டார்.

அவருக்கு பிள்ளைகள் இன்மையால் அதன்பின் நான் அவரது வீட்டுப் பிள்ளையானேன். அவரது வீட்டு சகல விடயங்களும் நானே நடாத்தி வந்தேன். எனது கமச் செய்கைக்கு கூட பண உதவிகள் புரிந்து வந்தார். முதல் விளைச்சல் நெல் ஒரு மூடை அவருக்கே வழங்கி வருவேன். விடாப்பிடியாக அதற்குரிய பணம் தந்துவிடுவார்.

"யாவும் இறைவனது செயல்" என்றே நம்புகின்றேன். என யோகர் சுவாமி "டி.எல்.லோ." ற்கு கட்டளையிட்டதும் அவரது துணைவியார் அவருக்கு கூறியதும் அக்குடும்பத்துடன் நானும் ஒரு அங்கத்தவராக இணைவதற்கும் நான் வணங்கும் புளியம்பொக்கணை நாகதம்பிரானின் கடாட்சம் என்றே நம்புகின்றேன்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கஞ்சமூதாட்டியும் கோடரிக் கஞ்சியும்"

சு.நேசனா, (தரம் 09),
கிளி/முருகானந்தா கல்லூரி மாணவி,
பெரியகுளம்.

இக்கதை நிகழ்ந்த காலப்பகுதி இரண்டாம் உலக மகாயுத்தம் நிகழ்ந்து முடிவடைந்த காலப்பகுதியாகும். அந்தக்காலப்பகுதியில் வெகுவாக போக்குவரத்து வசதிகளற்றகாலமாகும் போர்வீரன் ஒருவன் போர் முடிந்து தனது சொந்தக்கிராமத்தை நோக்கி கிராமங்களின் ஊடாக கால் நடையாக பயணித்துக்கொண்டிருந்தான். பொழுதுசாய்ந்துவிட்டமையால் தொடர்ந்தும் பயணத்தை மேற்கொள்ளமுடியாத நிலையில் அக்கிராமத்திலேயே தங்கி காலையில் தனது பயணத்தை தொடரத்தீர்மானித்தான். கால் நடைப்பயணத்தால் ஏற்பட்ட களைப்பு, பசி ஆகியவற்றால் வருந்தியவன் தங்குவதற்கு தோதான வீட்டை தேடியவனுக்கு தனியே வசித்துவந்த மூதாட்டி ஒருவரின் வீட்டில் தங்க உத்தேசித்தான்.

தங்க இடம் கிடைத்தது சரி ஆனால் பசியைப் போக்க என்ன செய்வதென்று சிந்தித்தான். அவன் தயங்கியபடி பசியாற ஏதாவது உணவு தரமுடியுமா? என மூதாட்டியிடம் கேட்டான். ஐயோ தம்பி இருந்த சிறிதளவு உணவையும் நான் சாப்பிட்டுவிட்டேன். இனி உணவு தயாரிக்க என்னிடம் அரிசியோ, கோதுமையோ, பால்மாவோ இல்லையெனக் கூறினாள். இந்த மூதாட்டி ஒரு கஞ்சப்பேர்வழியென்பதைக் கண்டு கொண்டவன் தந்தரமாக செயல்பட்டு இவருக்கு ஒரு பாடம் புகட்ட எண்ணிய அவன் சரி பொருட்கள் ஏதும் இல்லை எனக் கூறுகிறீர்கள். கோடரிக்கஞ்சியாவது காச்சிக்குடிப்போம். உங்கள் கோடரியைத்தாருங்களெனக்கேட்டு வாங்கியவன். அதன் பிடியைக்களட்டிவிட்டு கோடரியை நன்கு கழுவிவிட்டு ஒரு பாத்திரத்திலிட்டு அடுப்பில் வைத்து கொதிக்கவைத்தான். சிறிது நேரத்தில் அப்பாத்திரத்திலிருந்து சிறிதளவு நீரை எடுத்து ருசித்துப்பார்த்தவன் இதில் சிறிதளவு உப்புப்போட்டால் சுவையாக இருக்குமெனக்கூற மூதாட்டி உப்புக்கொடுத்தாள் அதைப் போட்டதன் பின் ருசித்துப்பார்த்து விட்டு கஞ்சி உப்புச்சுவையாக இருக்கிறது இதில் கோதுமை போட்டால் சுவையாகவிருக்குமெனக் கூற மூதாட்டி கோதுமையைக் கொடுத்தார் இப்படியே அவன் பால்மா கொண்டுவா. சீனி கொண்டுவா என ஒவ்வொரு பொருளையும் போட்டு தான்ருசித்துப்பார்க்கும் போது மூதாட்டிக்கும் ருசி பார்க்கக் கொடுத்தான். எதுவுமே இல்லையெனக் கூறிய பாட்டி கஞ்சியை ருசித்துவிட்டு இது போலொரு கோடரிக்கஞ்சியை நான் ஒருபோதும் ருசித்து சாப்பிட்டதில்லை நீ திறமைசாலிதான் என அவனைப்பாராட்டினாள். பார்த்தீர்களா ஏமாற்ற நினைப்பவர்களைத்தந்திரமாக ஏமாற்றி காரியம் சாதிப்பார்கள் இவ்வுலகில் உண்டு.

"ஈயார் தேட்டை தீயார் கொள்வார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

அருள்மிகு பரந்தன் சித்திவிநாயகர் ஆலய வரலாறு

திரு.செ.செல்வரட்ணம்,
செயலாளர்,
பரிபாலனசபை.

மேற்படி ஆலயம் கிளிநொச்சி மாவட்டத்தில், அமைந்திருந்த பரந்தன் இரசாயணக்கூட்டுத்தாபனத்தின் முன்பாக "ஏ" ஒன்பது வீதியின் கிழக்கே மேற்குநோக்கிய வாசலுடன் மக்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சிறப்புமிகு ஆலயம் ஆகும். இவ்வாலயம் 1969 காலப்பகுதியில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களது அயராத முயற்சியினால் அமைக்கப்பட்ட ஒன்றாகும்.

1969ம் ஆண்டு பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன இலங்கை வர்த்தக சங்க தொழிலாளர்களும், நிர்வாகத்தினர் களுக்கமிடையே ஏற்பட்ட முரன்பாடு காரணமக 11 மாத காலம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அந்த நாட்களில் ஒரு நாள் திரு. பொன்னையா என்பவர், இப்போது ஆலயம் இருக்கும் இடத்தில் முதற்காலத்தில் ஒரு ஆலயம் இருந்ததாகக் கனவு கண்டுள்ளார். இதை வேலைநிறுத்த ஊழியர்களுடன் கதைத்தபோது அவர்கள், அந்த இடத்தில் ஒரு கொட்டகை அமைத்து பிள்ளையார் மீது பாரிய நம்பிக்கை வைத்து, வேலைநிறுத்தம் சாதகமாக வெற்றியாக முடிந்தால் தாம் ஓர் அழகான ஆலயம் அமைப்பதாக நேர்த்தியும் வைத்தனர். 11 மாதம் கடந்து வேலைநிறுத்தம் வெற்றியடைந்தமை யால், நிர்வாகத்துடன் கலந்துரையாடி, சகல வசதியும் கொண்ட ஆலயமாக அமைத்து, தொழிற்சாலையின் சகலரினதும் வணக்கத்தி ற்கான ஒழுங்குகளையும், நித்தியபூசைக்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டனர்.

ஆலயத்தின் நிர்வாக ஒழுங்குகளை சுலபம ாக நியமம் தவறாது செய்வதை இலகுபடுத்தும் நோக்கமாக ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை அமைக்கப்பட்டது. காலை மாலை நித்தியபூசை ஒழுங்காக நடைபெறுவதற்காக சிவஸ்ரீ குமாரசாமி இரத்தினேஸ்வர குருக்கள் நியமிக்கப்பட்டார். பூசைச்செலவுகளுக்கான நிதி தொழிற்சாலை ஊழியர்களிடமிருந்து மதாமாதம் தலா 10 ரூபா வீதம் பெறப்பட்டது.

நாட்டு நிலமை காரணமாக 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில், தொழிற்சாலை பாரிய தேசத்திற்குள்ளானதால், வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டதுடன், தொழிற்சாலை ஊழியர்கள் தத்தமது ஊர்களுக்குச் சென்றுவிட்டனர். மீண்டும் தொழிற்சாலை இயங்கமுடியாத நிலைமையேற்பட்டதால் ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்கி அவர்களையும் வேலையிலிருந்து நிறுத்தி விட்டனர். இந்நிலையில் கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் நிரந்தர குடி மக்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிய ஒரு சில தொழிற்சாலை ஊழியர்களது அயராத முயற்சியின் பலனாகவும் அயற்சூழலில் உள்ளவர்களது பக்திபூர்வமான செயற்பாடுகளாலும் 2004ஆம் ஆண்டு புனராவர்த்தனமகா கும்பாபிகேம் இனிதே நிறைவேறியது. நித்திய பூசையை சிவஸ்ரீ கு.இரத்தினேஸ்வரக்குருக்களின் மைத்துனர் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் நடாத்தி வந்தார்கள். இக்காலப்பகுதியில் ஒன்பது நிர்வாக உறுப்பினர்கள் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்து நித்திய பூசை ஒழுங்கை திறம்பட நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 2008ஆம் ஆண்டு மக்கள் இடப்பெயர்ந்தமையால்.ஆலயம் பூசைகளின்றிப் பூட்டப்பட்டது. இவ்வாறு மூன்று தடவை இடம்பெயர்ந்தபோதும் தொழிற்சாலை ஊழியர்களதும் கிராம மக்களதும் நம்பிக்கையால் மீண்டும் பூசைகள் இடம்பெற்று விநாயகரின் அருளாட்சி நடக்கின்றது.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு மொழிகள்

கே.எஸ்.சிவஞானராஜா,
கண்டாவளை.

கண்டதெல்லாம் விளையும் கண்டாவளை.
காலமெல்லாம் விளையும் கண்டாவளை.

கிளைகளுக்கு வாழ்வளிக்கும் கண்டாவளை.
கிளிநொச்சிக்கு வாழ்வளிக்கும் கண்டாவளை.

கண்டாவளை நெல்லும், கண்டாவளை மண்ணும்,
காலமெல்லாம் சொல்லும், கலைகளாய் மின்னும்.

அண்டி வந்தாரை அரவணைக்கும் கண்டாவளை.
எண்டிசை வல்லோர்க்கு வரமளிப்பதும் கண்டாவளை .

துண்டு துண்டாக காணி கிடைத்தாலும்,
வெண்டு நீ வாழ்வாய் கண்டாவளையில்.

காத்திரமான வீட்டுக்கு கண்டாவளையை நாடு.
பண்டாரவளைக்கும் கண்டாவளைக்கும் பயமில்லாமல் வாழப் போ.
மருந்துக்கு தூதுவளை, விருந்துக்கு கண்டாவளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வளை ஓசை சிறப்புற வாழ்த்துகின்றோம்!"

நிலா உணவகம்

சுகாதார முறைப்படி சுத்தமாகவும் தரமானதாகவும் தயார் செய்யப்பட்ட மதிய உணவுடன் கொத்து, முட்டைக்கொத்து, மற்றும் சிற்றுண்டி வகைகளையும் சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்.

ஓடருக்கு சிறந்தவகையில் உணவுகளை செய்து பெற்றுக்கொள்ளலாம்.

முல்லைவீதி, வெளிக்கண்டல்.

"வளை ஓசை நாதம் ஒலிக்கட்டும்!"

நாகதம்பிரான் அரிசி ஆலை



உரிமையாளர்: சிறி

புளியம்பொக்கணைச் சந்தி,

புளியம்பொக்கணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளை ஓசை மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்"

கடந்த முப்பது வருடங்களாக வன்னி விவசாயிகளின் நன்மதிப்பை வென்ற "கேலிஸ் அக்குறோ" நிறுவனத்தினர் தமது உற்பத்திப்பொருட்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்.

கதிர்வேலன்

விவசாய இரசாயனங்கள், உரவகைகள், விசேட உரவகைகள், விதைப்பொருட்கள், கால்நடை மருந்துகள், அறுவடை இயந்திரங்கள், தெளிகருவிகள் இவற்றுடன் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு சம்மந்தமான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

A9 வீதி, கிளிநொச்சி

"வளை ஓசை நாதம் ஒலிக்கட்டும்!"

செல்வமலர் காட்டையார்

உரிமையாளர்: மார்க்கண்டு சிறிகணநாதன்

வெளிக்கண்டல் சந்தி,
கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலை வாழ வழி வகுத்த கண்டாவளை"

வெளியீட்டுக் குழு,
முத்தமிழ்க் கலாமன்றம்,
கண்டாவளை.

வந்தாரை வருகவென வரவேற்று சிந்தை மகிழச் சிறப்பாக உபசரிக்கும் செந்தாமரை நிறை கண்டாவளைக் கிராமமானது தனக்கென தனித்துவமான கலைப் பாரம்பரியங்களைக் கொண்டு விளங்குகின்றது. இக்கிராமமானது பல நூற்றாண்டுகளையும் கடந்த பழம் பெரும் கிராமமாகும். ஆங்கிலேயர் ஆட்சியிலும் கூட தமது கலைப் பாரம்பரியங்களைக் கட்டிக்காத்த பெருமை இக்கிராமத்தினையேசாரும். இதற்கு 05.10.2013 அன்று 118வது அகவை கண்ட கண்டாவளை ம.வி. சான்றாக அமைகின்றது. இது 1896ஆம் ஆண்டு "ஆறுமுக வித்தி யாசாலை" என்ற பெயரோடு தோட்டுபுளியென்று அழைக்கப்பட்ட சந்தையடியிலிருந்து வைத்தியசாலைப் பக்கமாக 500மீற்றர் தொலைவில் சுமைதாங்கி அமைந்துள்ள இடத்தில் இருந்து வந்த இப்பாடசாலை அதே ஆண்டு "வாடியடி" என்னும் இடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. இப்பாடசாலை கலைப்பாரம்பரியத்தை கட்டி வளர்க்கவும், சமய கலாசாரத்தை பேணவும் வழிவகுத்தது என ஆன்றோர்கள் மூலமும், நூல்கள் வாயிலாகவும் அறியமுடிகின்றது.

கண்டாவளைக் கிராமம் மருத நிலம் சூழ்ந்த பிரதேசம் ஆகையால், தொழில் செய்து களைப்படைந்த இம் மக்கள் பொழுது போக்க கலைகளை ஆதாரமாகக் கொண்டார்கள். 1934ற்கு முன்னரே இங்கு கலைக்கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன. 1934ஆம் ஆண்டு கண்டாவளைக் கூகைமாவடிப் பகுதியில் மேடை அமைத்து கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. அத்துடன் இதே பகுதியில் வைரவப்பிள்ளை வளவுப் பிட்டியிலும் மேடை அமைக்கப்பட்டு கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இது மாத்திரமன்றி இங்கு "தூந்தாறு" என்று அழைக்கப்படும் குளத்துப்பிட்டியில் மேடை அமைத்து கூத்துக்கள் நடிக்கப்பட்டுள்ளன. இங்கு அல்லி அர்ச்சனா, பவளக்கொடி, அருச்சுனன் தபசு, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, கோவலன் கண்ணகி போன்ற கூத்துக்கள் இக்கிராம மக்களால் நடிக்கப்பட்டுள்ளன. என முதுபெரும் கலைஞரான திரு.கா.முருகேசு அவர்களிடமிருந்து அறியக்கூடியதாக உள்ளது. கூத்து வடிவங்களுக்கு வித்திட்டவர்களில் இயமன் வேலுப்பிள்ளை, சுமாலி சின்னையா, பவுண் வீரசிங்கம், ஐயாத்துரை, ஆகியோர்களைக் குறிப்பிடலாம். மின் விளக்கு இல்லாத காலம் ஆகையால் காவோலைகள் கொழுத்தி அதன் வெளிச்சத்தில் மேடைக்கூத்துக்கள் நடத்திய பெருமை கண்டாவளைக்கே உரித்தாகும்.

இக்கிராம கலைப்பாரம்பரியங்களில் சிறப்பாக குறிப்பிடத்தக்கது யாதெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கிராமத்துப் பெண்கள் கும்மி, கோலாட்டம் ஆகியவற்றில் சிறந்தவர்கள் கண்டாவளை நாச்சிமார் கோவில், ஐயனார் கோயில் ஆகியவற்றில் கும்மி அடித்து வணங்கிய பின்னரே நெல்விளைவிப்பதையும், அறுவடையையும் மேற்கொண்டனர். என திரு.கா.முருகேசு அவர்கள் குறிப்பிட்டார். அத்துடன் கலையாடும் மரபும் இங்கு காணப்படுகின்றது. ஐயனார், விறுமன், வைரவர், கொம்படி அம்மன் ஆலயங்களில் உடுக்கு, பறை மேளங்கள் இசைக்க கலை (உரு)யாடும் மரபும் கட்டுச் சொல்லும் நிகழ்வும் நடைபெறுகிறது. ஒவ்வொரு சித்திரை பௌர்ணமி தினத்திலும் அன்ன ஊஞ்சல் கட்டி சித்திர புத்திரனார் கதை படித்து வயது வேறுபாடின்றி ஊஞ்சல் ஆடும் மரபு இங்கு காணப்பட்டது. இது "தூந்தாற்று" குளத்து அரச மரத்தடியில் இடம் பெறுவது வழக்கம். தற்போது அரசமரம் குளத்துள் சரிந்து விழுந்தமையால் நடைபெறுவது அருகிவிட்டது.

அத்துடன் கை வைத்தியக்கலைக்கு கண்டாவளை பிரசித்திபெற்ற இடமாக விளங்கியது. பரியாரி சடையர் என்ற பெயரைக் கேள்விப்படாதவர்கள் இருக்க மாட்டார்கள் (தற்போது காலமாகி விட்டார்.) அத்துடன் செல்வரத்தினம், ஐயாப்பா, திருமதி தளையசிங்கம் ஆகியோரும் வேப்பம் இலை கொண்டு அதனை அசைத்து விம் இறக்கும் கலை ஆச்சரியமானதாகவிருக்கும்.

இவ்வாறான கலையம்சங்கள் நிறைந்த இக்கிராமம் கலைமன்றங்கள் ஊடாகவும் தமது கலைப்பாரம் பரியங்களை வளர்த்து வந்தது. 1974இல் காலம் சென்ற குமாரசாமி அவர்களின் தலைமையில் பூமகள் நாடக கலாமன்றம் கலைப்பாரம் பரியங்களைப் பேணிவந்தது. அடுத்து ந.இலிங்கம் என்பவரின் தலைமையில் கலைவாணி கலாமன்றம் அமைக்கப்பட்டு கலை வளர்க்கப்பட்டது.

இம் மன்றம் "மணிமகுடம்" என்ற கூத்து நாடகத்தை அரங்கேற்றியது. 1979 இல் ஞான வைரவர் கலாமன்றம் உருவாக்கப்பட்டு கா.பாலேஸ்வரன் தலைமையில் "உண்மையே உன் விலை என்ன" என்ற நாடகம் அரங்கம் கண்டது. 1980இல் கலை மகள் கலாமன்றம் அமைக்கப்பட்டது. 1990இல் எழுத்தாளர் "குஞ்சரக்கன்று" தலைமையில் கலைக்குழு வளர்க்கப்பட்டு ஒழுக்கம் சார்ந்த கலை நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டும் இரண்டு வரங்கள்" என்ற கூத்து நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

1995இல் "கண்டாவளை" முத்தமிழ் கலா மன்றம் அமைக்கப்பட்டு பல் துறை சார்ந்த நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன. இவ்வாறாக கூத்து வடிவங்களில் இருந்த இக்கிராமம் கூத்து வடிவங்களில் இருந்து மாறி சமூக நாடக வடிவத்திற்கு மாறியது. நான்கு பக்கமும் இருந்து நிகழ்வினைப் பார்த்து இரசிக்கும் வட்டமேடை அமைப்பினை தற்போது முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளராக விளங்கும் திரு.செ.விந்தன் ஆசிரியர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. இவ்வாறு இடையில் சமூக நாடகங்கள் ஊடாக சமூகம் சார்ந்த விடயங்களை மக்களுக்கு செய்தி யாக சொல்லி வந்தன பின்னர் மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து வடிவங்களைத் தழுவத் தொடங்கின. கொம்படியம்மன், மல்லிகையம்மன், தேற்றாவடிப் பிள்ளையார், போன்ற ஆலயங்களில் கண்டாவளை முத்தமிழ் கலாமன்ற இளங்கலைஞர்கள் இணைந்து காத்தவராயன் கூத்தினை 2003.2004.2005 காலப்பகுதியில் அரங்கேற்றினார்கள்.

இவ் வாறாக கலையுடன் கூடிய மண் வாசனை கொண்ட இக்கிராமத்தில் இசை, நடனம்,ஓவியம்.சிற்பம், கட்டிடக்கலை, கராத்தே போன்ற கலைகளும் வளர்க்கப்பட்டன. 2011 ஆண்டில் "கலைக்கிளி" மற்றும் "கலைஒளி" விருது பெற்ற திரு.சி.கனகராசா அவர்களால் ஆர்மோனியம் கலையும், திரு.கிருஷ்ணசாமி என்பவரால் உடுக்குக்கலையும் பேணப்பட்டுவருகின்றது.2005 காலப்பகுதியில் கராத்தே கலையும் கண்டாவளையில் வளர்க்கப்பட்டு வந்தது. முத்தமிழ் கலாமன்றம் 2004இல் வவுனியா வரை வில்லிசை நிகழ்வை அரங்கம் காண வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவ் வாறாக கலை வளர்த்த கண்டாவளைக் கிராமம் இன்றும் கலைப்பாரம்பரியங்களைப் பேணி வருகின்றது. கலை வாழும் வரையும் கலைஞர்களும் வாழ்ந்து வளம் தருவார்கள். பண்பாட்டையும், கலையையும் பேணும் பழம் பெரும் கிராமமான கண்டாவளையானது அன்றுபோல் இன்றும் என்றும் கலை வாழ வழி வகுக்கும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமாற்றம்

செல்வி சமீரா சந்திரன்,
சுண்டிக்குளம் சந்தி,
தருமபுரம்.

அன்று திங்கட்கிழமை சூரியன் வழமை போல் தனது பொற்கரங்களை பரப்பிய வண்ணம் வானிலே உலாவரத் தொடங்கினான். அவனது வரவைக்கண்ட தாமரை மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்றதுடன், பனித்துளிகள் மறையத் தொடங்கின. பறவைகள் இரைதேடச் சென்றன. மாணவர்கள் பட்டுப் போன்ற வெள்ளை நிற ஆடை அணிந்து பாடசாலைக்குச் சென்றனர். இவ்வாறு பொழுது புலர்ந்த வண்ணம் காணப்பட்டது. இரு புறமும் அழகிய பனைமரங்கள் படைவீரர்கள் போல் அணிவகுத்து நிற்க பூமரங்களிலே பூக்கள் பூத்துச் சொரிய எங்குமே பச்சைக்கம்பளம் விரித்தாற் போல் வயல்வெளிகள், பெயறிற்கேற்றாற் போலக் காணப்பட்டது அந்தக் கிராமம். அது தான் வயலூர் எனும் அழகிய சிறிய கிராமம்.

அக்கிராமத்திலே வசித்துவருபவன்தான் கணேசன் எனப்படுகின்ற கணேஸ் அவன் மனைவி பெயர் தேவகி. அன்பிற்கு மூன்று குழந்தைகளுடன் தமது வறுமை நிலையை மறந்து வாழ்பவர்கள். இவர்களிலே செல்லப்பிள்ளை இறுதி மகளான வதனா படிப்பிலே கெட்டிக்காரி. ஏனைய இரண்டு பிள்ளைகளும் யுத்தத்தின் காரணமாக தமது படிப்பை இடையிலே நிறுத்திவிட்டார்கள். அவர்கள் படிப்பையே இடை நிறுத்தினாலும் தமது அன்பை இடைநிறுத்தவில்லை. அந்தக் குடும்பத்தில் அன்பிற்கு ஒரு போதும் குறைவில்லை. தமது தங்கை நன்றாக படிக்க வேண்டும் படித்து நல்லநிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக தங்களால் இயன்ற உதவிகளை செய்து வருபவர்கள். அன்றும் வழமைபோல் கடிகாரம் 4.00 மணியைக் காட்டியது. அவசர அவசரமாக எழுந்த கணேஷ் தன் மனைவியையும் தட்டி எழுப்பி விட்டு வேலைக்கு புறப்படத் தொடங்கினார்.

தேவகி வழமைபோல மாட்டுத்தொழுவத் திற்குச் சென்று பாலெடுத்தாள். பொழுது விடிந்ததும் இன்னும் தனது மகள் வதனா எழும்பவில்லையே என்று உணர்ந்து "வதனா.. வதனா..." "விடிந்து விட்டது அம்மா, நேரம் போகுது பள்ளிக்கூடம் போகணும் தானே எழும்பம்மா என செல்லமாக எழுப்பினார். "பொறுங்கோ அம்மா நான் எழும்புவன்தானே ஏன் கத்துறியள்" எனச் சிணுங்கிய வண்ணம் கிணற்றடியை நோக்கிப் புறப்பட்டாள். அவசர அவசரமாகக் குளித்துவிட்டு பாடசாலைக்குப் புறப்பட்டவள் அம்மா செல்லமாகக் கொடுத்த பசுப்பாலை அருந்திவிட்டு பள்ளி நோக்கி கையிலே புத்தகங்களைச் சுமந்தபடி காலிலே செருப்புடன் நடக்கத்தொடங்கினாள். வதனா பாடசாலையிலேயே நல்ல பெயர் பெற்றவள். வகுப்பில் சிறந்த கெட்டிக்காரியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவதோடு, ஆசிரியர்கள், அதிபர் மத்தியில் நல்ல பெயர் பெற்றவள். இவள் படிக்கும் பாடசாலையில் தரம் 11 வரை மாத்திரமே வகுப்புக்கள் உண்டு. இவள் கல்வி பயிலும் அதே வகுப்பில் தான் சாந்தியும் படிக்கின்றாள். இவர்கள் இருவரும் நல்ல நண்பிகள்.

க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் இருவருமே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். தொடர்ந்து மேல்படிப்பிற்காக மேல்நிலைப்பாடசாலையில் கல்விகற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட. வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையே மிக நீண்டதூரம் காணப்பட்டதால் அவர்கள் இருவரும் விடுதியொன்றிலேயே தங்கவேண்டியிருந்ததோடு அதற்காக அதிகளவு பணமும் தேவைப்பட்டது. வதனாவிற்கு தனது வீட்டின் வறுமை ஒரு புறம், மறுபுறம் தனது குடும்பத்தினரையும் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. தனது நண்பி சாந்தியின் துணையுடன் மேல்நிலைப் பாடசாலையில் விஞ்ஞானப்பிரிவில் கல்விகற்று வந்தாள். அப்பாடசாலையிலே வதனாவும் சாந்தியும் தான் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய மாணவர்கள் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தினமும் விதவிதமான ஆடைகளுடனும் கையிலே தொலைபேசியுடனுமே திரிபவர்கள். அவர்களை பார்க்கும் போதெல்லாம் வதனாவின் மனம் பெரிதுமே துன்பமடைந்தாலும் தான் நன்றாகப்படிக்க வேண்டும், வைத்தியராக வர வேண்டும் என்ற இலட்சியத்தோடு படிப்பைத் தொடர்ந்தாள்.

நாட்கள் கிழமைகளாக நகர கிழமைகள் மாதங்களாக நகர மாதங்கள் ஆண்டுகளாக ஓடின. உயர்தரப்பரீட்சையும் நெருங்கிக்கொண்டிருந்தது. இதனால் வதனா மாலை நேரவகுப்பிற்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. தனது வீட்டிற்கு கடிதம் ஒன்றை அனுப்பினாள். அதிலே மாலை நேரவகுப்பிற்கு மாதாந்தம் பணம் அனுப்புமாறு எழுதியிருந்தாள். பெற்றோரும் மகளின் படிப்பிற்காக இரவு பகலாக கஸ்ரப்பட்டு மாதாந்தம் பணம் அனுப்பினார்கள்.

மாலை நேரவகுப்பிற்கு தினமும் சென்று வந்த வதனாவுக்கு அங்கு கல்விகற்க வரும் மாணவர்கள் கொண்டுவருகின்ற கைத்தொலைபேசி மீது ஆசை ஏற்பட்டதுடன், அவளது மனதையும் பெரிதும் புண்படுத்தியது. தனது பெற்றோருக்கு "அம்மா மாலை நேரவகுப்பிற்கு பணம் அதிகம் கேட்கிறார்கள் நான் போக வில்லை" என்று ஒரு கடிதம் எழுதி அனுப்பினாள். அவர்களும் கல்விக்காகத்தானே என வட்டிக்குக் கடன் வாங்கி அனுப்பினார்கள். அவர்களும் தமது பிள்ளைக்காகத்தானே, அவள் வேலை செய்து கடனை கொடுப்பாள்தானே என்று நினைத்தனர்.

ஆனாலும் அந்தப்பணம் தமது மகளை திசை திருப்பும் என்று அவர்கள் நினைக்கவில்லை. அந்தப்பணத்திலே தனது நண்பிக்கும் தெரியாமல் ஒரு கைத்தொலைபேசி ஒன்றை வாங்கினாள். அன்று தொடக்கம் அவள் படிப்பிலே அதிக கவனம் செலுத்தவில்லை. மாலை நேர வகுப்பிற்கு ஒழுங்காக செல்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுடைய மாற்றங்களை அவளது நண்பி சாந்தி தொடர்ந்து அவதானித்தாள். "ஏன் வதனா இப்படிச் செய்கிறாய் உனது பெற்றோர் பாவம் தானே எவ்வளவு கஸ்ரப்பட்டு மாதாந்தம் பணம் அனுப்புகின்றார்கள். நீ அந்தப் பணத்தை தொலைபேசிக்கட்டணத்திற்காக செலவிடுகின்றாயே?" என்று கேட்டாள். அதற்கு வதனா "நீ எனக்கு புத்திமதி கூறத்தேவையில்லை" என அவளது கருத்தை உதறித்தள்ளியதோடு நண்பியையும் உதறித் தள்ளி நட்பையே பிரித்தாள்.

நாளுக்கு நாள் அவளது மனம் தொலைபேசி மீது காணப்பட்டதே தவிர கல்வியின் மீது காணப்படவில்லை. நண்பி சாந்தி எவ்வளவுதான் மீண்டும் மீண்டும் அறிவுரை கூறினாலும் அவள் அதை பெரிதுபடுத்தவில்லை. வதனாவின் தொலைபேசிக்கு ஒரு புதிய இலக்கத்தில் தொடர்ந்து அழைப்பு வந்தது. அந்த அழைப்பைத் தொடர்பு கொண்டாள் வதனா. அந்த அழைப்பு ஓர் ஆணின் அழைப்பாக இருந்தது. நாட்கள் நகர நகர இருவருக்குமிடையே தொடர்புகளும் அதிகரித்தன. அன்று தீடிரென அந்த நபர் அவளை ஓர் பூங்காவிற்கு வருமாறு அழைப்புவிடுத்தான். அவளும் அவன் கூறிய அந்தப் பூங்காவிற்கு சென்றாள். பரீட்சை நெருங்க நெருங்க அவளது பெற்றோரும் அவளை சந்திப்பதற்காக விடுதிக்குப் புறப்பட்ட அவர்கள் களைப்படைந்து ஓரிடத்திலே தங்க முயன்றனர். என்ன ஆச்சரியம்! திடீரென அவளது தந்தையின் உணர்வுகள் எல்லாம் மரத்துப்போனது. காரணம் தன் மகள் வதனா தன்னை மறந்து ஓர் இளைஞனுடன் நெருக்கமாக கதைத்துக்கொண்டிருப்பதை கண்டதுதான். உடனே அவர் விடுதிக்குச் சென்று அதிபரைச் சந்தித்தார். அதிபரும் அவளது கல்வியின் நிலை நாளுக்கு நாள் குறைந்து செல்கின்றது என்று கூறினார். அவளது தந்தை அவளது அறைக்குச் சென்று கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டு சென்றார். அறைக்குச் சென்ற வதனா மேசைமீது வைக்கப்பட்டுள்ள கடிதத்தை ஆவலுடன் பிரித்துப்பார்த்தாள். அவளுக்கு ஓர்அதிர்ச்சி காத்திருந்தது. காரணம் அந்தக்கடிதம் அவளது தந்தையால் எழுதப்பட்டிருந்ததுதான்.

அதிலே அவர் "வதனா உனக்கு நாங்கள் என்ன துன்பத்தைக் கொடுத்தோம். எனது உடம்பை சாறாகப்பிழிந்து இரவு பகலாக கஸ்ரப்பட்டு உன்னை படிக்க வைத்ததற்கு இதோ நீ எமக்கு தந்த மதிப்பு" என்று எழுதியிருந்தார். கடிதம் வாசித்து முடித்ததும் அந்தக்கடிதம் கண்ணீரால் நனைந்திருந்தது. வதனா தனது தவறை உணர்ந்தாள். சாந்தியிடமும் தனது பெற்றோரிடமும் மன்னிப்புக் கேட்டுவிட்டு மீண்டும் அல்லும் பகலுமாக கல்வியைத் தொடர்ந்தாள். தொட்டுவிடும் தூரத்தில் வானம் தெரிந்தது அவளுக்கு.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வளை ஓசை சிறப்புற வாழ்த்துகின்றோம்!"

அம்மன்

கட்டடப் பொருள் வாணிபம்

முல்லைவீதி, தருமபுரம்.



"வளை ஓசை நாதம் ஒலிக்கட்டும்!"

சகலவிதமான பாடசாலை உபகரணங்கள்
புத்தகங்கள்,போட்டோக்கொப்பி, கவரிடல், மற்றும் அழகு
சாதன பொருட்களுக்கும் நாட வேண்டிய ஒரே இடம்

அருவி மல்ரி சென்றர்

முல்லைவீதி, பரந்தன்.

077 88 60 973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளை ஓசையின் நாதம் நாற்றிசையும் பரவ வாழ்த்துகின்றோம்"

R.V. பந்தல் சேவை மற்றும் அழகு சாதன பொருட்கள் விற்பனை நிலையம்



369/6,முல்லைவீதி,
தருமபுரம்.



"வளை ஓசை சிறக்கட்டும்"

நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

தினேஸ் நகைப் பூங்கா

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் "22" கரட்டில் செய்து வழங்கப்படும்.



உரிமையாளர் ஆர்.றஞ்சன்

372/7, முல்லை வீதி, தருமபுரம். 026 32 07 172



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்தித்தால் என்ன"

திருமதி மாதினி சுரேந்திரன்,
குமரபுரம், பரந்தன்.

அன்புத் தமிழா!! நாம் இன்னும் என்ன
ஆரிய ஆதிக்க அடமானப் பொருளா!
சத்திய சோதனை தமிழர் நமக்கா
சித்தத்தை திறந்து நீ சிந்தி ஒருக்கா
இத்தனைக்கும் வேறு எவரோ பொறுப்பா
இதனை நாம் இன்னும் உணராதிருப்பதேன் மறுப்பா!

உந்தன் உழைப்பினில் உயர்ந்தாய் நீயே
கல்வி அறிவினில் திகழ்ந்தாய் தினமே
அரும் கலைகளை பயின்றாய் முறையே.
இந்த அகிலத்தில் அகதியாய் இனமே
இன ஒற்றுமை மறந்தாய் மனமே
தமிழ் உரிமையை இழந்தாய் உறவே
இங்கு அழிவது அரும்மொழி தமிழே.....

அன்பின் உறவே எழு!
அனைவர் கரமும் தொடு!
பகை நெருப்பினை சுடு!
இன உரிமையினை எடு!
சொந்த இனத்தை இழந்து தவித்தோமே.
உழைத்ததன் பயனை தொலைத்தோமே.
ஓரின நெறியில் தொடரோமா?
உயர் வழிகளை முனைந்தே நடவோமா?
எம் தமிழினத் தோப்பு அழிவதோ?
வரும் தலைமுறை தான் அதை தாங்குமோ?

நடைமுறை தெரிந்துவிடு!
உயர்வினை அடைந்துவிடு!
மறந்து வாழ்வது ஏற்புடையோ
ஆரியம் திராவிடம் ஒரு முனையோ....
சத்தியசோதனை.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வீடு "

கா.பாலேஸ்வரன்,
கூகைமாவடி, கண்டாவளை.

புளுதி வீதிகளை கிழித்துக்கொண்டு அந்த பஸ் வேகமாக சென்றுகொண்டிருந்தது. தொடர்ச்சியான இடப்பெயர்விற்குப் பின்தன் சொந்த ஊரிற்கு மீளவும் குடியேற வருகிற மக்கள் மத்தியில் ஒரு ஆவலும் பரபரப்பும் காணப்பட்டது. எல்லா இளைஞர் யுவதிகளும் பஸ்ஸின் யன்னல் ஓரமாக எட்டிநின்று தங்கள் ஊர்களின் அடையாளங்களையும் அதன் சிதைவுகளையும் பார்த்துக்கொண்டிருந்தனர். முட்பற்றைகள் படர்ந்து கிடந்த அந்த வீதியை ஊடறுத்துக்கொண்டு பஸ் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. அந்த பஸ்ஸின் ஒரு மூலையில் தன் கண்களிலே நீர்கள் கனத்தவாறு மீனாட்சியும் அவள் இரு பெண் பிள்ளைகளும் ஊரை நோட்டமிட்டவாறே வந்துகொண்டிருந்தனர்.

மீனாட்சியும் அவள் கணவன் ராமுவும் செல்வச்செழிப்போடு வாழ்ந்த ஊரில் இன்று ராமுவை மட்டும் எறிகணை ஒன்றிற்கு மாத்தளனில் இரையாக்கிவிட்டு தனித்தே இன்று வீடு நோக்கி பயனிப்பது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. வேகமாக வந்த பஸ் வண்டி ஓர் சந்தியில் நின்றது எல்லோரும் தம்வீட்டைப்பார்க்கும் ஆர்வத்தில் மள மளவென சென்றனர். மீனாட்சியும் கண்ணீரால் கண்கள் கனக்க ராமுவின் நினைவைச் சுமந்தவாறு வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டை நோக்கி நடந்த அவளிற்கு பேரதிர்ச்சியே காத்தி ருந்தது. தன்னையறியாமலே வாய்விட்டு அலறிவிட்டாள். 'ராமு நீங்கள் போனதுடன் நீங்கள் கட்டிய வீட்டையுமா கொண்டு சென்றுவிட்டீர்கள்?" என வீரிட்டாள். அவளின் அந்த அலறலுக்கு காரணம் ராமுவும் அவளும் சிறுகச்சிறுக சேர்த்து கட்டிவைத்த அக்கல்வீடும் யுத்த அனர்த்தத்தால் வெறும் கற்குவியலாகக் கிடந்ததே.

பலரது வீடுகளில் கூரையை காண முடியவில்லை. ஒரு சிலரது வீடுகள் இருந்ததை விட மிக நன்றாகவே பராம ரிக்கப்பட்டு காணப்பட்டது. அவற்றில் இராணுவம் வாழ்ந்ததாக கூறினார்கள். ஆனால் மீனாட்சியின் வீடுமட்டும் கற்குவியலாக காட்சியளித்தது. கொண்டு வந்த சிறு கைமுடிச்சை முற்றத்து மாமரத்தின் கீழ் வைத்துவிட்டு மீனாட்சியும் அவள் பிள்ளைகளும் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

மீனாட்சி ஓர் காலத்தில் பெரிய போடியாரின் ஒரே மகள். மாடி வீட்டிலே செல்வச்செழிப்பாக குறையின்றி வாழ்ந்த மீனாட்சியின் தந்தை சிங்கம் போடியார் என்று சொன்னால் ஊரின் பச்சைக்குழந்தைக்கும் தெரியும். அவ்வளவு செல்வாக்குள்ளவர். அவரின் பண்ணையில் வேலைசெய்ய பல இளைஞர் வந்துபோவது வழக்கம். அவ்வாறே ராமுவும் அவருக்கு லீவு நாட்களில் வேலைக்கு வருபவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் ராமுவும் மீனாட்சியும் ஒரே வகுப்பிலே படித்து வந்தனர். ஓர் ஐப்பசித்திங்களில் கார்கால மேகம் மழை தூவிக்கொண்டிருந்தது. சிங்கம் போடியாரின் வயல்களில் பல காளைகள் உழவு வேலையில் ஈடுபட்டன. ராமுவும் ஓர் காளைச் சோடியுடன் மிக வேகமாக உழவில் ஈடுபட்டிருந்தான் விதைப்பு காலமாதலால் அன்று எல்லோருமே சற்றுத் தாமதமாக உழவு மாடுகளை அவிழ்த்துவிட்டு வீடுநோக்கி சென்றனர். ராமுவும் தன் வேலை முடித்து உழவு மாட்டுடன் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். செக்கல் பொழுதான அம்மாலை வேளை ஒரே பரபரப்பாக இருந்தது. சற்றும் எதிர்பாராது வந்த சைக்கிள் ஒன்று ராமுவின் காளை மாட்டுடன் மோதி விழுந்தது. திடீரென்று ஏற்பட்ட இவ்விபத்தினால் காளை மாட்டை விட்ட ராமு ஓடிச்சென்று சைக்கிளை நிமித்தினான். வீழ்ந்தது வேறுயாருமல்ல.

சிங்கம் போடியாரின் ஒரே மகள் மீனாட்சியே சைக்கிளால் விழுந்திருந்தாள். கையில் சிறு உரசல் காயம். ஏன் சின்னம்மா! பார்த்து வந்திருக்கலாம் தானே! என்றான் ராமு. 'பரவாயில்லை' என பதிலுரைத்தாள் மீனாட்சி. கையிலிருந்து வந்த இரத்தத்தை துடைக்க இடுப்பிலிருந்த தன் துவாயை அவிழ்த்துக்கொடுத்தான். முதலில் வாங்க மறுத்த மீனாட்சி ராமுவின் வற்புறுத்தலால் வாங்கித்துடைத்தாள் அன்று வீடு போய் சேர்ந்த மீனாட்சியால் தூங்கமுடியவில்லை நடந்த சம்பவம் மனத்திரையில் நிழலாடிய வண்ணம் இருந்தது. இதற்கு பின் இருவரும் இடையிடையே சிறு சிறு சந்திப்புக்கள். அது காதலாக மாறியது. இது எப்படியோ சிங்கம் போடியாரின் காதிலும் விழுந்தது. வெறிகொண்ட நாகம்போல் சீறி எழுந்தார், சிங்கம் போடியார். "குந்தியிருக்க ஒரு குடிசை இல்லாதவனுக்கு கோபுரமாளிகை கேக்குதோ?" 'என் வீட்டு உப்பைத் தின்டு எனக்கே அள்ளிவைத்துவிட்டான்'. என கர்ச்சித்தார். மகளிற்கு புத்திமதிகள் கூறிய போதும் மீனாட்சி என் நிலையிலும் தன்காதலை விடுவதாக இல்லை. 'என் சொத்திலிருந்து நய பைசா கூட உனக்கு கிடையாது." எனக் கூறினார். 'எந்தச் சொத்தும் என் ராமுவிற்கு ஈடாகாது' என பதிலளித்தாள் மீனாட்சி. இறுதியில் தந்தையை விட்டு ராமுவுடன் புதிய வாழ்வில் இணைந்து புது இடம் சென்றனர். புதிய ஊரிலும் இவர்கள் தங்கி வாழ்வதற்கு எவரும் ஒரு குடிசை கூட கொடுக்க முன்வரவில்லை. காரணம் சிங்கம் போடியாரின் செல்வாக்கு அங்கு படர்ந்திருந்தது. இதனால் பெரிதும் அவஸ்தைப்பட்ட அவர்கள் ஊரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த காட்டினை வெட்டி பனை ஓலை குடிசை ஒன்றை அமைத்தனர் நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன. அரசால் படித்த வாலிபருக்கு காணிகள் வழங்கப்பட்டது. அதில் படித்த வாலிபராதலால் ராமுவிற்கும் காணி கிடைத்தது. சொந்த காணியில் சுந்திரமாக குடியேறினர் இருவரும். ராமுவின் கடின உழைப்பால் குடிசை வீடாயிருந்த அவனது வீடு சாதாரண வீடாக மாற்றம் பெற்றது. ஆண்டுகள் பல கடந்தும் சிங்கம் போடியார் எதிர்பார்த்தது போல் சிங்கம் போடியாரின் கால்களை நோக்கி நகராது கௌரவமாக உழைத்து வாழ்ந்தனர். எப்படியாவது ஒரு கல்வீடு கட்ட வேண்டும் எனும் வெறி ராமுவிற்கு இருந்தது. அந்த நேரத்தில் பல இளைஞர்கள் மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பைத்தேடி சென்றுகொண்டிருந்தனர். ஒரு நாள் ராமு மீனாட்சி அருகே வந்து நான் வெளிநாடு செல்லலாம் என்று யோசிக்கிறன் என்றான். முதலில் மீனாட்சிக்கு மனமில்லை. இருந்தாலும் "இரண்டு பெண்பிள்ளைகளை வைச்சிருக்கிறம் கையில நாலு காசு இருந்தாதான் ஊரில நாமும் மனிசரா வாழலாம்" என நினைத்து மெல்ல சம்மதித்தாள். மத்திய கிழக்கு நாடொன்றில் மூன்று ஆண்டு கடின உழைப்பை உழைத்தபின் ஊர்திரும்பிய ராமு அழகிய வீடு ஒன்றை கட்டி, செழிப்பாக வாழ்ந்து வந்தான்.

அதன் பின் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலில் ஊரே இடம்பெயர்ந்து மாத்தளன். முள்ளிவாய்க்கால் என நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு காலைப்பொழுதில், மாத்தளன் கடற்கரை ஓரம் அவசர அவசரமாக தறப்பாளில் வீடமைத்துக்கொண்டிருந்தான் ராமு. மீனாட்சியும் பிள்ளைகளும் உதவியவாறு இருந்தனர். திடீரென வந்த எறிகணையால் ராமு உயிரிழக்க தனிமரமானாள் மீனாட்சி.

மாமரத்தில் யோசித்துக் கொண்டிருந்த மீனாட்சியைப் பார்த்து அயல்வீட்டுச் செல்லம்மா கிழவி அழாத பிள்ளை! எல்லாம் காலம் செய்த கோலம்! திடுக்கிட்டு தன் பழைய நினைவிலிருந்து விடுபட்ட மீனாட்சி கண்ணிலிருந்து வந்த கண்ணீர்த்துளிகளை கையால் துடைத்தவாறு கிழவியை வியப்புடன் பார்த்தாள். ஒண்டுக்கும் பயப்படாத பிள்ளை! நாங்கள் இருக்கிறம்! முதலில் சாப்பிடு! என கையிலிருந்த உணவைக் கொடுத்தாள். மோனை எங்கடை வீட்ட சாமான் முடிச்சை வைச்சிட்டு இரவுப்பாட்டுக்கு தங்கு பிறகு யோசிக்கலாம்! நாட்கள் நகர்ந்தன.

மீனாட்சிக்கு மீண்டும் வீட்டுத்திட்டத்தில் முன்னுரிமை கிடைத்ததால் அதே அத்தி வாரத்தில் கல் வீடு எழும்பிக்கொண்டிருந்தது. அவள் குழந்தைகளும் படிப்பிலே கெட்டிக்காரர்கள். மூத்தவள் அரச வேலை ஒன்றில் இணைந்து கைநிறைய சம்பளம் பெறலானாள். மீண்டும் மீனாட்சியின் உழைப்பில் வீடு கம்பீரமாக எழுந்து நின்றது. ராமு இல்லாக்குறை தவிர வேறு குறையின்றி அவர்கள் வாழ்ந்து வரலாயினர். திருமண வயது வந்த மூத்தவளுக்கு "அவளை ஒருவன் கையில் கொடுக்க வேணும்" எனும் ஆசை செயலுருவம் பெறவே, அன்று மீனாட்சியின் வீட்டில் பெண்பார்க்கும் படலம் நிகழ்ந்து கொண்டிருந்தது. மாப்பிளைப் பொடியனும் நல்லாபடிச்சு பாங்கில வேலையாம். ஆனால் மாப்பிள்ளை வீட்டார் அந்த வீட்டை சீதனமாக தரும்படி ஒரே பிடியாக இருந்தது. ஆனால் மகளுக்கு அதை வாங்க சிறிதும் மனமில்லை. தந்தையின் நினைவாக கட்டிய வீட்டில் அம்மா இறுதிவரை வாழவேண்டும் என்பதுதான் அவளது ஆசை. மெல்ல தரகர் சொன்னார், அவளுக்கு இன்னொரு பொம்பிளைப்பிள்ளை இருக்குத்தானே அவளுக்கு ஒரு நல்லது நடக்கும் வரைக்கும் உங்களுக்கு வீட்டை தாறது நல்லதில்லை காசு தருகினமாம் நீங்கள் ஒரு வீட்டை கட்டுங்கோவன், என்றார். இருந்தும் மாப்பிள்ளை வீட்டார் இந்த வீட்டையே பேரம்பேசி பெற்றுக்கொள்ள மிக கோலாகலமாக மூத்தவளின் திருமணமும் நடந்தேறி ஒரு மாதகாலமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்துக்குள் மீனாட்சிக்கும் மருமகனிற்குமிடையே மாற்றங்கள் ஏற்படலாயிற்று. நீங்கள் இருக்கும்வரை இருக்கலாம் என கூறிய மருமகன், பின்னர் மீனாட்சியையும் கடைசி மகளையும் வெளியேறுமாறு கூறினார். இதனை பொறுக்கமுடியாது மூத்த மகளும் அழுதாள். மகளின் கன்னத்தை தடவிய மீனாட்சி "மகள் கவலைப்படாதை உன் சந்தோசம் தான் எங்கடை சந்தோசம்". "இந்த வீட்டிலுள்ள அப்பாவின் படத்தை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன். மீதியெல்லாம் உனக்குத்தானம்மா" என்றவாறு தன் இளைய மகளுடன் வெளியேறினாள் மீனாட்சி.

வீதியருகே சனக்கூட்டம் குழுமியிருந்தது. ஏது என அறிய கூட்டத்திற்குள் நுழைந்த மீனாட்சிக்கோ வியப்பு! அப்பா! என அருகே சென்று அழைத்த தன் மகளை இனங்கண்டார். சிங்கம் போடியார். என்னை மன்னித்து விடு பிள்ளை. என் அகம்பாவமும் சுயகௌரவமும் மாத்தளனுடன் அழிந்துவிட்டது. உன் உறவுகள், வீடுவாசல், எல்லோரையும் இழந்துவிட்டேன். உன்னை கூட்டிச்செல்லவே இங்கே வந்தேன். என்ற தன் தந்தையை இறுக அணைத்த அவள் ஓர் நம்பிக்கையுடன் தன் சொந்த இடத்தை நோக்கி நடக்கலானாள்.

இன்று மீனாட்சியும் சிங்கம் போடியாரும் இணைந்து புதிய வீட்டிற்கான அத்திவாரம் போட்டுக்கொண்டு இருக்கின்றனர். மீனாட்சிக்கு இளையமகளும் இருக்கிறாள். அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன் இந்து மகா வித்தியாலய வரலாறு

திரு.க.பத்மநாதன்,
மேனாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
151, குமரபுரம்,பரந்தன்.

கரைச்சி சைவ வித்தியா விருத்தி சபையினரால் இப் பிரதேசத்தில் நான்கு பள்ளிகள் தொடங்கப்பட்டன. அவை,

1. கிளிநொச்சி இந்து வித்தியாலயம் (இன்றைய இந்துக் கல்லூரி)
2. பரந்தன் இந்து வித்தியாலயம் (பரந்தன் இந்து மகா வித்தியாலயம்)
3. பன்னக்கண்டி இந்து வித்தியாலயம்.
4. புத்துவெட்டுவான் இந்து வித்தியாலயம் (முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ளது)

கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சபையின் நிறுவுனர்களாக அமரர்கள் என்.கே. நல்லதம்பி (யாழ்ப்பாணம் திருநெல்வேலி) இரங்கூன் சுப்பிரமணியம் (தென்மராட்சி இவர் மிக நீண்டகாலமா கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்தலை லவராக இருந்தவர்) மேனாள் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவசுந்தரம் ஆகியோர் இருந்தனர்.

குமரபுரம் குடியேற்றம் (கொலனி) அமரர்:முருகேசம்பிள்ளை அவர்கள் "டீ.ஆர்.ஒ" வாக இருந்தகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்று முதியவர்கள் கூறுவார். பரந்தன் இந்து வித்தியாலயம் 1954ம் ஆண்டு அமரர்.நல்லதம்பி, அமரர்:இரங்கூன் சுப்பிரமணியம் அமரர் சிவசுந்தரம் ஆகியோரின் பெருமுயற்சி காரணமாக கரைச்சி சைவ வித்தியா விருத்தி சபையினரால் ஆரம்பிக்கப்பட்டது.

பாலை மரத்தின் கீழே கீற்றுக்கொட்டகை அமைக்கப்பெற்று வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. முதலாவது பள்ளி முதல்வராக திரு. இராசரத்தினம் என்பவர் பொறுப்பேற்றுக் கொண்டவர். அவரைத் தொடர்ந்து திருமதி முத்தம்மா என்பவரும் முதல்வராக கடமை யாற்றினார் முதலில் தொடக்கப் பள்ளிக்குரிய வகுப்புக்கள் மட்டும் செயற்பட்டன. அமரர்:நல் லதம்பி பள்ளியின் முகாமையாளராக (மனேச்சர்) செயற்பட்டார். 1956ம் ஆண்டு பள்ளிகள் யாவும் அரசமயமாக்கப்பட்டன. பரந்தன் இந்து வித்தி யாலயமும் அரசால் பொறுப்பேற்கப்பட்டு பரந்தன் இந்து தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் இயங்கலாயிற்று.

முதலாவது நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பொருட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை கரைச்சி வடக்கு கூட்டுறவு சங்கம் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது ஒரு புசல் நெல் 12/- ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. வடக்கு சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஒவ்வொரு புசல் நெல்லுக்கும் சங்கம் மேலதிகமாக 2/- வீதம் வழங்கியது.. இவ்வாறாக 20000/- சேகரிக்கப்பட்டு கிழக்குபுறமாக "100x 20' அளவிலான நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இங்கு கடமையாற்றிய முதல்வர்கள் சேவைக்காலம் தொடர்பான ஆவணங்கள் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை இருப்பினும் வாய் வழியாக கூறக்கேட்டு பெறப்பட்ட வரிசை கீழே தரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. திரு.இராசரத்தினம்
2. திருமதி முத்தம்மா
3. திரு.நடராசா
4. திரு.ஆர்.டீ.சுப்பிரமணியம்
5. திரு.மு.சுப்பையா
6. திரு.சு.சுந்தரமூர்த்தி
7. திருமதி சிவானந்தராசா
8. திரு.கந்தப்பு
9. திரு.பஞ்சாட்சரம்
10. திரு.க.ம.பத்மநாதன்
11. திரு.சு.புண்ணியசீலன்
12. திரு.வீ.கே.பரம்சோதி
13. திரு.வீ.இராசகுலசிங்கம்
14. திரு.வ.யோகநாதன்
15. திரு.சொ.முத்தையா
16. திரு.சி.திரவியம்
17. திரு.ம.பத்மநாபன்
18. திரு.என்.சிவநேசர் (தற்போதைய முதல்வர்)

1984ம் ஆண்டு கிளிநொச்சி தனி நிர்வாக மாவட்டமாக பிரகடனம் செய்யப்பட்டது. முதலாவது பிராந்தியக் கல்விப் பணிப்பாளராக ஜனாப் எம்.எம் மன்சூர் கடமையேற்றுக்கொண்டார். 1985ஆம் ஆண்டு இப் பள்ளியை தரம் உயர்த்துவதற்கான முயற்சிகள் பள்ளி முதல்வராலும் பழைய மாணவர் சங்கத்தாலும் மேற்கொள்ளப்பட்டன. கல்விப்பணிப்பாளர் ஜனாப் மன்சூர் அவர்களும் தனது சிபாரிசை வழங்கியதுடன் கல்வி அமைச்சின் அனுமதியையும் பெற்றுத்தந்தார். இதன் பிரகாரம் 1986ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி முதல் "1சி" பள்ளியாக (மகாவித்தியாலயமாக) தரம் உயர்த்தப்பட்டதுடன் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேளையில் கிளிநொச்சி கல்வி மாவட்டம் பல்கலைக்கழக அனுமதிக்கான கோட்டா முறையின் கீழ் உள்வாங்கப்பட்டது.

க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தயார் செய்யப்பட்ட மாணவர்களில் செல்வி க. சத்தியலோசனா என்ற மாணவி புவியியல் பாடத்தில் "ஏ" சித்தி பெற்றதுடன் கலைப்பிரிவில் மாவட்டத்தின் முதல் நிலையைப்பெற்று கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவ்வாறு இங்கு கல்வி கற்ற மாணவர்கள் பலர் சமூகத்தில் உயர்நிலையைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி, இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டாலும் வேதனையான சம்பவங்களும் இடம்பெற்றன. 1996ல் இடம் பெயர்ந்து கந்தபுரம் இல:01 பள்ளி வளாகத்தில் இயங்கியது. மீண்டும் 2003ல் சொந்த இடம் திரும்பி இயங்கியது. தொடர்ந்து 2008ல் மீண்டும் இடம்பெயர்ந்து விசுவமடு 10ஆம் கட்டையில் இயங்கியது. இவ்வாறு நலிவுற்ற பரந்தன் இந்து ம.வி மீண்டும் சொந்த இடத்தில் திரும்பி இயங்கிவருகின்றது.

வருகின்ற ஆண்டு இப் பள்ளி தனது அறுபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது மிகவும் மகிழ்வைத் தருகின்றது. அத்துடன் இப்பாடசாலை ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு ஆரம்ப பள்ளி தனியாகவும் உயர்நிலைப் பிரிவுகள் தனியாகவும் இயங்கச்செய்ய வேண்டும் என்பதே பெற்றோர், மாணவர்கள், நலன் விரும்பிகளின் பேரவாவாக உள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அபிவிருத்தியில் மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கங்களின் பங்கு

திருமதி றா. வினோதா (தலைவி),
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ,
கண்டாவளை.

இருபத்தோராம் நூற்றாண்டிலும் பெண்களின் முன்னேற்றம் கணிசமான முறையிலும் காணப்பட்டாலும் ஐம்பது சதவீதமான பெண்கள் இன்னமும் பழைய சிந்தனைக்குள்ளேயே சுழியோடிக் கொண்டுள்ளார்கள். இன்றைய அவசர உலகில் மிகக் கூடுதலான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலேயே வாழ்க்கைச்சக்கரம் ஓடிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஆணின் உழைப்பை மட்டும் நம்பிவாழ முடியாது எனும் சூழ்நிலை குடும்பத்தில் உருவாகியுள்ளது. இந்த நிலையில் பழமைவாதத்தில் மூழ்கிக் கிடக்கின்ற பெண்களை இந்த சமூகத்தில் கொண்டுவந்து நிறுத்தி அவர்களுடைய ஆளுமையை விருத்தி செய்ய வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் கைகளிலே தங்கியுள்ளது.

இந்த மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கிராமப்புறங்களிலே வீட்டினிலே முடங்கிக் கிடக்கும் பெண்களையெல்லாம் தங்கள் சங்கங்களின் ஊடாக உள்வாங்கி சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சமூகம் என்றால் என்ன? இந்த சமூகத்தில் பெண்களின் அபிவிருத்தி என்ன? என்பதை இவ்வாறான பெண்களுக்கு உணர வைக்க வேண்டியது மாதர் சங்கங்களின் தலையாய கடமையாகும்.

கிராமிய கைத்தொழில்கள் சுயதொழில் ஊக்குவிப்புக்களை இவ்வாறான பெண்களிடையே அறிமுகப்படுத்தி மனைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி அடைய வைத்தல் வேண்டும். பெண்களின் அறியாமை இருளைப் போக்கி அவர்களின் ஆளுமை யையும் விருத்தி செய்வதற்கு விழிப்புணர்வு கருத்தூட்டல்களை ஏற்படுத்தல் வேண்டும். சமுதாயத்தில் பெண்கள் அறிவுத்திறனில் வளர்ச்சி உடையவர்களாக காணப்படுகின்ற போது அந்த சமுதாயம் நெருக்கடியான இந்த கால கட்டத்தில் முன்னேறமுடியும் என்பதனை இன்றைய உலகின் புத்திஜீவிகள் முழுமை யாக ஒப்புக்கொண்டுள்ளனர். இதனால்தான் அரசாங்கமும் பெண்களை அனைத்துத் துறைகளிலும் ஈடுபடுத்தி வருகின்றது.

உலகின் பல நாடாளுமன்ற அவைகள் முப்பத்தைந்து சதவீதத்தினை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளன. கிராமப்புற பெண்களின் அபிவிருத்தியில் பெரிதும் அக்கறை கொண்ட நிறுவனமாக மாதர் சங்கங்கள் அரசினால் நெறிப்படுத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தான் அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் மாதர்சங்கங்களுக்கு நிதிகளை வழங்கி பெண்களின் சுயதொழில் அபிவிருத்தியை வளர்த்து வருகின்றன.

இந்தியாவிலே மகளிர் உதவிக்குழுக்களை நிறுவி அவர்களின் சுயதொழில்களை ஊக்குவிப்பதன் மூலம் கணிசமான முன்னேற்றத்தினை கண்டுள்ளனர். எமது நாட்டிலும் மாதர் சங்கங்கள் ஊடாக பெண்களின் சுய தொழிலை ஊக்குவிப்பதன் மூலம் கணிசமான முன்னேற்றத்தினை ஏற்படுத்த முடியும்.

இவற்றோடு பெண்களை தலைமைத்துவ மாக கொண்ட குடும்பங்களுக்கு தொழில் முதலீட்டினை வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தி அவர்களது குடும்பங்களின் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் அபிவிருத்தியை காணமுடியும்.

மாதர் கிராம அபிவிருத்திச்சங்கங்கள் இவர்களது சுய தொழில் ஊக்குவிப்புக்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல் சிக்கனம், சேமிப்பு, என்பவற்றிலும் அக்கறை காட்டவேண்டும். இவற்றுடன் மட்டுமன்றி சமூகநலம் சார்ந்த விடயங்களிலும் அக்கறை உள்ள ஒரு சமுதாயத்தை கட்டி யெழுப்புவதற்கு பெண்களை ஈடுபடுத்துகின்ற செயற்பாடுகளையும் செய்யவேண்டும். சமுதாய கட்டமைப்பு, சமத்துவம், சகோதரத்துவம், என்பனவற்றை வளர்தெடுப்பதன் மூலம் ஆளுமை உள்ள வினைத்திறன் மிக்க ஒரு பெண்கள் சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டியது ஒவ்வொரு மாதர் சங்கங்களின் தலையாய கடமையாகும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உழைப்பு "

நா.ஜெனோபா,
கிளி / தருமபுரம் மகா வித்தியாலயம்

மனிதா நீ சாதிக்கப் பிறந்தவன்! தடைகள் உனை சோதிக்க எழுபவை!
எட்டாவது அதிசயம் தேடி உலகெங்கும் அலையாதே!
நீ தான் அது என்பது உனக்கு இன்னமும் தெரியாது!
கூனல் விழுந்த முதுகை நிமிர்த்து! குறிக்கோளை நோக்கி வாழ்வை நகர்த்து!

பிறப்பில் வருவது உயர்வல்ல! உழைப்பில் வருவதே உயர்வு!
முன்னேறு! தொடர்ந்து முன்னேறு! உன் கால்கள்முன்னால் நகரட்டும்!
உன் சிந்தனை உயர்ந்தே செல்லட்டும்
இலட்சியக் கனவை வெல்லட்டும்.

எறும்புக்குக்கூட இலட்சியம் உண்டு!
தேனிக்கும் கூட தேன்சுவை தெரியும் மனிதா..!
பதின்னான்கு மில்லியன் நரம்புகளால் ஆன உன்
மூளையில் என்ன இருக்கு? முடியாது என்பது தானே!

முடியாது என்பது நீ முயற்சி செய்யாத வரை!
முதலாம் அடி எடு. தொடங்கிவிடும் பயணம்.
வெற்றி ஒரு போதும் உன் வீடுதேடி வராது.

எந்தப் பாதையில் தான் தடைகள் இல்லை!
எந்த நதிதான் வளைவின்றிப் பாய்கிறது!
எந்த மரம் தான் பூக்காமல் காய்க்கிறது
இந்தமனிதன் மட்டும் ஏன் உழைக்காமல் வாழ்கிறான்?

முட்கள் இல்லாமல் றோஜாக்கள் இல்லை.
முயற்சி செய்யாதவரை இராஜாக்கள் இல்லை.
தடைகள் இல்லை என்றால் வெற்றியே இங்கில்லை.
மனிதனே! உழைப்புக்கு நிகர் வேறோன்றில்லை.

(2013இன் பிரதேச மட்ட தேசிய கலை இலக்கியபோட்டியில்
சிரேஸ்டபிரிவில் முதலாம் இடம் பெற்ற கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திக்கெட்டும் பரவும் இன்னிசை வளையோசை"

யவீனா புத்தகசாலை

இல:9 பேருந்து தரிப்பிடம், பரந்தன் சந்தி, கிளிநொச்சி.

தொ.பே.இல. : 077 75 64 723

"வளை ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்"

வாணி விலாஸ்

விசுவமடுச் சந்தி, விசுவமடு.

தொ.பே.: 077 07 43 072





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளை ஓசை சிறப்புற வாழ்த்துகின்றோம்"

தருணா டிஜிற்றல் மீடியா வேர்க்ஸ்

இல:3, பேருந்து நிலையம், பரந்தன்.

077 37 05 360

"வளை ஓசை ஓங்கி ஒலிக்கட்டும்"

Ambal Multy Center

5,Bus Stand, Paranthan.

077 75 32 647 (Mr.S.Sutharsan)

"பண்பாட்டின் நாதமாய் ஒலிக்கும் வளையோசை!"

**அலுவலக மற்றும் வீட்டுப் பாவனைத் தளபாடங்கள்
இலத்திரனியல் உபகரணங்கள், மரத்தளபாடங்களின்
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட
ஏக விநியோகஸ்தர்கள்**

விநாயகர்

தளபாட விற்பனை நிலையம்

ஏ 9 வீதி, கிளிநொச்சி. (நீதிமன்றம் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணங்கள் மேம்பட வேண்டும்"

திருமதி எஸ். தீபாதேவி,
பிரமந்தனாறு.

மனித வாழ்க்கையிலே சிந்தனை என்பது மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. சிந்தனையானது மனிதனை சகல செயற்பாடுகளிலும் சாதனை படைக்கச் செய்கின்றது. சிந்திக்கச் சிந்திக்க எமது செயற்பாடுகள் புதிய வேகத்துடன் செயற்படுகின்றன. எமது எண்ணங்கள் யாவும் நேர்ச் சிந்தனையாக அமைய வேண்டும். நல்ல விடயங்களையே நாம் சிந்திக்க வேண்டும். தீய எண்ணங்களை சுட்டெரிக்க வேண்டும். நன்மையான காரியங்களுக்கு மாத்திரமே எம் சிந்தையில் இடம் கொடுக்க வேண்டும். சிந்தனையில் எப்போதுமே தெளிவு இருக்க வேண்டும். தெளிந்த சிந்தனை மூலமே எமது இலட்சியத்தை அடைய முடியும்.

"ஒருவன் தான் எதுவாக ஆக நினைக்கின்றானோ அதுவாகவே ஆகின்றான்" என்பது தத்துவம் ஒருவனது இலட்சியம் எதுவாக இருக்கின்றதோ, அவன் அவ் இலட்சியத்தை அடைய முனைப்போடு செய்ற்படும்போது அவனால் சாதிக்க முடியும். அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம்லிங்கன் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளார். ஆபிரகாம் லிங்கன் சிறுவனாக இருந்தபோது அந்நாட்டின் ஜனாதிபதி வேட்பாளராக இருந்த ஒருவரது பிரச்சாரக் கூட்டத்திற்கு சென்றிருந்தார். அப்போது வேட்பாளர் சிறுவனான லிங்கனை நோக்கி உனது இலட்சியம் என்ன? என்று கேட்டார். அதற்கு லிங்கன் "இந்நாட்டின் ஜனாதிபதியாக வருவது" எனக்கூறினார். அதைக்கேட்ட கூட்டத்திலிருந்த அனைவரும் கொல்லென்று சிரித்தனர். ஆனால் லிங்கன் தனது இலட்சிய நோக்கிலிருந்து சற்றும் விலகவில்லை. தனது இலக்கை எய்துவதற்காக கடுமையாக உழைத்தார். உலகம் வியக்கும் வண்ணம் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றார். பிறர் தன்னை கேலி செய்தார்கள் என்று எண்ணி அவர் தனது இலட்சியத்தை கைவிடவில்லை. மாறாக கடும் பிரயத்தனம் செய்து சாதனை படைத்தார்.

கடவுள் பூமியை படைக்கும் முன் இப்படியொரு உலகம் அமைய வேண்டுமென எண்ணினார். அப்படியே அழகான உலகைப்படைத்தார். நாமும் எம்முடைய உலகைப்பற்றி கனவு காண வேண்டும். அக்கனவு மெய்ப்படவேண்டும். நம்மில் பலர் கனவுகாணவே பயப்படுகின்றோம். எங்கே எனது கனவு பொய்த்துவிடுமோ? என்று. முதலில் நாம் எம்மை கனவு காண தயார்படுத்த வேண்டும். சுதந்திரமாக கனவு காணவேண்டும். கனவைமெய்ப்பிக்க கடுமையாக உழைக்க வேண்டும். அறிஞர்களின் வாழ்க்கைப்பின்னணியை எடுத்து நோக்கினால் அவர்களது வாழ்க்கையில் அவர்கள் கண்ட கனவுகளே அவர்களை அறிஞராக்கியதை அறிய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களது சிந்தனை உயர்வாக இருக்க வேண்டுமென ஈரடியில் திருவள்ளுவர் கூறியுள்ளதாவது.

"வெள்ளத்து அனைய மலர் நீட்டம், மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு"

தடாகத்திலுள்ள நீர்மட்டம் எவ்வளவோ அந்தளவிற்கு தாமரைப் பூவின் தண்டு வளர்ச்சியடைந்திருக்கும். அதுபோல மனிதனது எண்ணங்கள் எவ்வளவு உயர்வாக இருக்கின்றதோ அந்தளவிற்கு அவன் முன்னேற முடியும். அதாவது ஊக்கமுடன் ஒவ்வொருவனும் சிந்தனைகளை வளர்க்க வேண்டும். சிந்தனையே ஒவ்வொருவருக்கும் மூலதனமாக அமைய வேண்டும். மனதில் முடங்கிக் கிடக்கும் சக்தியை எண்ணங்கள் மூலம் வெளிவரச் செய்ய வேண்டும். சாதாரணமானவையாக அல்லாமல் விஸ்வரூபமெடுத்து வெளிவருவனவாக அமைய வேண்டும்.

பொன் ஆனது நெருப்பிலே சுடச்சுட மிளிர்வது போல எமது எண்ணங்களும் சிந்திக்கச் சிந்திக்கத் தெளிவுபெற வேண்டும். நாம் ஒரு செயலை செய்ய திட்டமிடும் போது ஒரே தடவையில் சரியான தீர்வைப் பெற்றுவிட முடியாது. பல்வேறு கோணங்களில் சிந்திக்கும் போதுதான் தீர்க்கமான முடிவினை எட்டமுடியும். சிந்திப்பதால் எமக்கு எந்தச் செலவும் ஏற்படப்போவதில்லை. சிந்தனை அதிகரிக்கும் போது நாம் அடையவேண்டிய இலக்குகளை அண்மிக்க முடியும். குறுகிய வட்டத்திற்குள் எண்ணங்களை உலாவவிடாமல் பரந்துபட்ட அளவில் சிந்திக்க வேண்டும். எண்ணாங்களுக்கு ஒரு போதும் எல்லைகளை வரையறுக்கக்கூடாது. பெரிய எண்ணங்கள்தான் வாழ்க்கையில் மாபெரும் மாற்றங்களை உருவாக்கும். வாழ்க்கையில் முன்னேற விரும்பும் ஒவ்வொருவரும் தன் எண்ணங்களின் எல்லைகளை நெடியதாக்க வேண்டும்.

ஒருவரது கடந்தகால எண்ணங்கள் எப்படி இருந்ததோ. அதன்படி அவரது தற்கால வாழ்க்கை அமைந்திருக்கும். அவரது ஒட்டுமொத்தக்கனவே அவரை இந்நிலைக்கு கொண்டுவந்திருக்கும். இதே போன்று எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றவகையில் அவரது சிந்தனைகள் அமைய வேண்டும். இந்த வாழ்க்கையே எனக்குப் போதும் என்ற எண்ணத்துடன் இருப்பவர் அடுத்த கட்ட வாழ்க்கைபற்றிச் சிந்திக்க மாட்டார். எப்போதும் மனதில் தேடல் இருந்தால்தான் புதிய விடயங்களை கண்டடைய முடியும். புதுமைகள் படைத்து. வாழ்க்கையின் உச்சத்தை எட்டமுடியும்.

இன்று நம்மில் பலர் அடுத்தவன் எவ்வாறு முன்னேறியுள்ளான் என்பதை ஆராய முற்படுகின்றோம். அதைவிடுத்து அவனைப்போல முன்னேற நாம் என்ன செய்யவேண்டும். எவ்வகை உத்திகளைப் பயன்படுத்த வேண்டுமென எமது சிந்தனா சக்தியைச் சுழல் விட வேண்டும். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. என்னாலும் மற்றவர்களைப் போல முன்னேறமுடியும் என்ற எண்ணம் எப்போதும் மேலோங்க வேண்டும். சாதிக்க முடியாத சம்பவங்கள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் எதுவும் இல்லை. சாதனையாளராக வரவேண்டு மென்ற பேரவாவுடனே ஒவ்வொருவரும் செயற்படவேண்டும். கனவு மட்டும் கண்டால் போதாது, அதனை நிறைவேற்ற முயற்சியெடுக்க வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சி அடைவதில்லை" கடின உழைப்பின் மூலம் ஒவ்வொரும் தாம் நினைத்தவைகளைச் சாதிக்க முடியும்.

நல்லெண்ணங்களை வளர்ப்பதன் மூலம் தீய குணமுள்ள ஒருவனைக் கூட நற்குணமுள் ளவனாக மாற்ற முடியும்.

"நீ நல்லவன்,
"நல்லவனாக வருவாய்",
''எதிர் காலத்தில் எல்லோருமே மெச்சுவார்கள்",
"உன்னைப்போல திறமையுள்ளவனாக ஒருவருமே இருக்கமுடியாது",
உன்னால் பல சாதனைகளை நிலை நாட்டமுடியும்"

போன்ற நல்வார்த்தைகளை அவனுக்கு தினமும் கூறுவதன் மூலம் அவனது உள்ளத்தி லும் நடத்தையிலும் மாற்றத்தைக் கொண்டு வர முடியும். நாளுக்கு நாள் அவனது எண்ணாங்கள் வலுப்பெற்று அவனில் பல்வேறு நடத்தை மாற்றங்களை அவதானிக்க முடியும். எண்ணாங்கள் உயரும் போது வாழ்க்கை உயரும்.. எண்ணாங்கள் தாழ்ந்தால் வாழ்க்கை தாழும் இது தான் உண்மை.

நேற்றோடு செத்தொழிந்ததை எண்ணிக் கொண்டிராமல் நிகழ்காலத்தில் புதிய எண்ணாங்களோடு வாழப்பழக வேண்டும்.

"சோம்பிப் படுத்தால் படுக்கையே உனக்கு சாக்காடு"
"எழுந்து நடந்தால் பூமியே ஒரு பூக்காடு"

எனவே முயலுவோம், முன்னேறுவோம் நல்லதையே எண்ணுவோம், நன்மை பெறுவோம். கனவுகள் எண்ணாங்களாக மாறி எண்ணாங்கள் செயலுருப் பெறும் போது எமது இலட்சியங்கள் எட்டப்படுகின்றன. வார்த்தை வல்லமை உடையது. எனவே, பழையனவற்றை மறந்து புதிய எண்ணாங்களுடன் புறப்படுவோம் நாளைய பொழுதை நம்பிக்கையோடு ஆரம்பிப்போம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய பத்தாம் பத்திநாதர் தேவாலாயம், கல்மடுநகர்

திரு..ச.ஞானரட்ணம்,
தேவாலய பரிபாலன சபை உறுப்பினர்.

கல்மடு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள இந்த தேவாலயம் 1957ஆம் ஆண்டு ஆசீர்வாதம் என்பவரினால் தூய பத்தாம் பத்தி நாதர் சுருவம் கொண்டுவந்து கல்மடுக் கோயில் காணிக்குள் சுருவம் வைத்து சிறு கோயிலாக ஆரம்பிக்கப்பட்டது. அந்தக்காலத்தில் "லெபோன்" என்கின்ற வெள்ளைக்கார குருவானவர் "லத்தீன் மொழியில்" திருப்பலி வழிபாடுகள் நடத்திக் கொண்டு இருந்தார்.

1960ஆம் ஆண்டு குருவானவர் திரு. பொன்னையா அவர்களால் ஆலயம் கட்டடமாக் கப்பட்டது. குருமார் திரு.பயஸ்சு, திரு.ஜெயக்குமார், திரு.ஜெரோம், திரு.இருதயதாஸ், திரு.சூசைநாதன் ஆகியோர் ஆலயத்திற்கு தொடர்ந்து வருகை தந்து திருப்பலி வழிபாடுகள் நடாத்திக்கொண்டிருந்தனர். 1985ஆம் ஆண்டு திரும்பவும் ஆலய அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றது . கட்டுகிணறு, நேசறி உருவாக்கப்பட்டது. இக் கிணற்றை, தேவாலயத் திற்கு அருகாமையிலுள்ள பயனாளிகள் 50 வீதம் ஆனோர் இன்றும் தண்ணீர் அள்ளி குடிப்பதற்கு பாவித்துவருகின்றார்கள். நேசறி (முன்பள்ளி) இதுவரை காலமும் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

1988ஆம் ஆண்டு தேவாலயத்தில் திருத்த வேலைகள் நடைபெற்றன. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருவானவர் திரு:ஞானரெட்ணம் பங்கு ஆற்றியுள்ளார். 1995,1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருவானவர் திரு.அந்தோனிமுத்து பங்கு ஆற்றியுள்ளார்.1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு.அகுஸ்த்தீன் குருவானவர் பங்காற்றியுள்ளார். இவருடைய காலப்பகுதி யில் தூய பத்தாம் பத்திநாதர் ஆலயம் புதிய ஆலயமாக கட்டுவதற்கு முற்று முழுதாக இடிக்கப்பட்டது. 2000ம் ஆண்டு காலப்பகுதி யில் குருவானவர் திரு.அகுஸ்த்தீன் அவர்களின் விடாமுயற்சியினாலும் ஆலய பங்கு மக்க ளுடைய ஆதரவினாலும், ஒத்துழைப்பாலும் திரு. ச.ஞானரெட்ணம் அவர்களால் புதிய ஆலயம் அமைப்பதற்று அடிக்கல் வைக்கப்பட்டது. தொடர்ந்தும் மக்களுடைய பங்களிப்புடன் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருவானவர் திரு.அன்ரன் றெக்கு பங்சிலீ பணியாற்றியுள்ளார்.

2009ஆம் ஆண்டு தைமாத காலப்பகுதி யில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, பின்பு 2010ஆம் ஆண்டு வைகாசிமாதம் காலப்பகுதியில் மீள் எழுச்சியுடன் இங்கு கல்மடு கிராமத்தில் மக்கள் குடியேற்றம் நடைபெற்றது. அவ்வாண்டு காலப்பகுதியில் குருவானவர் திரு.யூட்தாஸ் பங்காற்றியுள்ளார். பின்பு 2012ஆம் ஆண்டு குருவானவர் திரு. இருதயதாஸ் திரும்பவும் எமது பங்குக்கு பணியாற்றவந்துள்ளார். அவர் தொடர்ந்தும் எமது பங்கில் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார். இவருடைய காலப்பகுதியில் தூய பத்தாம் பத்தி நாதர் ஆலய முகப்பு வேலைகள் கட்டிட நிர்வாக குழுவுடன் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் வேலைகள் இன்னும் முற்றுமுழுதாக முடியவில் லை. தேவாலய வேலைகள் முழுமையாக நிறைவுபெற்று, எங்கள் காவல்தெய்வம் பத்தாம் பத்திநாதரின் ஆசிர்வாதம் எங்கள் மக் களுக்கு எல்லாம் பரவ, தேவனின் கிருபை எல்லோருக்கும் கிட்டட்டும். ஆமேன்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த அவலங்கள் என்று தீரும் எம் மண்ணில்"

திருமதி கி. கமலாதேவி,
பொருளாளர்,
மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கம்,
கண்டாவளை.

கோலை விடியும் முன் கண் விழித்த கையுடனே
வேலைக்கு செல்வதென வெளிக்கிட்டு விரைவாக
கள்ளுக் கடையில் நாளைக் கழித்து விட்டு
தள்ளாடி வந்து தடம் புரண்டெழுந்து - தாலி
கட்டியவள் மீது தங்கள் கைவரிசையை காட்டிடும்
வேலையற்ற வீணர்களின் கையில் சிக்கி
தவிக்கின்றது பெண்மை,

உழைக்கின்ற பணத்தையெல்லாம் ஊதாரித்
தனமாக குடியும் கும்மாளமுமாய் கூத்தடித்து
வாய்க்கு ருசியாக சமைக்கவில்லை என்றுகூறி
கட்டியவள் மீது கைவரிசை காட்டும்
கண்மூடித்தனமான கணவனே எம்மவர்க்கு!

கையில்,கழுத்தில், காதில் கிடந்தவற்றை
பிடுங்கி விற்று குடித்து பொழுது போக்கி பெரிதாக
பேசி அளந்து தந்த சீதனம்
காணாது தாடி இன்னும்! என்று சொல்லி
தர்ம அடிகளும் தாராளமாய் விழுகிறது.

சந்திக்கு சந்தி கள்ளச்சாராயமும் கசிப்புக்கடையும் மலிந்து
இவ்வேளையில் மதுவுக்கு அடிமையாகி மயங்கிப் போனவர்களின்
கொடுமைகளை விதி என்ற வெள்ளத்தில் மூழ்கி நிற்கும் பெண்
குடும்ப சுமையோடு கூடவே சுமக்கிறாள்
எல்லா வலிமையும் தாங்கி நிற்கும் இவள் பாவம்!
எதிர்நீச்சல் போட்டபடி வாழுகின்றாள்.
இம்மண்ணில் இவ்வவலப்
பெண்கள்படும் பேரவலங்கள் எப்போது தீருவது?!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மனிதனும் சமூகமும்

திருமதி சி.கிருஷ்ணகுமாரி,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

இன்றைய சமூகம் தகவல் சமூகம் எனப்படுகின்றது. "அறிவே ஆற்றல்" என்ற கோம் முன்வைக்கப்பட்ட கைத்தொழில் சமுகத்திலிருந்து "தகவலே ஆற்றல்" என முழங்கும் தகவல் சமூகத்தில் நாம் வாழ்கின்றோம். குடும்பம், சுற்றுப்புற சமூகம், கிராமம், போன்றவற்றின் வரையறைகள் "உலகக் கிராமம்" என்ற கருத்து நிலைக்குள் தமது தனித்துவத்தை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன. உலகின் வேகத்தோடு ஒட்டி ஓட வேண்டிய நிர்ப்பந்தம் மனிதனுக்கு உள்ளது. அம்மனிதனால் உருவாக்கிவிடப்பட்ட சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ஏற்றத்தாழ்வுகளின் அபாயகரமான விளைவுகளை சந்தித்துக் கொண்டிருக்கும் மனித சமுதாயத்தைப் பார்த்து மனிதன் தலைகுனியும் தடவைகள் அதிகமானவை. இவற்றிலிருந்து விடுபட மனிதன் ஒழுக்கத்தி னூடாக தமது ஆளுமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இங்கு முதலில் ஆளுமை என்றால் என்ன? என்பதை நோக்கின், பொதுவாக மனிதனுடைய புறத்தோற்றம் அத்துடன் அவனது பதவி, பட்டம், செல்வம் என்பவற்றை வைத்துக்கொண்டே அவரது ஆளுமையை ஒரு சமுதாயம் மதிப்பீடு செய்கின்றது. இது அறவே பிழையான கருமம் ஆகும். உண்மையில் ஆளுமை என்பது ஒருவருடைய உடல், மனம், அறிவு, ஆன்மா எனும் நான்கினையும் உள்ளடக்கிய கருமம் ஆகும். எனவே, மனித சமுதாயம் ஒழுக்கத்துடன் கூடிய ஆளுமையை வளர்க்க பூரண முயற்சியில் ஈடுபடவேண்டியது இன்றைய நிலையில் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும்.

அன்பு, பாதுகாப்பு, பரஸ்பர உறவு, என்பவற்றின் அடிப்படையில் உருவான குடும்பம் என்ற ஆதார நிறுவனம் இன்று அவற்றை புறந்தள்ளி பணத்துக்கும் அந்தஸ்துமிக்க தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிறுவனமாக மாறிக்கொண்டு வருகின்றது குழந்தைகள் இன்றைய சமூகத்தில் பொதுநலப்பண்பை வளர்ப்பதற்கு உதவும் விளையாட்டுக்குழுக்களுடன் செலவிட்ட காலம் மாறி, தனியார் கல்வி நிறுவனங்களிலும் கணணி விளையாட்டுக்களிலும் செலவிடுகின் றனர். நின்று நிதானித்து சிந்தித்து செயற்பட நேரமற்ற பம்பர உலகில் தொகைரீதியாகவும் தரரீதியாகவும் பெருத்துக்கொண்டு போகும் தகவல் வெள்ளத்துக்குள் நல்லதை பொருத்த மானதை தெரிவு செய்வதற்கான நேரமோ, பொறுமையோ, அறிவோ அற்றதாக மனித சமூகம் சென்று கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய காலத்தில் ஒவ்வொரு சமூகமும் தமது தனித்தன்மையை வெளிக்கொணர்வதற்கு தம்மாலான வகையில் முயற்சி செய்கின்றன. "வலியது மெலியதை நசுக்கும்" என்ற இயற்கையின் விதி மனிதனுக்கு விதிவிலக்கானதல்ல. எனவே நசுக்கப்படும் சமூகம் தன்னை காத்துக்கொள்ளவும் தனித்தன்மையை பேணிக்கொள்ளவும் சமூக மேம்பாடு அவசியமா கின்றது. தனி மனித வளர்ச்சிக்கு அறிவு எவ்வளவுக்கு அடிப்படையாக உள்ளதோ சமூக வளர்ச்சிக்கும் அதுவே அடிப்படையானது இவ்வறிவானது இன்று நவீன இலத்திரனியல் தொழில்நுட்ப சாதனங்களின் பாவனை மூலம் நல்லவையும் தீயவையும் மனிதனைச் சென்றடைய வாய்ப்புக்கள் உண்டு. இவற்றினால் இன்று நமது சமூகம் பல சமூக சீர்குலைவுகளை எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றது.

எனவே விஞ்ஞானயுகமாக மாறிவரும் இக்காலத்தில் ஒழுக்கமான சமூகம் உருவாவதற்கு சமயமும் முக்கியம் வாய்ந்த ஒரு இடத்தை பிடித்திருக்கின்றது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ வைப்பது சமயமாகும். மனிதமனத்தை புனிதமாக்கி, நல்ல மனப்பாங்கை அமைத்துக்கொடுப்பதும் இதுவாகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

எனும் குறளின் ஊடாக உலகப்பொது மறையாம் திருக்குறளில் "ஒழுக்கம் என்பது உயிரினும் மேலானது" என்பது வலியுறுத்தப்படுகின்றது. இதனையே சமயக்கல்வியும் வலியுறுத்துகின்றது. சமூக நடத்தைக்கு ஏற்றவாறு வாழ்வது ஒவ்வொருவரதும் கடமையாகும். சமூக நடத்தை என்பது ஒழுக்க நெறியையே சுட்டிநிற்கின்றது. இந் நல்லொழுக்க நெறி என்பது நேர்மை, அன்பு, அடக்கம், தயை,உறுதி ஆகிய நற்செய்கைகளின் வெளிப்பாடாகும். இவை இன்றைய சமூகத்தினரிடையே சற்று அருகிவருகின்றது. இதனைவளர்ப்பதற்கு கல்விமான்கள் பல வழிகளிலும் முயற்சி செய்து வருகின்றார்கள். சமயப் பெரியார்களால் நடத்தப்படும் சடங்குகளும், உபதேசங்களும் எவ்வளவுதான் அதிகமாக இருந்தாலும் தற்காலத்தில் சமூதாய சீரழிவையும் தார்மிக விழுமியங்கள் வீழ்ச்சியுறுவதையும் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

எனவே, மனித சமுதாயம் இன்று எதிர் நோக்கும் பல்வேறு சவால்களிலிருந்து விடுபட்டு எதிர்காலத்தில் நல்லதொரு பண்புள்ள ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்க ஆளுமையின் நான்கு பரிமாணங்களாகிய உடல், மனம், அறிவு, ஆன்மா என்பவற்றை தன்னகத்தே வளர்த்துக்கொள்வது இன்றியமை யாததாகும். இதன் மூலம் கீழ்ப்படிவுள்ள நீதி, நேர்மை, சுயநலமற்ற சமத்துவமான உயர்ந்த மனிதர்கள் உருவாக முடியும் என்பது திண்ணம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் சமய விழுமியங்களை வளர்த்தல்

செல்வி இளங்கோவன் தாரணி,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேசசெயலகம்,
கண்டாவளை.

விழுமியக்கல்வியின் முக்கியத்துவத்தை பற்றி அறிந்துகொள்ள வேண்டிய இக்கால கட்டத்திலே அதனுடைய அவசியம் பற்றியும் பாடசாலைகளிலே அதனை வளர்க்கும் முறைகள்பற்றியும் சிந்தித்துப் பார்ப்போம்.

இங்கு விழுமியம் என்பது நேரடியான பொருளில் ஒரு குறிக்கப்பட்ட ஒரு சமுகத்தி னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உயர்வான அல்லது சிறந்த அல்லது மேலான நடத்தைகளை கொண்டமைந்த எண்ணக்கருக்களை குறித்து நிற்பதாகும். மனித நடத்தையின் நன்மை தீமைகளை நிர்ணயிப்பது விழுமியம் ஆகும். இது அகவயத்தன்மை சார்ந்ததாகவும் புறவயத்தன்மை சார்ந்ததாகவும் ஒருங்கே கொண்டமைந்துள்ளது. இவை, மனிதர்கள் எந்த விதத்தில் இதனை எடுத்துக்கொள்கின்றார்களோ அவர்கள் எடுக்கின்ற தீர்மானங்களுடன் தொடர்புடையவையாகும்.

மனிதன் செந்நெறியை காட்டும் வெளிச்சம் "விழுமியம்" ஆகும். இது பண்பாட்டின் அடிப்படை அம்சங்களை கொண்டது. ஒரு மனிதன் பயிரிடுவதற்காக மண்ணை எவ்வாறு பண்படுத்துகின்றானோ அதே போலவே விழுமியத்தை சரியான முறையிலே பின்பற்ற வேண்டும். என்பது தனி மனிதனிடம் உள்ளார்ந்த விதமாக தன்வயப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையிலே அறவியல் சார்ந்த அடிப்படையிலும் பார்க்க அறிவியல் சார்ந்த பண்புகளே முதன்மை பெற வேண்டும்.

தற்கால சமூகத்தில் பெரும்பாலானோரிடம் மனிதவிழுமியங்களும் ஆன்மீக விருத்தி யின் பாலான கரிசனைகளும் அருகியே காணப்படுகின்றது. அந்த வகையிலே தான் இன்றைய சமூக மட்டத்திலே இளையவர்களிடையே சமூகத்தில் தற்கொலை, மதுப்பழக்கம், பயங்கரவாதம், சவால்களை எதிர்கொள்ளமுடியாமை போன்ற நடத்தைப் பண்புகள் பெருகியுள்ளமை, விழுமியக்கல் வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

"முயற்சி தன் மெய்வருத்த கூலி தரும்..."

என்ற பொய்யா மொழிப் புலவரின் அருள் வாக்கின் மூலம் வையத்து வாழ்வாங்கு வாழ ஒரு மனிதனுக்கு முயற்சியே அவனை உயர்ந்தவனாக்குகின்றது. இந்த வகையிலே அவனை சிறு குழந்தையிலிருந்து பெரியவனாக வளர்த்து சமூகமட்டத்திலே நன் மதிப்பை பெற வேண்டும் என்பதைத் தான் மகாகவி பாரதியார்,

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா...."

என தொடங்கும் பாடலின் மூலம் ஒரு குழந்தை மண்ணிலே காலெடுத்து வைத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தனது வாழ்க்கை படிநிலைகளை ஓய்வின்றி முயல அடைய வேண்டும் என கூறியிருக்கின்றார்.

இதே போல கவிஞர் கண்ணதாசனும்.

"வானளவு மாளிகையில்
வாழ்ந்திருந்தேன்..."

"மலையளவு புகழ் கொண்டு
மகிழ்ந்திருந்தேன்..."

என்று தான் உயர்ந்தவனாகிய விதத்தை கூறி முயற்சியின் அவசியத்தையும் அதன் பயனையும் வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த வகையிலே பாடசாலைச்சமுகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. மாணவர் களினுடைய இலட்சிய, கனவு நனவு ஆகிய ... தமது பயனை அடைய அவர்களை சரியான முறையிலேயே நெறிபடுத்திக் கொள்ள உதவ வேண்டும். இதற்கு ஊன்றுகோலாக விளங்கும் கல்வி மகத்தானதாகும். இதனை நாலடியார்,

"குஞ்சி அழகும் கொடுத்தானை
கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலமையில்
கல்வி அழகே அழகு..."

என கல்வியழகை குறிப்பிட்டார். இது போல் கல்வியினை அனைத்து வயதினருக்கும் பொதுவுடமை ஆக்கி.

"பாடை ஏறினும் ஏடது கைவிடல்"

என்ற முது மொழிக்கமைய இதன் முக்கியத்துவம் யாவராலும் உணரப்பட்ட தொன்றாக காணப்பட்டது. இது போன்று தொல் காப்பியத்திலே "கல்வி தறு கண் இசைமை கொடையெனச்... தொல்காப்பியர் கூறுகின்றார். மனிதர்க்கு பெருமிதமளிப்பதில் வாழ்வியற் கல்வியும் ஒன்றாகும்.

பாடசாலைகளில் விழுமியக்கல்வி பெருமளவுக்கு புறக்கணிக்கப்பட்டிருந்தலுக்கு காரணம் ஆசிரியர் பலருக்கு அது பற்றிய உரிய விளக்கம் கிடைக்காமையாகும். எனினும் இன்றைய நவீன ஆசிரிய வாண்மை விருத்தி யில் விழுமியக்கல்வி புகுத்தப்பட்டமை வரவேற்கத்தக்கது.

எமது நாட்டில் மட்டுமல்ல அநேக நாடுகள் விழுமியக் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றன. கல் வியின் நோக்கங்களில் ஒன்று நடத்தைவிருத்தி. ஒழுக்காறு, நற்குண விருத்தியுடைய ஒரு நன்மகனை உருவாக்குவதாகும் அறிவின் ஆரம்பமே கடவுளுக்கு பயப்படுதல் ஆகும். தமிழ் மக்களை பொறுத்தவரையில் அவர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிய விழுமிய நூல் களில் ஒன்று திருக்குறளாகும். இதனைவிட ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை,நன்நெறி போன்ற நீதி நூல்களும் நம்மை வழிப்படுத்துவன இந்நூல்களின் நல்ல கருத்துக்களை பாராயணம் செய்துவைக்க மாணவ பருவமே சிறந்தது.

ஒருவரின் உடல், உள, ஒழுக்க, சமுக ஆளுமைவளர்ச்சியடையவிழுமியக்கல்வியை பாடசாலையிலே போதிக்கப்படவேண்டும். சமயம், மொழி, உடல்நலம், அழகியல் ஆகிய பாடங்களினூடாக விழுமியத்தை மாணவரிடையே வளர்த்தெடுக்க முடியும்.

சமுகத்தில் முக்கிய ஒரு நிறுவனமா கவும் சமுகத்துடன் தொடர்புடையதாகவும் பாடசாலை அமைகிறது. பல மட்ட மாணவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும் இடமே மாணவர்களிடையே நல்ல விழுமியங்கள் தூண்டப்பட்டு வளர்க்கப்பட ஏதுவாகின்றது. கலை, கலாசாரங்களை பேணிப்பாதுகாத்து வளர்ப்பதில் பாடசாலையின் பொறுப்பு அதிகம். இதற்கு ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். சமுகப்பிறழ்வுகள் நிகழ்கின்ற போதெல்லாம் ஆசிரியர்களே குற்றவாளிக்கூண்டில் நிற்கின்றார்கள். இதற்கு காரணம் விழுமியங்களை போதிக்கின்ற முழுப்பொறுப்பும் ஆசிரியர்களுடையதே என சமூகம் நினைப்பதாகும். விழுமியத்தை சொல்லிக் கொடுத்து பின்பற்றும் நிலையைவிட ஆசிரியர்கள் தாமே முன் மாதிரியாக நடந்து மாணவர்களை வழிப்படுத்த வேண்டும்.

ஆரம்ப வகுப்புக்களில் தாய் மொழி, சமயம், கவின்கலை, விளையாட்டு போன்ற பாடங்களினூடாக விழுமியத்தை புகுத்திக் கொள்ளலாம். இதற்காக பாடசாலையில் கல்வி நடவடிக்கை மேற்கொள்ளும்போது ஆசிரியர், மாணவர் என இருதரப்பினரும் ஆன்மீக வளர்ச்சிக்கான நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய பயிற்சிகளை மாணவரிடையே மேற்கொள்ள வேண்டும். பாடசாலையில் விழுமிய கல்வியினை கற்பிப்பதன் ஊடாக ஆன்மீக விருத்தி, மனிதப்பண்பாட்டு விருத்தி, மனித மேம்பாடு என்பவற்றுடன் சேர்ந்த இரசனை உணர்வு, தனி மனித ஆளுமையின் கூறுகளா முகபாவம், பேச்சுத்தொனி, உணர்வுபூர்வமான முறைகள், செயல்மூலம் உணர்தல், தோற்றப்பாடுகள் போன்றவையும் ஆக்கச்செயற்பாடான புதியன புனைதல் போன்றவையும் வளர வாய்ப்புண்டு.

அத்துடன் உடல்சார், அறிவுசார், ஆன்மீக ரீதியான திறன்களை வளர்த்தெடுக்கப்படுகிறது உடல்சார்திறன்களாக உடல்வலிமை பெறல், பேச்சு, பாட்டு, செயற்திறன், சொல்லாட்சி என்பனவும் அறிவுசார்திறன்களாக விமர்சனம், ஒப்பு நோக்கல், புத்தாக்கத்தில் ஈடுபடல், சரியான முடிவுகளை எடுத்தல், பிரச்சனைகளை தீர்த்தல் போன்றனவும், ஆன்மீக ரீதியான திறன்களாக அன்பு, பொறுமை, இரக்கம், பக்தி, சுய நம்பிக்கை போன்றனவும் வளர்த்தெடுக்கப்படுகிறது.

முன்னோரின் பண்பாட்டு விழுமியங்களை அழியவிடாது பாதுகாத்தல் இன்றுள்ளோரின் கடமையாகும். "பழமையின் தோள்களில் நின்று புதுமையை காணமுயல வேண்டும்".

பாடசாலையில் சமய விழுமியங்களை வளர்த்தல் இலகுவானதொன்றாகும். மாணவர்களிடையே ஆன்மீக சிந்தனையை வளர்த்து நன் நடத்தையுள்ள மாணவனாகவும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்து பெற்றவனாக வாழ்வதற்காக இங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் மூலம் சமய விழுமியங்களை மாணவரிடையே தெளிவுபடுத்தக்கூடிய வகையிலேதான் நாங்கள் பாடசாலையை பிரதானமாக கொண்டு சமய விழுமியத்தை கூற முனைந்துள்ளோம். இதன் மூலமே விழுமியம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். என்பது எம்போன்றோரின் அவா ஆகும்.

மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்.
நினைவு நல்லது வேண்டும்.
நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்.
கனவு மெய்ப்பட வேண்டும்.

-பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வளை ஓசை சிறப்புற வாழ்த்துகின்றோம்!"

கல்லாறு பேய்ப்பாறைப்பிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்



கடல் மீன் கொள்வனவு, விற்பனை ஏற்றுமதியுடன் கருவாடு பதனிடல் மற்றும் விற்பனைகள் இங்கு இடம்பெறுகின்றன.

வாஞ்சையுடன் வாழ்த்தும்!

தலைவர், செயலாளர்,
மற்றும் அங்கத்தவர்கள்,
கல்லாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளை ஓசை மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்"

எம்மிடம் சகலவிதமான பலசரக்கு சாமான்களையும் ஒரே கூரையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

ஆர்த்தி களஞ்சியம்

உரிமையாளர்: விசுவலிங்கம் அருளானந்தம்

புளியம்பொக்கணை சந்தி,
புளியம்பொக்கணை.

"வளை ஓசை நாதம் ஒலிக்கட்டும்!"

வேல் அழகன் அரிசி ஆலை

சகலவிதமான சிவப்பு நாடு, சிவப்புப் பச்சை அரிசிகளை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: ந. சுவேந்திரன் (சிவா)

077 96 54 201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பருவத்தே பயிர் செய்"

தே.ஸ்ரீபன் ரஞ்சித்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

"பருவத்தே பயிர் செய்" என்பது ஔவையாரின் முதுமொழியாகும். இம் முதுமொழியானது காலத்தால் அழியாது இன்றும் நிலைபெற்றுள்ளது. பருவத்தை தவறவிட்டவர்களின் அனுபவ மொழியாக, ஆலோசனை மொழியாக இது விளங்குகின்றது. இன்றைய இளைய சமுதாயம் நன்கு உணர்ந்து செயற்பட வேண்டிய முதுமொழியாக இது காணப்படுகின்றது. மனித குல வளர்ச்சிப்படிகளில் எல்லாம் ஔவையின் பொன்மொழியானது முக்கியத்துவம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஒரு நிமிடம் தாமதமாக புகையிரத நிலையம் சென்றதனால் புகையிரதத்தை தவறவிட்டவனுக்கு, ஒரு நிமிடத்தின் அருமை தெரியும் என்பார். ஒட்டப்பந்தையத்தில் இலக்கை இழந்தவனுக்கு, வினாடியின் அருமை தெரியும் என்பர். தாய்மை அடைந்த ஒரு தாய்க்கு, மாதத்தின் அருமை தெரியுமென்பர். அதே போல் பருவத்தை தவற விட்ட ஒரு விவசாயிக்கு, பருவத்தின் அருமை தெரியும். இவ்வாறே காலத்தை தவறவிட்ட மனிதனும் துன்பமடைகின்றான்.

மனிதபிறவிக்கு கடவுள்கொடுத்த வரையறுக்கப்பட்ட காலம் 24 மணித்தி யாலங்களே. அக்காலப்பகுதிக்குள்ளேயே வெற்றி,தோல்வி இரண்டையும் மனிதன் தீர்மானித்துக்கொள்கின்றான். பருவத்தே பயிர்செய்யாதவன், புதிய பலனை அடையமுடியாமல் வருந்தும் பல சந்தர்ப்பங்களையும் நாம் காண்கின்றோம். காலங்கள் போனால் திரும்பாது என்ற உண்மையை நம்மில் பலர் உணராமல் இருக்கின்றோம்.

பாடசாலை மாணவர்கள், பாடசாலைக் காலத்தில் உரிய கல்வியை பெறத்தவறிய பின், தமது பிந்திய பருவத்தில் துன்பமடைவதை நாம் காண்கின்றோம். உரியகாலத்தில் சரியான தீர்ப்பை வழங்காமல், காலம்தாழ்த்தி வழங்கப்படும் தீர்ப்பினால் நன்மை ஏதும் உண்டாகப்போவதில்லை. மனித வாழ்விலே திருமணம் என்பதும், உரிய பருவத்திலே செய்யப்பட்ட வேண்டியதொன்றாகும். என்பதை சுட்டிக்காட்டுவதற்காகவே "பருவத்தே பயிர் செய்" என்போர் பெரியோர்.

கல்வியறிவு பரவலாக்கப்படாத காலத்தில் திருமணத்திற்கு எவ்வித வரையறைகளும் வகுக்கப்படவில்லை. அதனால் குழந்தை திருமணம் பல்கிப் பெருகியது. இருப்பினும் கல்வியறிவு ஏற்பட்ட பின் திருமண வயது தீர்மா னிக்கப்பட்டது. பருவத்தே பயிர் செய்வதைப் போல திருமணமும் உரிய பருவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற வேண்டும். இன்றைய காலகட்டத்தில் பல்வேறுபட்ட காரணங்களால் திருமண வயது பிற்போடப்பட்டு வருகின்றது. இதனால் சந்ததி இடைவெளிக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியேற்படுகின்றது. பருவத்தே செய்வது பயிரை மட்டுமல்ல திருமணத்தையும்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நேரம் பொன்னானது. கடந்த நேரம் திரும்புவதுமில்லை. செலவு செய்த நேரத்தினை வாழ்நாளில் நாம் திரும்ப பெறமுடிவதும் இல்லை. எனவே. நேரத்தை வீண்விரையம் செய்யாது உரியவாறு முன்திட்டமிட்டு நேரத்தை சேமிக்க வேண்டும். உடல் ஆரோக்கியத்தை காக்கவும் மன ஆரோக்கியத்தை வளர்க்கவும் நேரத்தை பயனுள்ள வழியில் செலவு செய்வது. பருவத்தே பயிர்செய்வதைப் போன்றதாகும். இன்றைய இளைஞர் பலர் காலத்தின் அருமை புரியாமல் இளமைக்காலத்தை வீண் அடிக்கின்றார்கள். இளமைக்காலமானது மனித வாழ்விலே அடித்தளம் அமைக்கும் காலம் என்பதை உணராமல் இளைஞர்கள் தேவையற்ற பொழுதுபோக்குகளில் நேரத்தை வீணடிக்கின்றமையானது மன வேதனைக்குரிய விடயமாகும். இவ்வாறாக காலத்தை வீணடிக்கும் இளைஞர்கள். காலம் கடந்த பின் துன்பப்படவேண்டிய சூழ் நிலை ஏற்படும்.

விவசாயி ஒருவன் தனது காலத்தினை சரியாக புரிந்து கொண்டு பயிரிடவேண்டியது அவரின் கடமையாகும். போகம் தப்பிய பயிர்செய்கையால் விவசாயி உரிய பலனை அடைய முடியாமல் போகின்றான். எனவே மானிட வாழ்வில் கல்வி. விளையாட்டு, திருமணம் போன்ற வாழ்வியல் நிலைகளை அடைய " பருவத்தே பயிர் செய்" என அறிவுறுத்துவது காலத்தால் அழியாத அறிவுரையாகும். "கடந்தகாலம் திரும்பாது", "காலம் பொன்னானது" போன்ற பொன் மொழிகளும் நாம் காலத்தினை உரியவாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். என்பதனையே எடுத்துக்கூறுகின்றன. காலம் கடந்தபின் துன்பப்படுவதில் நன்மை ஏதும் உண்டாகப்போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைந்த என் பிஞ்சுக்கால் தடங்கள்

அ.ஸோஷினி
பழையகமம்,
முரசுமோட்டை.

காலங்கள் வேகமாய் கலைந்தோடி போயினவே
இந்தக்குளக்கரையில் நான் நடந்த
என் பிஞ்சுக்கால் தடங்களை.... தேடி
இன்று நான் மீண்டும் நடை பயில்கின்றேன்.
காலில் பரவசம்! நெஞ்சில் வலி!
அன்று கூவிய பறவைகளில்
ஒன்றையும் காணவில்லை!!
எந்த மழையில்? எந்தக் கோடையில்?
எங்கு சென்று மறைந்தனவோ???
வைக்கோல் வீடுகளும்,
ஓலைக்குடிசைகளும்,
சாம்பல் மேடாகி
சமாதியாயிற்று!
தத்தி ஓடும் தவளைகளும்
வாய்க்கால் வழி ஓரம்
குந்தி இருக்குமோ? அன்றி கூவிக்குடல்
வெடித்து மாண்டிற்றோ?
ஆங்கில எழுத்தின் கடைசி எழுத்தைப்போல
வளைந்து நாற்று நடும் பெண்கள்.....
பூமியின் முகத்தில் காலத்தின் கீறல்களாய்.....
எல்லாம் மறைத்தோய்ந்தன
ஆனாலும்,
நம்பிக்கையோடு தேடுகின்றேன்.
குளக்கரையில் தொலைந்த - என்
பிஞ்சுகால் தடங்களை....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீரில் நனையுமா? கல்லாறு!...

கோ.சேகர்,
உழவனூர்,
புன்னைநீராவி.

கல்லும் கனியாகும் என்றொரு பாடலை கேட்டிருக்கின்றேன். கல் எவ்வாறு கனியாகுமோ தெரியவில்லை. கற்பனையில் கனி சாப்பிடுபவர்களுக்கு கல்லும் கனியாகும்.

ஏனோ புரியவில்லை. "கல்லாறு" என்று நம் கிராமத்திற்கு பெயர் வைத்தமை. ஆறும் இல்லை. கல்லும் இல்லை. ஆனால், அவ்விடத்திற்கு "கல்லாறு" என்று பெயர் வைத்துள்ளார்கள். கல் இருப்பின் அதனை உடைத்து விற்று உழைக்கலாம். ஆறு இருந்தால் விவசாயம் செய்து பிழைக்கலாம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அது நல்லோராவதும், தீயோராவதும்
அன்னை வளர்ப்பினிலே"

என்ற வாக்கிற்கமைய சில குடியேற்றத் திட்டங்கள் நல்ல நோக்கத்திற்காக அதாவது காணியற்றவர்களுக்கு காணி வழங்கல், இடப்பெயர்வின் வலிகளைக் குறைப்பதற்கு என பல்வேறு நன் நோக்கங்களுக்காக குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கல்லாறு உண்மையில் நன் நோக்கங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கலாம். 1995ல் யாழ். இடப்பெயர்வு, அந்த மக்கள் தற்காலிகமாக வசித்த பரந்தன் முரசுமோட்டை பகுதிகளில் 1996இல் இடப் பெயர்வால் ஏற்பட்ட துன்ப துயரங்களில், அந்நாட்களில் மாவட்ட அரச அதிதியாக கடமை ஆற்றிய மதிப்பிற்குரிய தில்லை நடராசா அவர்களின் தலைமையில் 1996ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கல்லாறு எனும் பகுதியில் தற்காலிக குடிசை அமைத்து குடியேற்றப்பட்டனர். யானைக் காடு என்று தான் கூற வேண்டும். ஆயினும் உண்மை என்னவென்றால் அக்காடுகள் மத்திய வகுப்பினருக்கு வழங்கப்பட்ட காணிகளாகும். அவ் வகுப்பினர் கைவிட்டு சென்ற பின்னர் வளர்ந்தவைகள் தான் காடுகளாயின. அன்று அரச அதிபர் கூறிய வார்த்தைகள் இன்றும் என் நினைவில் உள்ளது.

"எலிவளையானாலும் தனி வளை வேண்டும்"

என்ற நோக்கில், காணிகளும் வீடுகளும் உங்களுக்கு தரப்படுகின்றது. நீங்கள் சட்டிபானை கழுவும் நீரில் ஓர் வாழையை நடுவீர்கள். ஓர் மரவள்ளியை நடுவீர்கள். இப்படியாக கூறி அம்மக்களை குடியேற்றினார்.

மக்களுக்கு குடிதண்ணீருகளுக்கு குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. அத்தனையும் உவர் நீராய்க் கொட்டியது. மருத்துவ வசதி இல்லை. யானைகளின் தொல்லை. மிகவும் கொடிய மலேரியா நோய் குடியேறிய மக்களில் கணிசமானோர் இறந்திருக்க வாய்பிருந்தது. ஆயினும் அக்கட்டங்களைத் தாண்டி யாழ் சென்று விட்ட மக்கள் தப்பினர். இப்படியாக ஓரளவு கல்லாறை மறந்து விட்ட நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"2004 ஆண்டு சுனாமிப் பேரலை" கல்லாற்றை மீண்டும் நினைவுபடுத்தியது. சுண்டிக்குளம் பகுதியில் கடற்றொழில் செய்தவர்களுக்காகவும் 1995இல் குடியேறிய சில குடும்பங்களுக்காகவும் பாதுகாப்பான இடமாக கருதப்பட்டு பாரிய கனகர வாகனங்கள் மூலம் காணிகள் துப்பரவு செய்யப்பட்டு, 1/2 ஏக்கர் காணியும் ஒரு கல் வீடும் கட்டி 2005இல் 'கல்லாறு சுனாமி வீட்டுத் திட்டம்' நவீன பாடசாலை, சுகாதார நிலையம், விளையாட்டு மைதானம், சங்கக்கடை, சந்தை, மீனவர்சங்க கட்டிடம், பொதுமண்டபம் என பாரிய திட்டம் தீட்டி கோலாகலமாக உருவாக்கப்பட்டது.

"சுகம் வரும் ஆள்தப்பாது" என்று சொல் வார்கள். அது போலத்தான் குடிப்பதற்கு தண்ணீர் வசதியில்லை அப்பகுதியில். நன்னீரோ இல்லை. "பவுசர்" மூலம் எத்தனை நாளைக்கு கொடுப்பது? எவ்வளவு காலத்திற்கு கொடுப்பது? பிரமந்தனாறு குளத்தடியில் இருந்து நாளாந்தம் வவுசர் மூலம் குடிநீர் வழங்கல் நடைபெற்றது. "பவுசர் தண்ணீர்" நம்பி வாழும் துர்ப்பாக்கிய சாலிகளாக மக்கள்.

நவீன திட்டங்களை தீட்டிய மேதாவிகள் நிரந்தரமான ஓர் தண்ணீர் திட்டத்தை கொண்டு வரவில்லை என்பதே வேதனை.

2010 இல் மீண்டும் புதிதாக 100 வீடுகள் கட்டுவதற்கு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட போதும் வீடுகள் கட்டி அதில் குடியிருக்க மக்கள் விரும்புகிறார்கள் இல்லை. காரணம், தண்ணி இல்லை. இதனை விட புதிய புதிய முகங்கள், சண்டை, சச்சரவு, சமூக பிறழ்வு நிகழ்வுகள், சட்டவிரோத மதுபானம். இன்னும் இன்னும் முடிச்சவுக்க. இன்னோர் முடிச்சாக சிக்கி தவிக்கின்றது கல் ஆறு.

கல்லாறு என்றால் கிளிநொச்சி வரை தெரியும். அங்கு தொல்லைகள் அதிகம் ஏன்? இந்த மக்கள் இந்த நிலையில் வாழவா ஆசைப்படுகிறார்கள்? இல்லை, அவர்களும் நவீன உலகத்திற்கு ஏற்ற வகையில் வாழவே ஆசைப்படுகின்றார்கள். ஆயினும் குடி தண்ணீரில் தொடங்கும் பிரச்சனை குடி தண்ணீர்? பிரச்சனையாகவும் பரிணமித்து விட்டது

அவர்களுக்கு அடிப்படைப் பிரச்சனைகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை வழங்கினால் அவர்களும், அவர்களது நாளைய சந்ததியும் உலகம் போற்றும் உத்தமர்களாக வாழுவார்கள் என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வாக, பிரமந்தனாறு அல்லது கல்மடு குளத்தில் இலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை குழாய் மூலம் வழங்கலாம். "யாழ்ப்பாணத்திற்கு இரணைமடுவிலிருந்து தண்ணீர் போகத்திட்டம் உண்டு. என்றால், கல்லாறுக்கு பிரமந்தனாறுத் தண்ணீரோ கல்மடுக்குளத் தண்ணீரோ வரமுடியாது என்று இல்லை." தானே!

அங்கு நடக்கும் சமூகபிறழ்வு நிகழ்வுகளுக்கு தீர்வாக சில வருடங்களுக்காயினும் "பொலிஸ் காவல் நிலையம்" ஒன்றை உருவாக்க வேண்டும். இதன் மூலம் அப்பிரதேசத்தில் நடக்கும் குற்றங்களைக் குறைக்க முடியும். தண்ணீர் பிரச்சினை முடிவுக்கு வருமேயானால் அம்மக்கள் தங்கள் காணியில் பயிர்களை நட்டு தங்கள் வாழ்வாதாரங்களை வளர்த்து கொள்வார்கள்.

எனவே, கல்லும் இல்லா ஆறும் இல்லா கல்லாறு நல்லாறாய் ஓடுவதற்கு. எம்மக்களுக்கு பாலாறாய் நீராறு ஓடுவது எப்போது? அப்போது இம்மக்களின் மனங்களும் தேனாறாய் இனிக்கும் அன்றோ!. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலைகளில் ஓங்கி விளங்கட்டும் கண்டாவளை"

குணா உணவகம்

இல:2 சந்தை உட்புறம், பரந்தன்.

தொ.பே. இல. : 077 26 39 041





"கலாசார விழா சிறப்படைய சிறப்பாக வாழ்த்துகின்றோம்"

St.Anthony's Supply Centre

No:144/02 Mullai Rd, paranthan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கலைஒளி " விருது பெறும் சான்றோர்கள்



(கலைப்பணி)

திரு.கா.முருகேசு (வல்லிபுரம் ஐயா)

ஆவரஞ்சாட்டி, கண்டாவளை.



(சமயப்பணி)

திரு.கா.நித்தியானந்தன்

சேத்துக்கண்டி, முரசுமோட்டை.



(பொதுப்பணி)

திரு.க.மாணிக்கராசா

"C", பகுதி கிராம விஸ்தரிப்பு திட்டம்,
பெரியகுளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளை ஓசை மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்"



நாகம்

அரிசி ஆலை

உரிமையாளர்: பொ. கணநாதன்

புளியம்பொக்கணைச்சந்தி,
புளியம்பொக்கணை.

"வளை ஓசை நாதம் ஒலிக்கட்டும்!"

சங்கமன்



போன் சொப்

075 49 92 241

பரந்தன் சந்தி, பரந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வளை ஓசை மலர் சிறப்புற வாழ்த்துகிறோம்"

புதிய
கண்ணகை அம்மன்
அரிசி ஆலை



L.R.M
கட்டட ஒப்பந்தகாரர்

உரிமையாளர்: ம. லம்போதரன்
கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை.



"வளை ஓசை"
மலர் அழகுற
வெளிவருவதற்கும்,
கலாசார விழா சிறப்புறவும்
அனுசரணை வழங்கிய
அனைவருக்கும்
எமது மனமார்ந்த
நன்றிகள்"

பிரதேச கலாசார பேரவை.
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சேமிப்பு வங்கியின்

பல்வகை சேமிப்புக் கணக்குகளும்

அதன் மூலம் உங்களுக்கு கிடைக்கும்

அனுகூலங்களும்

சேமிப்பிற்கான அதியுயர் வட்டியைப் பெற்றுத் தரும் "Happ Savings"

சிறுவர் சிறுமியருக்கு ஹப்பன், புஞ்சி ஹப்பன் கணக்குகள்

இளைஞர் யுவதிகளுக்கு **"இந்துறு மித்துறு கணக்குகள்"**

பெண்களுக்கு விசேடமான **"ஸ்திரி"** கணக்கு

வாகனக் கொள்வனவிற்காக Auto Loan வசதி

எதிர்காலம் வளம் பெற நிரந்தர வருமானம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள "Friends" கணக்கு

"உங்கள் வைப்புத் தொகைக்கு பூரண அரச உத்தரவாதம்"

அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்கு **"ரண்மசு"** NRFC / RFC சேமிப்பு நிரந்தர வைப்புகள்

உரிய வட்டியை வழங்கும் நிலையான வைப்புக்கள். (3 மாதம், 6மாதம், 12 மாதம்,24 மாதம்)

24 மணி நேரமும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள மேற்கொள்ள வசதிகள்

உழைக்கும் போதே நன்மைகளைப் பெற SESA கணக்குகள்

நீர், மின்சாரம், தொலைபேசி பட்டியல்களைச் செலுத்தக்கூடிய வசதிகள்

NSB தொடர்பான எந்தவொரு தகவல்களையும் பெற்றுக்கொள்ள வெப்தளம் www.nsb.lk

60வயதிற்கு மேற்பட்ட சிரேஸ்ட பிரஜைகளுக்கு உரிய வட்டியை வழங்கும் வைப்புக்கள்

"நஷனல்" சேமிப்புச் சான்றிதழ்
"ரிதிரேகா" சேமிப்புச் சான்றிதழ்

குறைந்த வட்டியில் "ரண்சஹன" அடகு சேவை

ஓய்வு பெறும் வேளையில் சேமிப்பாக அமையும் Pension+ கணக்கு

உங்கள் வசதிக்காக NSB call centre 2379379
உங்கள் வசதிக்காக NSB call centre 2379379

சொந்த வீடோன்றை உங்கள் வசமாக்க பலவிதமான வீட்டுக் கடன் வசதிகள்

வைப்பின் மீதான 90% கடனைப் பெற்று கொள்ள Speed Loan

ATM வசதியுடன் பொருட்களை கொள்வனவு செய்ய Shopping Card வசதி

3 வருட 5 வருட நீண்டகால நிலையான வைப்புக்களான "NSB Tripple A Fixed"

NSB
National Savings Bank

தேசிய சேமிப்பு வங்கி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

கரைச்சி உதுர் பிரிவு ஸேவா ஸமுகாரம் ஸமிதிய (ஸி/ஸ)

KARACHCHI NORTH MULTI - PURPOSE CO-OPERATIVE SOCIETY LTD.

பரந்தன் பரன்தன் PARANTHAN Regd No:Pa/47 of 10.02.1971 T.P. 0214923437 Fax: 0212280037 e.mail: karachchinorthmpcs@gmail.com



01. முகவர் சேவை
02. வங்கிச் சேவை
03. மொத்த விற்பனை நிலையம்
04. உணவகம்
05. எரிபொருள் நிலையம்
06. வெதுப்பகம்
07. பார ஊர்திகள் சேவை
08. அரிசி ஆலை
09. சமூக சேவை



கிராமிய வங்கி



வெதுப்பகம் BAKERY







வெதுப்பக திறப்பு விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
NISA Arts 077 38 49 608
www.nisaart.com